வாரப் பதிப்பு விலை சதம் 25

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்

SUTANTIRAN

194 A, BANDARANAIKE STREET, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.




புத்தகம் 17 | திருவள்ளுவர் ஆண்டு 1994 சித்திரை திங்கள் 7-ம் நாள் (19—4—1964) ஞாயிற்றுக்கிழமை துல்ஹஜ் 6 | இதழ் 47

# மே 1-ல் கூட்டரசு பதவியேற்பு?

## இரு மந்திரிகள் வெளியேறுவர்

இடதுசாரி ஐக்கிய முன்னணியுடன் ஆளும் கட்சி சேர்ந்து அமைக்கும் கூட்டு அரசாங்கம் மேதினத்தன்று பதவி ஏற்கும் என்று தெரியவக்கிறது. புதிய அரசாங்கத்தில் திரு. சி. பி. டி. சில்வா, திரு. மைத்திரிபால சேனநாயக்கா ஆகிய இருவரும் பதவிவகிக்க மாட்டார்களென்றும் அறியப்படுகிறது.

கூட்டு அரசாங்கம் ஏற்பட்டால் பிரஸ்தாப இரு மந்திரிகள் உட்பட சுமார் 15 அரசாங்க எம். பிக்கள் சுதந்திரக் கட்சியிலிருந்து வெளியேறி விடுவார்களென்று சுதந்திரக் கட்சி வட்டாரங்கள் கூறின. கூட்டு அரசாங்கத்தில் சேரும் இரு கட்சியினரும் அடுத்த தேர்தலில் கூட்டாகவே போட்டியிடுவார்களாம்.

இடதுசாரி முன்னணி சுதந்திரக் கட்சியுடன் சேர்ந்து கூட்டு அரசாங்கம் அமைப்பதற்கான இறுதிப் பேச்சு வார்த்தைகள் இருதரப்பினரிடையே இவ்வாரம் ஆரம்பமாவதாக கூறப்படுகிறது. இக் கூட்டு அரசாங்கம் மேதினத்தன்று பதவி ஏற்கும் என்றும் அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

### பிரதமரின் உறுதி

கூட்டு அரசாங்கம் ஏற்படுவது அநேகமாக நிச்சயமென்றும், இம்மாத இறுதிக்குள் அதற்கான முடிவுகள் செய்யப்பட்டு விடுமென்றும், இடதுசாரிகளுடன் சேர்ந்து கூட்டு அரசாங்கம் நிறுவவேண்டுமென்ற தமது முடிவை எக் காரணத்தை முன்னிட்டும் மாற்றுவதில்லையென்று திருமதி சிறிமா பண்டாரநாயக்கா தீர்மானித்திருப்பதாகவும் அறியப்படுகிறது.

காணி அபிவிருத்தி அமைச்சர் திரு. சி பி டி. சில்வா, வர்த்தக கைத்தொழில் அமைச்சர் திரு. மைத்ரிபால சேனநாயக்கா ஆகிய இருவரும் புதிய கூட்டு மந்திரி சபையில் சேர்த்துக் கொள்வதா என்ற பிரச்சினை சம்பந்தமாக இடதுசாரித் தலைவர்களுடன் பிரதமர் விவாதிப்பாரென்றும் இவ்விருவரும் கூட்டு மந்திரி சபையில் இடம் பெறுவதை இடதுசாரிகள் எதிர்ப்பதே பிரதமர் இது பற்றி விவாதிக்க முன்வரக் காரணமென்றும் விஷயம் தெரிந்த வட்டாரங்களில் பேசப்படுகிறது.

இடதுசாரிகளுடன் கூட்டுச் சேர்ந்து நடத்தும் கூட்டு அரசாங்கத்துடன் கூட்டுச் சேர, தான் தயாரில்லை என்று திரு சி. பி. டி. சில்வா பிரதமருக்கு ஏற்கனவே தெரிவித்துள்ளாரென்று தெரிகிறது.

திரு. மைத்ரிபால சேனநாயக்கா வெளி நாடொன்றில் இலங்கைத் தூதராக நியமிக்கப்படலாமென்று ஒரு வதந்தி அடிபடுகிறது.

### 15 எம். பி. க்கள் வெளியேறுவர்

கூட்டு அரசாங்கம் ஏற்பட்டால், திரு. சி. பி. டி. சில்வா, திரு. மைத்ரிபால சேனநாயக்கா உட்பட சுமார் 15 எம். பி. கள் சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து விலகி விடுவார்களென்று கட்சி

(9-ம் பக்கம் பார்க்க)

## தவறான செய்தி!

தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த இரு பாராளுமன்ற உறுப்பினர்களைக் கட்சியிலிருந்து வெளியேற்ற கட்சித் தலைமைப் பீடத்தின் ஒரு பகுதியினர் முயற்சித்து வருவதாக பத்திரிகைகளில் வெளியான செய்தி உண்மைக்குப் புறம்பானதென தமிழரசுத் தந்தை திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் நமது நிருபரிடம் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறும் போது, 'தமிழரசு வாலிப முன்னணி, இரு பாராளுமன்ற உறுப்பினர்களை கட்சியிலிருந்து வெளியேற்ற வேண்டுமென்று தீர்மானம் கொண்டு வந்திருப்பதாக அறிகிறேன். ஆனால் அத்தகைய தீர்மானம் எதுவும் இது வரை கட்சித் தலைமைப் பீடத்துக்கு அனுப்பிவைக்கப்படவில்லை. ஆகவே மன்னாரில் நடைபெறவுள்ள செயற்குழுக் கூட்ட நிகழ்ச்சி நிரலில் அத்தீர்மானம் இது வரை சேர்க்கப்படவில்லை.

## இ. ஐ. மு. வை சேர்க்க தூதராலயம் முயற்சி

இடதுசாரி—சுதந்திரக் கட்சி கூட்டு அரசாங்கம் அமைப்பதற்கான ஏற்பாடுகளுக்கு ஒரு வெளி நாட்டுத் தூதராலயம் ஆக்கமும் ஊக்கமுமளித்து தீவிர நடவடிக்கை எடுத்து வருவதாக கூறப்படுகிறது.

சமசமாஜக் கட்சியினுள் என். எம். பெரேரா கோஷ்டிக்கும் புரட்சிக் கோஷ்டிக்குமிடையே பலத்த மோதுதல் ஏற்பட்டுள்ளதென்றும், அரசாங்கத்தில் சேருவதென என். எம். பெரேரா இறுதியாகத் தீர்மானித்து விட்டதால் கட்சியில் பிளவு ஏற்படுவது தவிர்க்க முடியாதென்றும் கூறப்படுகிறது.

இடதுசாரிகளுக்கு மந்திரி சபையில் 4 ஸ்தானங்கள் மட்டும் கொடுக்கவே சுதந்திரக் கட்சியினர் சம்மதித்துள்ளனரென்றும், மந்திரி சபையில் இன்னும் அதிகமாக ஸ்தானங்கள் கிடைத்தால் அரசாங்கத்தில் சேரலாமென்று நடுவாந்தரக் கோஷ்டியான திரு. லெஸ்லி குணவர்தன, டாக்டர் கொல்வின் ஆர் டி சில்வா, திரு பேர்னட் சொயிஸா ஆகியோர் கூறுவதாகவும் அறியப்படுகிறது.

சமசமாஜக் கட்சி உறுப்பினர் மகாநாடொன்றை இம்மாதக் கடைசியில் நடத்த என். எம். பெரேரா கருத்தை ஆதரிப்பதால், மகாநாட்டில் அவர் கோஷ்டி வெற்றி பெறுமென்றும் அதன் விளைவாக திரு. எட்மன் சமரக்கொடி கோஷ்டி பிளவுபட்டு, "இடதுசாரிகள் சேர்ந்தாலும் கூட்டு அரசாங்கம் ஒரு முதலாளித்துவ அரசாங்கமே. அதனை மக்கள் நம்பக் கூடாது" என்று அறிக்கை விடுவார்களென்றும் கூறப்படுகிறது.

## மேதின ஏற்பாடுகள்

மொழி வழித் தொழிற் சங்கங்களின் மேதின ஏற்பாட்டின் முதல் கட்டம் பூர்த்தியாகி விட்டது என்று எழுதுவினைஞர் சங்க முக்கிய பிரமுகர் ஒருவர் நமது நிருபரிடம் கூறியுள்ளார்.

சகல மொழிவழித் தொழிற் சங்கங்களும் ஒன்றுபட்டு யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய இடங்களில் மேதினத்திற்கு விழா எடுக்கும். தொழிற் சங்கங்களுடன் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் உள்ள கலாச்சார இயக்கங்களும் இவ் விழாவில் கலந்துகொள்ளுமாம்.

அகில இலங்கைத் தமிழ் எழுத்தாளர் சங்கம், மட்டக்களப்பு தமிழ் எழுத்தாளர் சங்கம், தமிழ் எழுத்தாளர் மன்ற ஆகிய கலாச்சார இயக்கங்களுடன் மாவைவர் மன்றம், இளம் தமிழர் இயக்கம் ஆகிய இளைஞர் இயக்கங்களும் இவ் விழாவில் மொழி வழித் தொழிற் சங்கங்களுடன் கலந்து கொள்ளுமாம்.

யாழ்ப்பாணத்தில் பெரியதொரு ஊர்வலம் நடாத்தவும் தீர்மானித்துள்ளார்கள். இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஆதரவு பெற்ற தனியார்துறைத் தொழிற் சங்கங்களும் இவ்விழாவில் கலந்துகொள்ளும். தமிழரசுக் கட்சித் தொழிற் சங்கப் பாராளுமன்ற உறுப்பினர்களும் இம் மேதின விழாவில் கலந்து உரை நிகழ்த்துவார்களாம்.

இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் மேதின விழா அட்டன்டன்பார்மைதானத்தில் டாக்டர் இ. மு. வி. நாகநாதன் தலைமையில் நடைபெறும். திருவாளர்கள் செ. இராசதுரை பா. உ., க. துரைரத்தினம் பா. உ. ஆகியோர் இவ்விழாவில் கலந்து உரை நிகழ்த்துவார்கள். கூட்டத்திற்கு முன்னர் மாபெரும் ஊர்வலம் ஒன்றும் நடைபெறும். இவ்விபரங்களை கழகப் பொருளாளர் திரு. க. சிவானந்த சுந்தரம் நமது நிருபரிடம் கூறினர்.

உள்ளே ..........

இக்பால் மலர்

(5 ம் பக்கம்)

## வம்சாவளி பிரஜைகள் வாக்குரிமை இழந்தனர்

### மலைநாட்டுத் தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் இன்னல்

இலங்கை வம்சாவளிப் பிரஜைகளான மலை நாட்டுத் தமிழர்களில் பெரும்பாலோருக்கு அடுத்து வரும் கிராமக்கமிட்டித் தேர்தல், பட்டின, நகர சபைத் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல் ஆகியவற்றில் வாக்களிக்க முடியாத இக்கட்டான நிலைமை தோன்றியுள்ளது.

இதற்குக் காரணம் அவர்கள் இலங்கை வம்சாவளிப் பிரஜைகளாயிருந்தும் தமிழ்ப் பெயர்களைக் கொண்டவர்களாதலின் அவர்களின் பெயர்கள் வாக்காளர் இடாப்புகளிலிருந்து அண்மையில் நீக்கப்பட்டு விட்டதுதான்.

இலங்கைப் பிரஜைகளான மலையகத் தமிழர்களின் வாக்குரிமையை அபகரிப்பதற்குத் திட்டமிட்டு செய்யப்பட்ட சதியே இது என்று கூறப்படுகிறது.

"மலை நாட்டுத் தமிழர்கள்" என்ற "சித்தாந்தத்தின்" அடிப்படையில் அவர்களின் பெயர்கள் இடாப்பிலிருந்து அகற்றப்பட்டன என்றும், ஒரு வகுப்புவாத சிங்கள ஸ்தாபனமே தமிழர்களின் வாக்குரிமையைப் பறிப்பதற்கான ஏற்பாடுகளை அதிகாரிகள் மூலம் செய்துள்ளதென்றும் நம்பப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணத்தில் எழுந்தவற்றை எழுத்தில் வடிக்கிறேன்

## எப்படி எழுத ஆரம்பித்தேன்

இலங்கைப் பல்கலைக் கழகப் பட்டதாரி. இந்தியத் தூதரகத்தில் கடமையாற்றுகிறார். சிறு கதைத் துறையில் சில புதுமைகளைப் புகுத்தித் தனிவழி கண்டவர். 'கடவுளரும் மனிதரும்' என்னும் சிறு கதைத் தொகுப்பின் ஆசிரியை. 'மனதில் எழும் எண்ணங்களையே எழுத்தில் வடிக்கிறேன்' என்று கூறுகிறார்.

ஏப்படி எழுத ஆரம்பித்தேன்? நான் எழுதி வந்துள்ள இந்தச் சிலவருட காலத்தில் இதைப்பற்றி நான் இதுவரை சிந்தித்துப் பார்த்ததில்லை. ஆனால் இப்போது இந்தக் கேள்வி என்னைச் சிந்திக்க வைக்கிறது. இச் சிந்தனையில் எழும் எண்ணங்களை இங்கு தருகிறேன்.

### இரு விதம்

உலகில் கிட்டத்தட்ட எல்லா மனிதரும் பிரசித்தி பெற்று விளங்க, உலகில் தமது முத்திரையைப்பதிக்க தம்மை நிர்ணயித்துக்கொள்ளப் பெரிதும் விழைகின்றனர். உலகில் மனிதர்கள், ஒன்று, பிரசித்தி பெற்றவர்களாய், முக்கியத்துவம் வாய்ந்தவர்களாய் விளங்குகின்றனர்; அல்லது வெறும் மனிதர்களாய் இயங்குகின்றனர். இதில் பெரும்பான்மையானவர்கள் வெறும் மனிதர்களாய் வாழ்வதே அவர்களின் வாழ்க்கைப் பெருந்துன்பம் ஆகின்றது.

தம்மை நிர்ணயித்துக் கொள்வதில் வெற்றி கண்டவருள் ஒருபக்கத்தில் உலகக் கலைஞரையும் சிந்தனையாளரையும் மறுபக்கத்தில் குற்றவாளிகள், கொலைகாரர், பயங்கரவாதிகள்போன்றோரையும்காணலாம். இவர்களைவிட ஏனையவர்கள், ஒருவேளை தமது நெருங்கிய சூழலில் தவிர, நிழல் உருவங்களாக வாழ்கின்றனர். வலுவும் கனமும் அற்ற இவர்கள் தமதுமுத்திரையை உலகில் பதிக்க, தம்மை நிர்ணயித்துக்கொள்ளச் சக்தியற்றவர்கள்.

### தன் நிலை அறிவு

பிரான்ஸில் யோன்-போல் ஸாட் (Jean-Paul Sartre) முதல் இங்கிலாந்தில் கொலின் வில்சன் (Colin Wilson) வரையுமுள்ள எல்லா இருப்புவாதச் சிந்தனையாளரும் உலகெங்குமுள்ள இசைந்தொழுகாக் கொள்கையினரும் ஒழுங்குகுலைப்போரும் மனிதனின் அதிமுக்கிய வாழ்க்கை நோக்கம் சுய நிர்ணயமே எனக் கருதுகின்றனர். உண்மையில் இக்கருத்தில் புதுமை எதுவும் இல்லையென்றே கூறலாம். ஏனெனில் நாம் நன்கறிந்த தன்னையறிதல்என்னும் கருத்தே இப்படி வேறுவிதமாக, முன் கூட்டியே முடிவு செய்யப்பட்ட ஆசார உணர்ச்சிகளும் வெறுப்புகளும் அற்ற வகையில் கூறப்பட்டுள்ளது.

### பின்னணி

ஏ வேண்டுமென்றே ஏதோவொரு நோக்கோடு நான் எழுதுவதில்லையெனினும், எனது எழுத்துக்களையும் சுய நிர்ணயம் எனக் கூறலாம். ஆத்மா என்னும் பிண்டத்தில் அண்டத்தின் முழு உண்மையும் சாரமும் அடங்கியிருத்தலால் இம்முழு உண்மையையும் புரிந்துகொள்ளச் செய்யப்படும் முயற்சியே சுய நிர்ணயம் ஆகின்றது. இன்று எனதுஎழுத்துக்களை இவ்வாறு ஒருவேளை வருணிக்கலாம்.

இதுநிற்க—நான் எவ்வாறு எழுதத் தொடங்கினேன்? நிச்சயமாக இது நான் முன் கூட்டியே திட்டமிட்டுச் செய்தவொன்றல்ல. எழுத்துத் தொழில்தான் சிறந்த தொழில் என நான் நின்று

**பவானி ஆழ்வாப்பிள்ளை**

சிந்தித்து முடிவுசெய்து பின் எழுத்தாளர்ஆவதற்கு நான் முழுமூச்சோடு முற்படவில்லை.

எனது குழந்தைப் பருவ முதலே எழுத்தாளரிடத்து நான் பெருமதிப்பும் பயபக்தியும் கொண்டிருந்தேன். என்னைப் பொறுத்தவரை ஒரு புத்தகத்தைஎழுதுவதே மிகப் பெரிய சாதனையாகத் தோன்றியது. எனக்கோ ஒரே புத்தகப் பைத்தியம்; பெருவாரியாக வாசிப்பேன். அந்தப் புத்தகங்கள் காட்டிய உலகம்—அற்புத, அதிசய உலகம்! ஆனால் நானும் எழுத வேண்டுமென்று நான் பெரிதாக என்றும் நினைத்துப் பார்த்ததில்லை. அப்படி என்ருவது நான் நினைத்திருந்தால் அதை என் குழந்தைப் பருவக் கனவுகளில் ஒன்றெனவே கூறவேண்டும். ஆனால் அந்தக் கனவும் நாட்செல்ல நான் மறந்துவிட்டதொரு கனவு. இருந்தும் எனது கருத்துக்களை, எண்ணங்களை, சிந்தனையை வெளியிட வேண்டுமென்ற ஒரு தூண்டுதலும் விழைவும் என்றுமே தொடர்ந்தது...

### முதல் ஓவியம் பிறந்தது

பின் ஒரு நாள்—மற்றுமொரு சாதாரண நாளன்றுதான், நடக்கவிருப்பதைப் பற்றி எனக்கு எவ்வித எச்சரிக்கையும் இல்லாதபோது திடீரென, எதிர்பாராத விதத்தில் ஒரு எண்ணம், ஒரு சித்திரம், மனிதர்கள்——வாழும், பேசும் மனிதர்கள்—என்மனதில் தோன்றி நிறைந்தனர். நான் நின்று நினைக்கவில்லை. கற்றைத் தாளையும் பேனாவையும் எடுத்துக்கொண்டு எழுத உட்கார்ந்ததுதான் தெரியும்! கதை எழுதி முடியும் வரையும் நான் நிறுத்தவில்லை. அந்தமுதல்கதையை எழுதிய அதேவேகத்தில் இன்னொரு கதையை நான் இதுவரை எழுதவில்லை. அதோடு அந்தக் கதையில் ஒரு சொல்லையாவது நான் திருத்தி எழுதவேண்டியிருக்கவில்லை. அக்கதையைஎழுதி முடித்து வாசித்துப் பார்த்ததும் நான் ஒரே வியப்பிலாழ்ந்து விட்டேன். நான் ஒரு கதை—ஒரு கதை—எழுதியிருந்தேன்!

### அடக்கம்

...அக்கதையைப் பிரசுரத்திற்கு அனுப்பி விட்டுக் கதை ஏற்றுக்கொள்ளப் படாவிட்டால் இனி என்றுமே எழுதுவதில்லை என்று என்னுள் நினைத்துக் கொண்டேன். ஆனால் அக் கதை உடனடியாகவே பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டது. அன்று முதல் இன்று வரை நான் ஓரளவு தூரம் வந்து விட்டேன். சிருஷ்டிப்பதற்கு, ஒரு படைப்பினை வடித்து உருவாக்குவதற்கு ஒரு கலைஞனுக்குள்ள அடக்க முடியாத தூண்டுதலும்தான் என்னை எழுதத் தொடங்க உந்தியிருக்கவேண்டும். தான் சொல்ல வேண்டியவைகள் ஏதாவது இருப்பதாக ஒருவர் கருதினால், அவை மக்களுக்குப் பிடித்தாலும் சரி பிடிக்கவிட்டாலுஞ்சரி அவற்றை அவர் சொல்லியே தீரவேண்டும்.

சொல்லப்படும் சமயத்தில் பெரும்பாலும் அவை மக்களுக்குப் பிடிப்பதில்லைத் தான். ஆயினும் காலஞ்செல்ல முன்பு சொல்லப்பட்டவற்றை அவர்கள் விரும்பத்தான் செய்கின்றனர். அப்படி நேரும்போது

(15-ம் பக்கம் பார்க்க)

## ஔவை சிலை பரிசு

புதுடில்லியில் சாணக்கிய புரியில் இருக்கும் அமெரிக்க சர்வதேசப் பாடசாலைக்கு அண்மையில் புதுவகைப் பரிசு ஒன்று கிடைத்தது. பரிசு வழங்கியவர் பாடசாலையைப் பாராட்டும் ஒரு இந்தியர். பரிசுப் பொருள் ஔவைச் சிலை. தமிழ் பாட்டியின் சிலையை வடித்து தந்தவர் திருமதி சுந்தரி சுவாமிநாதன்.

"சிலை வடிவில் இப்பாடசாலைக்கு வந்திருக்கும் முதலாவது கலைப் பொருள் இதுதான்" என்று இந்தியாவிலிருக்கும் அமெரிக்க அரசாங்க உதவி நிலையக் குழுவின் டைரக்டர் ஸி. டைலர் வூட் பாடசாலையில் சிலையைத் திறந்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

இப்பாடசாலையில் 400 மாணவர்கள்வரை இருக்கின்றனர். இவர்கள் மெட்ரிக்குலேஷன் வகுப்புவரை படிக்கின்றனர். பாடசாலை நிர்வாகக்குழுவுடன் சேர்ந்த டைரக்டர் ஒருவருடன் சில ஆண்டுகளுக்கு முன்பு சாதாரணமாகப் பேசிக்கொண்டிருக்கையில் சிலை பற்றிய கருத்துத் தோன்றியது என்று திருமதி சுவாமிநாதன் கூறினார். இந்த ஔவைச் சிலை தமக்கு அதிக [illegible] லிருந்து அவடிக்கப்பட்டதென்றும் அவர் கூறினார்.

இன்றே எழுதுங்கள்

எந்த விதமான மனக் கவலைகளோ, வாழ்க்கையில் நிறைவேற வேண்டிய காரியங்களோ இருப்பின் அவைகளை விபரமாக எழுதி அனுப்புங்கள். தெய்வ பலத்தினாலும், மந்திர சக்தியினாலும் உங்கள் காரியங்களை நிவர்த்தி செய்து தர முடியும். இரகசியங்கள் வெளியிடப்பட மாட்டாது.

கவர்மெண்ட் ரிஜிஸ்டர் மாந்திரீக வைத்தியர்
பி. எம். திசாநாயக்க
நாலு தேவாலய பிரதம தர்மகர்த்தா
அருத எண்ணெய் தலைமை காரியாலயம்
கம்பளை.

## கவிதைப் பூங்கா

### அருள் புரிவாயே!

—ஜெயம்—

பொதிகையின் மலையில் பிறந்தவள் நீயே
பொற்பெனும் கலையைப்(ப்) பூண்டு வந் தாயே
நிதிகையன் மகள்போல் நீள்நிலம் பிறந்தாய்
நீள்நிலம் சிறக்கும் முன்னே சிறந்தாய்!

காலம் காலமாய்(க்) கன்னி யென் தாயே
காவிரிக் கரையில் களித்து வந்தாயே
ஞாலம் போற்ற நான்திசை கண்டே
நண்பர்கள் பலரையும் உறவினில் கொண்டாய்!

தமிழர் எம்தாயே எமை மறவாதே
தரணியில் எம்மை வாழ வைப்பாயே!
அமிழ்தினு மினிய ஆண்டாய் இவ்வாண்டு
அவனியில் ஆக அருள் புரிவாயே!!

—|——ஃ——|——

### தேன் தமிழ் பாடுவோம்

—(சம்மாந்துறை யூ. செயின்)—

காலை மலர்ந்துசெங் கதிர்கள் எறித்திடக்
கன்னித் தமிழ் மொழிந்து—தினம்
கர்த்தன் வழிபடுவோம்
மாலை மலர்ந்துவிண் மீனினம் பூக்கையில்
மனத்தில் நினைத்திருந்து—தமிழ்
மணத்தை நுகர்ந்திடுவோம்.

தத்தித் தவழ்ந்துநா தட்டித் தடுமாறும்
தங்கக் குழந்தைகட்கு—தேன்
தமிழினை யூட்டிடுவோம்.
கத்திப் பறநதிடும் காக்கை இனத்துக்கும்
கன்னல் தமிழ் மொழியை—நாம்
கற்றுக் கொடுத்திடுவோம்.

செந்தேனும் நாவினில் சிந்திடும் போதிலும்
செந்தமிழ் பேசிருந்து—தினம்
சிந்தை குளிர்ந்திடுவோம்
முந்தியே நம்மவர் முதுசுவை கண்டதும்
முத்தமிழ் மடிதனிலே—என்று
முழங்கியே பாடிடுவோம்.

வேற்று மொழியினால் வீழ்வதோ நந்தமிழ்
வீறு கொள்ளும்! இனமே—தமிழ்
வேகம் இழப்பதுவோ
சற்றும் மறுவிலாச் சிங்கத் தமிழனே
சங்கத் தமிழ் மொழியை—பறை
சாற்றி வளர்த்திடுவாய்!

———:::———

### யாருமிலர்

—சி. கனகசூரியம்—

வீசுகிறாய் கடும்புயலே வீரன்நீ
    என்றெமக்கு விளம்பு தற்கா
பேசிடவோ மாட்டாயுன் பெருமைதனை
    எங்களினப் 'பெற்றி' கேட்டால்;
மாசுகண்டால் அக்கணமே வெகுண்டெழுவர்
    அதைப்போக்க, மண்விண் எந்தத்
தேசமதிற் கேட்டாலும் [தெரிந்திடுவாய்
    நேர்கண்டும் தெரிந்தா யானல்,

நாணமுறுவாய் நீயும் 'நம்வேகம்
    ஒருபொருட்டோ நாடும் ஏடும்
தேனென்று போற்றுகிற செந்தமிழைப்
    பேசிடுவோர் திறம்முன்' என்று.
மானத்தைப் போற்றுவதில் மட்டுமிலை;
    அன்புசெயும் மாண்பைப் பற்றி
நானுரைக்கத் தேவையிலை நானிலத்தோர்
    உரைப்பருன்றன் நங்கை தென்றல்,

கொட்டுகிற இனிமையையே கூறவொணா
    நிகரென்று; கோபம் வேண்டாம்
எட்டிநடக் கின்றாயே ஏன்...எங்கே...?
    ஓகோகோ இதையெல்லாம் போய்
இட்டமுடன் யார்க்கேனும் எடுத்துரைக்கவா?
    சும்மா இரு, எங்கேயும்
மட்டான செந்தமிழின் மகிமையறியார்
    காண மாட்டாய் அப்பா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




திருவாளர்
குயுக்தியார்
மே/பா சுதந்திரன்
தபால் பெட்டி இல. 1183
கொழும்பு-12.

இம் முகவரியைக் கத்தரித்து தபால் அட்டையில் ஒட்டியனுப்பப்படும் வினாக்கள் மட்டுமே கவனத்திற்கு எடுக்கப்படும்.

**சண்முகநாதன், காலி.**

கே: நான் நிம்மதியாக வாழும் ஒரு பிரம்மச்சாரி. திருமணத்திற்குப் பிறகும் நிம்மதியாகவே வாழ விரும்புகிறேன். அதற்கு எப்படிப்பட்ட பெண்ணை மணந்து கொள்ள வேண்டும்?

ப: செவிட்டுப் பெண்ணையோ, ஊமைப் பெண்ணையோ மணந்துகொள்ளுங்கள்.

ஃ

**வி. வீரசிங்கம், மட்டக்களப்பு.**

கே: மேல் நாட்டு காதலுக்கும் நம் நாட்டுக் காதலுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ப: உல்லாசத்திற்கும் உற்பத்திக்கும் உள்ள வித்தியாசம்.

ஃ

**க. கிருஷ்ணசாமி, பதுளை.**

கே: முன்பு தன்னைக் காதலித்த ஆடவனைத் திடீரெனக் கைவிட்ட கன்னியொருத்தி என் நண்பனைக் காதலிக்கிறாள். அவளை நம்பலாமாஎன்று அவன் என்னிடம் கேட்கிறான். நான் என்ன சொல்வது?

ப: அலைகளை உழுது, மணலை விதைத்து, காற்றை அறுவடை செய்து, கைவலையில் சேகரிக்கலாம் என்று நம்புகிறவன்தான் அம்மாதிரியான பெண் மீது நம்பிக்கை வைக்க முடியும், என்று நண்பனிடம் கூறுங்கள்.

ஃ

**எல். நிசார், கொழும்பு-2.**

கே: குயுக்தியாரே, நான் யார் யாரை நம்பலாம்?

ப: யாரை வேண்டுமானாலும் நம்புங்கள். ஆனால் சாவித் துவாரத்தின் வழியாகப் பார்ப்பவர்களை மட்டும் நம்பவேண்டாம்.

ஃ

**வி. எம். நாதன், கண்டி.**

கே: துறவிதான் உலகிலேயே சந்தோஷமான மனிதன் என்பது என்கருத்து, உங்கள் கருத்தென்ன?

ப: உங்கள் கருத்து தவறு. ஆதி மனிதனான ஆதாம் என்பவன் தான் உலகிலேயே சந்தோஷமான மனிதன், ஏனென்றால் அவனுக்கு மாமியார் கிடையாது.

ஃ

**சி. பரராசசிங்கம், புலோலி—மேற்கு.**

கே: யாழ் நகரில் நடைபெற்ற ல. ச சமாஜக் கட்சியின் வாலிபர் மகா நாட்டில் டாக்டர் என். எம். கூடத் தமிழில் பேசியபோது திரு. காராளசிங்கம் மட்டும் ஆங்கிலத்தில் பேசினரே ஏன்?

ப: அவர் ஆங்கிலத் + தமிழில் பேசி இரு மொழிகளையும் கொலை செய்வதைவிட தனி ஆங்கிலத்தில் பேசியது எவ்வளவோ நல்லது. அதனால் ஆங்கிலமும் பிழைத்தது. தமிழும் பிழைத்தது.

கே: சிறையிலிருக்கும் ஷேக் அப்துல்லாவை விடுதலை செய்யுங்கள் என்று அன்று கூறினர் அண்ணா, இன்று ஷேக் அப்துல்லா விடுதலையானதும் சிறையிலிருக்கும் அண்ணாவை விடுதலை செய்யக் கோருவாரா?

ப: அண்ணாவின் விடுதலைக்கு ஷேக் அப்துல்லாவின் கோரிக்கை தேவையன்று. அண்ணா கூறியதைப் போல் அன்றே அப்துல்லா விடுதலை செய்யப்பட்டிருந்தால் காஷ்மீர் பிரச்சினை தீர என்றோ வழி பிறந்திருக்கலாம்.

ஃ

**மூ. கருணாநிதி, ஏழாலை மேற்கு.**

கே: சோவியத் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் இடையில் சிறு மோதுதல் ஏற்படுமா?

ப: சிறு மோதுதலா? அது சர்வதேசிய மோதுதல். அதனால் உலகக் கொம்யூனிஸ்டுக் கட்சிகள் உடைந்து விழுந்து தூள் தூளாகிக்கொண்டிருக்கின்றனவே.

கே: சமீபகாலத்தில் பொதுத் தேர்தல் இல்லை என்று கல்வி உதவி மந்திரியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கூட்டுக் காரியதரிசியுமான திரு. டி. பி. தென்னக்கூன் கூறினரே, இது உண்மைதானா?

ப: உண்மைதான்—கூட்டு அரசாங்கம் ஏற்பட்டால்.

ஃ

**'இளங்கோவன்' தம்பாலை.**

கே: சிங்களத் தினிப்பால் வேலையை விட்டு விட்டு வந்து யாழ்ப்பாணக்கிராமங்களில் வெங்காயம் கிண்டுகின்ற உத்தியோகத்தரை என்ன என்று சொல்வது?

ப: தமிழ் இனத்துக்காகவும், மொழிக்காகவும், தமிழ் மக்களின் வாழ்வுக்காகவும் மாபெரும் தியாகத்தை செய்த "தியாகமூர்த்திகள்" என்று கூறிப் போற்றுங்கள்.

ஃ

**கே. கே. வி. ஆனந்தசர்மா, வறக்காப்பளை.**

கே: மொழிப் பிரச்சினையைத் தீர்க்க அம்மையார் இறங்கி வந்திருக்கிருவாமே! தீருமா பிரச்சினை?

கே: புத்த மதத்தினராகிய சிங்களவர்கள் கதிர்காமகந்தனை வழிபடுகின்றார்களே, இதன் மர்மம் என்ன?

ப: தெய்வ வழிபாடு பௌத்த சமயத்தின் அடிப்படைக் கோட்பாடுகளுக்கு மாறானதாகும், கந்தன், விஷ்ணு போன்ற தெய்வங்களை வழிபடுவதில் பௌத்தர்களிடையே பலத்த கருத்து வேறுபாடுகள் உண்டு. ஆனால் கண்ணகியைப் (பத்தினித் தெய்வத்தை) வழிபடுவதில் அத்தகைய வேறுபாடுகள் கிடையா.

கே: அடுத்த பொதுத் தேர்தலில் ஆளுங்கட்சி எதுவாக இருக்கும்?

ப: சிங்களப் பகுதிகளில் வசிக்கும் தமிழர்களின் வாக்குகள் எந்தக் கட்சிக்குக் கிடைக்குமோ, அந்தக் கட்சி ஆளும் கட்சியாக வரலாம்.

ப: கொஞ்சம் பொறுங்கள்! விரைவில் தெரிந்து விடும்.

ஃ

**மாணிக்கம், ஹாலிஎல.**

கே: நான் ஒரு சிங்களப் பெண்ணைக் காதலித்தால் எதிர்காலத்தில் என்ன பயன் கிடைக்கும்?

ப: உற்பத்திக்கு உதவிய பெருமை கிடைக்கும்.

ஃ

**மூ. சுப்பிரமணியம், மாவிட்டபுரம்.**

கே: ஓய் முத்தலைக் குயுக்தியாரே, உங்கள் சிரிப்பு எங்கள் கேள்வியைப் பார்த்துப் பரிகாசம் செய்வது போல் இருக்கின்றதே.

ப: உங்கள் முன்னிலையில் நான் சிரித்தால், நீங்களும் சிரிக்க வேண்டிய [illegible] தம் ஏற்படும். குறைந்தது ஒரு புன்சிரிப்பையாவது அள்ளி வீச வேண்டிவரும்.

**எஸ். அல்போன்ஸ், புத்தளம்.**

கே: "சுதந்திரன்" பத்திரிகைக்கு விகடத் துணுக்குகளை ஓவியங்களாகவும், நேயர்களுக்கு சுதந்திரதாகத்தை ஊட்டக் கூடிய வகையிலும் வரைந்தனுப்பினால் பிரசுரிப்பீர்களா?

ப: "பிரசுரிப்பீர்களா" என்ற நிபந்தனை எனக்குப் பிடிக்காது. வரைந்தனுப்புங்கள். எவ்வளவு பெரிதாக வேண்டுமானாலும் வரையுங்கள்.

ஃ

**ச. சபாநேசன், காரைநகர்.**

கே: சிறிமாவோ அம்மையார் மொழி பற்றிய பேச்சுவார்த்தைகளைப் பின் போட்டு வருவதன் காரணமென்ன?

ப: என்ன செய்யலாம்? மொழிப் பேச்சுக்கு [illegible] பின்னர் மின்சார வேலை நிறுத்தமும் அவசரகாலச் சட்டமும் குறுக்கிட்டன. இப்பொழுது கூட்டு அரசாங்கப் பேச்சு குறுக்கிட்டுள்ளது. இனி எது குறுக்கிடுமோ?

ஃ

**ஜெமினி, கண்டி.**

கே: நான் ஒரு பெண்ணைக் காதலித்தேன். அது அவளின் தாய் தந்தையருக்கு எட்டி விட்டது இனிமேல் அவளைக் கை விடுவதா அல்லது தொடர்ந்து காதலிப்பதா?

ப: தாய் தந்தையருக்குத் தெரியாமல் காதலிக்க வேண்டும் என்ற நிபந்தனையின் மீது காதலித்து வந்தால், கைவிடுங்கள் இல்லையேல்......

ஃ

**கனகாம்பிகை, காங்கேசன்துறை.**

கே: ஆணிலும் பார்க்க பெண் உள்ளத்தில் ஆசையை அதிகம் ஊறவைத்து, அதை வெளியிடாமல் இருக்க நாணத்தையும் படைத்த ஆண்டவன், அந்த நாணத்தை ஏன் ஆணுக்குப் படைக்கவில்லை?

ப: இருவரும் நாணிக் கொண்டிருந்தால் ஆசையை அமுலாக்குவது யார்? அதனால் தான்......

ஃ

**மோ. ரொசாரியோ, கொழும்பு-2.**

கே: உங்கள் அபிப்பிராயப்படி இலங்கைக்கு பொருத்தமான அரசாங்கம் எது?

ப: இரு பொறுப்பாட்சிப் பிரிவுகளைக் கொண்ட சமஷ்டி ஆட்சி.

கே: ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அடுத்த முறை தேர்தலில் வெற்றி பெறுவதற்கான வாய்ப்பு இல்லை என்பது எல்லோரதும் கருத்து. அப்படியானல் எக்கட்சியினருக்கு வெற்றி பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது?

ப: சிங்களப் பகுதிகளில் தமிழ் பேசும் மக்களின் வாக்குகள் சுமார் 15 தொகுதிகளில் வெற்றி தோல்வியை நிர்ணயிக்கும் நிலையில் உள்ளன. எந்தக் கட்சி இந்த வாக்குகளைப் பெறுவதில் வெற்றி பெறுமோ, இந்தக் கட்சி அதிக ஸ்தானங்களைக் கைப்பற்ற முடியும்.

ஃ

**ஆ. சுப்பையா, ராசாகலை தோட்டம்.**

கே: எனது நண்பர்கள் எட்டு பேர் இருக்கிறார்கள். அவர்கள் பெரும் வீரர்கள். இவர்களுக்கு உங்களிடத்தில் ஏதாவது கிடைக்குமா?

ப: அவர்களிடையே மணலைக் கயிறாகத் திரிப்பவர்கள், வானத்தை வில்லாக வளைப்பவர்கள், மணலைப் பிழிந்து சாறு எடுப்பவர்கள், நீர்மேல் நடப்பவர்கள் இருக்கிறார்களென்றால் உடனே அனுப்பி வையுங்கள். அம்மாதிரி வீரர்கள் 10 பேர் எனக்கு உடனடியாகத் தேவை.

## போதனை மொழி

—தாவூத்—

தந்தைதாயர் முன்னோரிங்கு தங்கியுள்ள பின்னோரும்
தங்கள்மொழி அமிழ்தமொழி என்றுநாளு மறைந்துளம்
அந்தமில்லா மகிழ்வுகொண்டு அன்னையென வாழ்த்தியே
ஆண்டாண்டாகப் பேசியதி லளவுஇலாக் களிகொண்டு
சொந்தமென்ற உரிமைநாட்டித் தொண்டுசெய்து வளர்த்திட்ட
தொன்மைமிகு வண்டமிழை விட்டுவேறு மொழியினை
இந்தநாளில் ஏற்குமாறு இயம்புகின்ற 'தொண்டரை'
ஈழம்வாழும் முஸ்லிம்மக்கள் காறியுமிழ்ந் தொதுக்குவர்!

ஆண்டவனி னருள்மறையும் அண்ணலாரின் மொழிகளும்
ஆவியன்ன எம்மதத்தின் அருங்கலையும், நம்மினச்
சான்றோர்தந்த படைப்புகளும், 'சாந்திமார்க்க' விளக்கமும்
தரணிபோற்றும் நம்மூதாதைச் சதிரடைந்த வரலாறும
மாண்டிடாத நம்குலத்து மாண்புமேவு நெறிகளும்
வையம்வாழ்த்தும் இறையின்மார்க்க மீந்துவிட்ட பண்பாடும்
தோன்றிநிற்கும் தீந்தமிழின் தொடர்பைவிடு மென்போரை
தூற்றிடுவர் ஈழமுஸ்லிம் உறுதி! உறுதி! உறுதியே!

பெரும்புலவர் உமறுமூலம் பெருக்கெடுத்த 'சீறவும்'
பேறுகொண்ட குலாம்காதிர் பெற்ற'நாகூர் புராணமும்'
திருவிலேயே கருவைக்கொண்ட செம்மலப்துல் காதிரின்
தித்திக்கின்ற தேன்மழையாம் திருமை'குதபு நாயகம்'
வரகவியாம் காசிம்புலவர் வழங்கிவிட்ட 'திருப்புகழ்'
வாழும்வன்மை கொண்ட'இராஜ நாயகமும்' நிறைந்துள்ள
அருமையுடை தமிழைஇன்று அகற்றுமென்று அறைகின்ற
"அறியாமையை" ஏற்பரோநம் அறிவுடைய முஸ்லிம்கள்?

குணங்குடியின் வாயினூற்றை, 'சேகனா'வின் புலமையை,
கோனும்ஞானப் பீர்முகம்மத் கொடிவிட்ட பண்களை,
மணந்திகழும் ஐவாது, வண்ணக் களஞ்சியம்,
மாண்புநெய்னா முகம்மத் பிச்சை இபுறாகிம்,
வனமுறைந்த ஞானிசாகிபு, செய்குதம்பிப் பாவலர்,
வண்ணமுடை பாவிசைத்த ஆலிம்புலவர் வழிவந்த
அணங்குதனிச் செந்தமிழை ஐயோவிட்டுச் சிங்க(ள)த்திற்(கு)
இணங்குஎன்றால் முஸ்லிம்மக்கள் ஏற்பரோஅம் மடமையை?

முன்பை விட இன்னும் அதிக சக்தி வாய்ந்தது!



அதை ஒழியுங்கள்!

ப்ளெக் ப்ளேக்

பலஇயக்க கிருமிநாசினி உங்கள் குடும்ப சுகாதாரத்தைப் பாதுகாப்பதோடு நோய் பரப்பும் விஷப் பூச்சிகளை உடனடியாக அழித்து விடுகிறது.

புதியதும் அதிக சக்தி வாய்ந்த மருந்து வகைகளையும் கொண்ட, பல இயக்க "ப்ளெக் ப்ளேக்" மூன்று வகைகளில் இயங்கக் கூடிய முதலாவது கிருமி நாசினியாகும்.

1. நேரடித்தாக்குதல் ஈக்கள், நுளம்புகள், கரப்பான், தெள்ளு, மூட்டைப் பூச்சிகள் போன்றவைகளை உடனடியாக அழித்து விடுகிறது.
2. பறந்து தாக்குதல் "ப்ளெக் ப்ளேக்" பல இயக்க கிருமி நாசினி தெளிக்கப்பட்ட பின் புகை போன்ற ஆவியாக மாறி, பல பகுதிகளுக்கும் பரவி மறைந்திருக்கும் கிருமிகளையும் அழித்து விடுகிறது.
3. தங்கித் தாக்குதல் "ப்ளெக் ப்ளேக்" பல இயக்க கிருமி நாசினி தெளிக்கப்பட்ட இடங்களில் எல்லாம் கண்ணுக்குத் தெரியாத, ஆனால் கொல்லும் சக்தி வாய்ந்த ஒரு வகை மெல்லிய படலமாக தங்கியிருந்து அதனுடன் சந்திக்கும் சகல பறக்கும் பூச்சிகளையும், ஊர்ந்து செல்லும் கிருமிகளையும் அழித்து விடுகிறது.




டிடிவிபியுடன் (DDVP) கூடிய பல இயக்க "ப்ளெக் ப்ளேக்" கிருமி நாசினியை வாங்கி ஊர்ந்து, பறந்து செல்லும் கிருமிகளை அழித்து விடுங்கள்.

STE-BF/HA-T-5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய தொழிற் சங்கக் கூட்டணி உதயம்

## 'அரசாங்க தொழிற் சங்க கூட்டணி' என்ற பெயரில் நிறுவப்பட்டது

## இணைப்புக் கழகமும் அமைக்கப்பட்டது

தமிழ்பேசும் ஊழியர்களைக்கொண்ட தொழிற்சங்க சம்மேளனம் ஒன்று கடந்த 10-4-64 அன்று அரசாங்க எழுதுவினைஞர் சங்கப் பணிமனையில் உருவாயிற்று. 'அரசாங்க தொழிற் சங்கக் கூட்டணி' என்ற பெயரில் இப்புதிய சம்மேளனம் செயல்படும். தனியார் துறையில் உள்ள தொழிற்சங்கங்களையும் இணைக்கும் 'தொழிற்சங்கங்களின் இணைப்புக் கழகம்' என்ற இணைப்புக் குழுவும்உருவாக்கப்பட்டுள்ளது.

அரசாங்க சேவையில் கடமையாற்றும் தமிழ் பேசும் ஊழியர்களைக் கொண்ட மொழிவழித் தொழிற் சங்கங்களின் சம்மேளனம் ஒன்று அஞ்சல் எழுது வினைஞர் சங்கத் தலைவர் திரு. வே. கனகசபை முதலி தலைமையில் நிறுவப்பட்டுள்ளது. இக் கூட்டணியின் ஆரம்பக் கூட்டம் கடந்த சனிக்கிழமை 10-4-64 அன்று அரசாங்க எழுது வினைஞர் சங்கப் பணிமனையில் நடைபெற்றது. இச் சம்மேளனம் "அரசாங்க தொழிற் சங்கக் கூட்டணி" என்று அழைக்கப்படும். இக் கூட்டணியில் அரசாங்க எழுதுவினைஞர் சங்கம், அஞ்சல் எழுதுவினைஞர் சங்கம், துறைமுக நாவாய் இயக்குனர் கழகம், தமிழ் பேசும் அரசாங்க பொது ஊழியர் சங்கம், அகில இலங்கை அரசினர் பாடசாலைத் தமிழ் ஆசிரியர் சங்கம் ஆகிய பிரதிநிதித்துவம் வகிக்கின்றன. மேலும் பல மொழி வழித் தொழிற் சங்கங்கள் இக் கூட்டணியுடன் விரைவில் இணைக்கப்படவிருக்கின்றன.

### பதவியாளர்கள்

இக் கூட்டணியின் அலுவலாளர்களாகக் கீழ் காண்போர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்: தலைவர் :திரு. வே. கனகசபை முதலி (அஞ்சல் எழுது வினைஞர் சங்கம்) துணைத் தலைவர்: திரு. எஸ். ஜி. பிரிட்டோ (துறைமுக நாவாய் இயக்குனர் கழகம்) செயலாளர்: திரு. செ. கோடீசுவரன் பி. ஏ. (அரசாங்க எழுது வினைஞர் சங்கம்) பொருளாளர்: திரு. வ. மகாலிங்கம் (அகில இலங்கை அரசினர் பாடசாலைத் தமிழ் ஆசிரியர் சங்கம்).

### இணைப்புக் கழகம்

இக் கூட்டணியையும் தனியார் துறைத் தொழிற் சங்கங்களையும் இணைக்கும் தொழிற் சங்கங்களின் இணைப்புக் கழகம் என்ற இணைப்புக் குழுவும் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த இணைப்புக் கழகம் ஒரு தலைமைச் செயல் நிலையம் மூலம் இயங்கும். இத் தலைமைச் செயல் நிலையத்துக்குக் கீழ் காண்போர் தெரிவு செய்யப்பட்டனர்: செயலாளர்: திரு. க. சிவானந்த சுந்தரம் (இலங்கைத் தொழிலாளர் கழகம்) துணைச் செயலாளர்: திரு. செ. கோடீசுவரன் (அரசாங்க தொழிற் சங்கக் கூட்டணி).

இவ்விணைப்புக் கழகத்தில் இலங்கை தொழிலாளர் கழகம், அரசாங்க கூட்டுத்தாபன ஊழியர் சங்கம், இலங்கைத் துறைமுகத் தொழிலாளர் கழகம் ஆகியன இணைக்கப்பட்டுள்ளன.

### தனியார் துறைச் சம்மேளனம்

தனியார் துறையில் உள்ள மொழிவழித் தொழிற் சங்கங்கள் அனைத்தையும் விரைவில் ஒன்று படுத்தி அவர்களுக்கு என்று தனியாக ஒரு சம்மேளனம் வெகு விரைவில் நிறுவப்படும் என்று தெரிய வருகிறது.

அரசாங்க தொழிற் சங்கக் கூட்டணி, அரசாங்க சேவை, உள்ளூராட்சிச் சேவை இதர அரசாங்க ஊழியர்களுக்குத் தனித் தனியே அவ்வத்துறைக்கு ஒன்றாக தொழிற் சங்கங்களை அமைத்து அவற்றையும் இக் கூட்டணியுடன் இணைக்கும்.

தனியார் துறைத் தொழிலாளர்களுக்கு என்று தனியான சம்மேளனம் நிறுவப்பட்டதும் அரசாங்க தொழிற் சங்கக் கூட்டணியும் தனியார் துறைக் கூட்டணியும் இணைப்புக் கழகம் ஒன்றை உருவாக்கும் என்று அ. எ. வி. சங்கப் பிரமுகர் ஒருவர் நமது நிருபரிடம் கூறியுள்ளார். மேலும் இந் நாட்டில் உண்மையான சோஷலிச முறையில் இயங்கும் தொழிற் சங்கக் கூட்டணி இதுவாகும் என்றும் அப்பிரமுகர் கூறியுள்ளார்.

### அடுத்த இதழில்

மகாமகோபாத்தியாயர்
உ. வே. சாமிநாதையர்
பற்றி
பேராசிரியர்
மு. சிவானந்தன் எம். ஏ.
எழுதும் கட்டுரையும்,
செகப்பிரியரின்
400வது நினைவு தினத்தை
யொட்டி
'ஈழவேந்தன்' எழுதும்
கட்டுரையும்
இடம்பெறும்

தமிழ் பேசும் மக்கள் விரும்பிப் பாவிப்பது
**மாய ஜோதி ஊது பத்திகளே**
- சுகந்த வாசனை
- நிலைத்து எரியும் தன்மை
- நியாயமான விலை
- நவீன முறையில் இறுக்கமாக அடைக்கப்பட்ட பாக்கெட்டுகளில் இப்பொழுது விற்பனையாகிறது.

உற்பத்தியாளர்கள்:-
ந. செல்லத்துரை, மாயஜோதி இன்டஸ்றீஸ்.
128/3, வாட்பிளேஸ், கொழும்பு—7.

### 'சுதந்திரன்' புதிய சந்தா விபரம்

தபால் கட்டணம் அதிகரித்திருப்பதன் காரணமாக, பின்வருமாறு சந்தா உயர்த்தப்பட்டிருக்கிறது.

| | |
|---|---|
| ஒரு வருடம் | ரூபா 14-00 |
| ஆறு மாதம் | ரூபா 7-50 |

நிர்வாகி
'சுதந்திரன்'

## மலையகத்தில் தமிழரசுத் தந்தை பிறந்த தின விழா

கொட்டகலை மாவட்டம் 'பளிங்கு மலை' பாரதி மன்றத்தில் தமிழரசுத் தந்தையும் ஈழத்துப் பெரியாருமான திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் 67வது பிறந்த தின விழா 1-4-64ம் நாள் புதன்கிழமை இரவு 7-30 மணிக்கு நடாத்தப்பட்டது.

இ. தி. மு. க. ஹட்டன் மாவட்டச் செயலாளரும், 'பளிங்குமலை பாண்டியன் பகுத்தறிவு கலை மன்றம்' பொதுச் செயலாளருமான, தோழர் இரா. ரெங்கையா அவர்கள் விழாவுக்குத் தலைமை வகித்தார்.

இவ் விழாவிற்கு 250க்கு மேற்பட்ட இளைஞர்கள் குமிழ்ந்திருந்தார்கள். அவைத் தலைவர் "தோழர் இரா. ரெங்கையா, தமிழரசுத் தந்தையும், பண்புமிக்கப் பெரியாருமான திரு.சா. ஜே. வே. செல்வநாயகம் அவர்களின் பிறந்த தின விழாவை மலையகத்தில் எமது கிளை மட்டும் கொண்டாடினால் போதாது. ஈழம் வாழ் தமிழ் பெருங்குடி மக்கள் யாபேரும் கொண்டாட வேண்டும்: எமது இனத்துக்காகவும், மொழிக்காவும், அன்றும் இன்றும் என்றும் அயராது அவர் உழைப்பதைக் கண்டு நான் பெருமகிழ்வு கொள்கின்றேன்" என்றார்.

தோழர்கள்: தி. ச. பாலசிங்கன், கே. எம். பால்ராஜ், பூபாலன், சி. செங்கமலை, ஏ. கண்ணுயிரம் ஆகியோர் உரை நிகழ்த்திய பின், தோழர்: இரா. ரெங்கையா அவர்கள் நன்றி நவிலலுடன் விழா முடிவுற்றது.

## நீக்ரோ மாதின் உரிமைக் கோரிக்கை

அமெரிக்காவின் தென் மாநிலங்களில், வெள்ளையர்களை, நீதிமன்றங்களில் 'மிஸ்டர்', 'மிஸ்ட்ரஸ்', 'மிஸ்' என்று விளிப்பதைப் போலவே நீக்கிரோக்களையும் அழைக்க வேண்டும் என்பதை, அமெரிக்கத் தலைமை நீதி மற்றம் ஒப்புக் கொண்டது.

இன சமத்துவம் கோரும் அமைப்பின் செயலாளரான திருமதி மேரி ஆமில்டன் என்ற பெண்மணி, தன்னை நீதி மன்றத்தில் மிஸ் மேரி என்று அழைக்க வேண்டும் என்று வற்புறுத்தினர்.

அரசாங்க தரப்பு வழக்கறிஞர் தன்னை மேரி என்று அழைத்ததற்கு எதிர்ப்புத் தெரிவித்து அவருடைய கேள்விகளுக்குப் பதில் சொல்ல அவர் மறுத்து விட்டார். அதனால், நீதி மன்றத்தை அவமதித்ததாக அவர் தண்டிக்கப்பட்டார். ஐந்து நாள் சிறைவாசமும் 50 டாலர் அபராதமும் விதிக்கப்பட்டது. இதனை எதிர்த்து தலைமை நீதிமன்றத்தில் அவர் மனுச் செய்து கொண்டார்.

தலைமை நீதிமன்றம் திருமதி மேரியின் கோரிக்கையை ஏற்றுக்கொண்டது.

## முஸ்லிம்களின் போதனு மொழி பற்றி வை. எம். எம். ஏ. யின் முடிவு தவறானது

முஸ்லிம்களின் தாய்மொழி தமிழ். எனவே அவர்களின் போதனு மொழியும் தமிழ். சிங்களத்தைப் போதனு மொழியாக ஏற்றால் இஸ்லாமிய கலாச்சாரத்திற்குப் புறம்பான நூல்களையே நமது சிறூர்கள் கற்க வேண்டி ஏற்படும். இதை உணராது, குருநாகலையில் நடந்த முஸ்லிம் கல்வி மாநாட்டில் முஸ்லிம்களின் போதனுமொழி வட-கிழக்கு மாகாணத்தில் தமிழாகவும் ஏனைய ஏழு மாகாணங்களில் சிங்களமாகவும் வேண்டுமென வை. எம். எம். ஏ. செய்த முடிவு அவசர முடிவாகும். இது வருந்தத் தக்கதுமாகும்.

அண்மையில் குருநாகலையில் நடந்த முஸ்லிம் கல்வி மாநாட்டில், முஸ்லிம்களின் போதனுமொழி வட,கிழக்கு மாகாணங்களில் தமிழாகவும் ஏனைய மாகாணங்களில் சிங்களமாகவும் இருக்க வேண்டுமென அகில இலங்கை வை. எம். எம். ஏ. செய்த முடிவைப் பத்திரிகை வாயிலாக அறிந்து திகிலடைந்தோம்.

இந்த முடிவு குறுகிய மனப்பான்மையுடையதாகவும் விசனிக்கத்தக்கதுமாகும். இம்முறை அனுஷ்டிக்கப்பட்டால் முஸ்லிம்கள் குட்டிச் சுவராவது திண்ணம். தாய் மொழியான தமிழிருக்க சிங்களத்தில் போதனை பெறுவது முஸ்லிம் சிறுவர்களுக்கு மிகவுஞ் சிரமமான ஒன்றாகும். அதோடு ஆங்கிலம், தமிழ், அரபு ஆகிய மொழிகளையும் அவர்கள் கட்டாயமாகக்கற்கவேண்டியுள்ளது. ஒரே மொழியில் புகுத்தப்படும் அறிவு அதுவுந் தாய் மொழியில் புகட்டப்படும் அறிவு ஒரே ஓடையில் ஓடும் நீரைப்போன்றது. விரைவாக ஓடக்கூடியது. இதை விட்டு அந்நிய மொழிகள் பலவற்றை ஒரே காலத்தில் புகட்டி ஒரே ஓடையில் பல கிளைகள் தோன்றச் செய்தால் அது கல்வி முன்னேற்றத்தில் பெரியதோர் மந்த கதியை ஏற்படுத்திவிடும்.

### அன்றைய நிலை

தமிழைப் பொறுத்தவரையிலே, இதற்கு முந்திய காலங்களில் [illegible] இஸ்லாமிய கலாச்சார பண்பாட்டை அடிப்படையாகக் கொண்ட இலக்கிய நூல்கள் இல்லாததால் முஸ்லிம் மாணவர்கள் தமிழ் இலக்கியங்களை அதாவது சைவ சமய கலாச்சார, பண்பாடுகளை அடிப்படையாகக்கொண்ட நூல்களையே கற்றுவந்தார்கள். சுருங்கச் சொன்னால் சைவ சமயத்தையே-அது தமிழ் இலக்கியத்தோடு இணைந்திருந்ததால்-கற்று வந்தார்கள். அச் சமயத்தைச் சேர்ந்த மாணவர்களுடனே போட்டியிட்டு முன்னேறும அளவுக்கு ஓரளவு முஸ்லிம்கள் இருந்தார்கள்.

**எம். எச். ஏ. ஹமீம்**
**ஏறாவூர்**

### இன்றைய நிலை

அதன்பின்னர் அண்மைக் காலத்திலே சமயத்தோடு ஒட்டிய கல்வி வேண்டும்; முஸ்லிம்களுக்கெனத் தனிப் பாடசாலைகள் வேண்டும்; முஸ்லிம்களே போதிக்கும் ஆசான்களாக இருக்க வேண்டும்; அப்போதுதான் முஸ்லிம் மாணவர்கள் இஸ்லாமியக் கலாச்சாரத்துடனும் பண்பாடுகளுடனும்கல்விபெறவாய்ப் பேற்படுமென்று ஆசிரியர் சங்கங்கள் கூச்சலிட்டன. அதன்படிக்கு முஸ்லிம் பாடசாலைகள் பிரித்துக்கொடுக்கப்பட்டு தமிழ்மூலம் உள்ள முஸ்லிம் இலக்கியங்களாகிய சீறாப்புராணம், யூசுப் ஜுலைகா, புதுகுஷ்ஷாம் போன்ற நூல்களைப் போதித்து வருகின்றனர். இம்முறை தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டால் முஸ்லிம் மாணவர்கள் தமிழ் மூலம் இஸ்லாமிய மதக்கல்வியைத் தொடர்ந்து கற்க வாய்ப் பேற்படும்.

வெண்ணெய் திரண்டு வரும் இந்த வேளையிலே தாழியை உடைப்பதா? தமிழ்மூலம் நமதுசமயத்தை யொட்டிய கல்விபோதிக்கப்படும் நேரத்திலே கேவலம் வயிற்றுப் பிழைப்பை இலக்காக வைத்து, ஆக்கிய ஒரு அரும்பெருந் திட்டத்தைத் தூக்கி எறிவதா?

### எதைப் படிப்பது?

தமிழ்மூலம் அன்று பெரிய புராணம், திருவிளையாடற் புராணம், கம்பராமாயணம் மகாபாரதம் போன்ற நூல்களைப் படித்த மாணவர்கள் இன்று அதே மொழிமூலம் சீறாப்புராணம், யூசுப் ஜுலைகா, புதுகுஷ்ஷாம், மஸ்தான் சாகிப் பாடல் ஆகியவற்றைப்படிக்கின்றனர். ஆனால் எதிர்காலத்தில் இவர்கள் சிங்களம் மூலம் எதைப் படிக்கப்போகின்றார்கள்? எந்த நூல் சிங்களமொழியில் இருக்கின்றது? அவை மொழிபெயர்க்கப்பட எத்தனை நூற்றாண்டுகள் ஆகும்? அதுவரைக்கும் நாம் எதைப் படிப்பது? எந்த மொழியும் பெரும்பாலும் அந்தந்தச் சமயத்தோடு தொடர்புடையதாகத்தான் இருக்கின்றது. எனவே நாமும் அதுவரைக்கும்-மொழிபெயர்க்கப்படும் வரைக்கும்-பௌத்த மத நூல்களான குத்தில, உம்மக்க ஜாத்தக்கய போன்ற ஜாத்தக நூல்களைத்தான் கற்கவேண்டும்.

### அவசர முடிவு

பொருளாதார அடிப்படையிலே பார்த்தாலும் இன்று ஆயிரக்கணக்கான

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிஞர் இக்பால் மலர்

**(இலங்கை முஸ்லிம் எழுத்தாளர் சங்கம் திரட்டியது)**

## இக்பால் கண்ட இஸ்லாமிய பெண்

இஸ்லாம் பெற்ற இயற்கைக் கவிஞருள் அல்லாமா இக்பாலும் ஒருவர். தனது தீங்கவிகள் மூலம் தீன் முழக்கம் செய்த அவரை அறியாத முஸ்லிம்கள் இலர். அவர் ஒரு கவிஞர்; எழுத்தாளர்; வழக்கறிஞர்; பன் மொழிப் புலவர் உர்தூ இலக்கியத்திற்கு உயிரூட்டி, உணர்வூட்டியவர். அன்னர் எழுதிய 'அர்முகானே-ஹிஜாஸ்' என்னும் நூலிலிருந்து இக்பால் கண்ட இஸ்லாமியப் பெண்களைப்பற்றி அறிய உள்ளம் நாடுகின்றது. அவற்றை அறிய முற்படுவோம்.

"மகளே இவ்வலங்காரங்களை
விட்டு விடு!
முஸ்லிம் பெண்ணிற்கு
கண்ணைக் கவரும்
முயற்சிகள்பொருத்தமில்லை!
செயற்கைப்பொருள்களினல்
ஏற்படும்'
அழகில் மோகங்
கொள்ளாதே!
ஒழுக்கத்தின்அடிப்படையால்
வசீகரிக்கும்
முறையை கற்றுக்
கொள்வாயாக.
அங்க அமைப்புக்களின்
அழகைவிட
ஆத்மீக அழகே
சிறந்ததென்பதை
உணருவாயாக!'

பெண்ணின் இயற்கையமைப்பில் பெரிதும் கவர்ச்சியை அல்லாஹ் வைத்திருக்கிறன் என்பதில் ஐயமில்லை, இக் கவர்ச்சியின் காரணமாகவே மானிட சந்ததியின் உற்பத்தியானது, தொடர்ந்து நிகழ்ந்து கொண்டிருக்கின்றது. ஆனல் ஒழுக்க நிபுணர்களது கண்களைக் கவர்ந்தவள் மானம், நாணத்தின் ஆடைகளை அணிந்தவளேயாவாள்!

இக்காலத்தின் போக்கானது மர்மமாயில்லை; காலம் எப்படிச் செல்கின்றது என்பது பகிரங்கமாகிவிட்டது. சுக போகங்களிலும், அலங்காரங்களிலும் அகிலமானது மனதைச்செலுத்திக்கொண்டிருக்கின்றது. படைப்புகள் என்னும் எதிரொலிகள்எண்ணற்ற முறையில் ஜொலித்துக்கொண்டிருந்தும்படைத்தவனுகிய அல்லாஹ், தன்னை மறைத்துக்கொண்டிருக்கின்ருன்; நூற்றுக்கணக்கான திரைகளில் தன்னை மறைத்துக்கொண்டிருக்கும் தெய்வீக அம்சத்தை மகளே, நீ பின்பற்றக் கற்றுக்கொள்வாயானல் வையகத்தில்பிரகாசமடைவாய்!

அவனியில் மனித ஒழுக்கம்
உறுதியடைவது
தாய்மார்களையே
அஸ்திவாரமாகக்
கொண்டுள்ளது!
தரணியின் இயற்கையாகவுள்ள
நேர்மையான
பொக்கிஷங்களைப் பாதுகாக்கும்
பொறுப்பானது
தாய்மார்களிடமே
ஒப்படைக்கப்
பெற்றிருக்கின்றது
இவ்வுண்மைகளைஉணரத்தவறிய
சமுதாயமானது
வாழ்க்கையில் உயர்நிலையை
இழந்து சிதறுண்டு
சீரழிந்து விடுவது நிச்சயம்.

இருதய சுத்தியுள்ள ஒரு தாயின் பரிசுத்தப் பார்வையானது, எனக்கு இஸ்லாமிய ஆவேச அறிவை உண்டுபண்ணிற்று. கலாசாலையிலிருந்து கண்ணையும், மனதையும் பெற்றுக்கொள்வது சாத்தியமில்லை. இன்றைய வித்தியாபீடங்களானதுவெறும் மந்திரங்களும், மாய்கைகளுமாகவே இருக்கின்றன; இது தவிர்ந்து வேருென்றில்லை.

எழுச்சி விழிப்புக்களைத் தாரணியில் தோற்றுவிக்கும் சமுதாயமே சிறந்தது. தாய்மார்களின் நெற்றிகளில் சென்றகால எதிர்கால நிகழ்ச்சிகளைப் படித்துணர முடியும். சமுதாயத்தின் வாழ்வும்,தாழ்வும் தாய்மார்களையேபொறுத்துள்ளது.



மகளே! நானொரு துறவி! எனது உபதேசத்தை ஏற்றுக்கொள்வாயானல் ஆயிரக்கணக்கானசமுதாயங்கள் அழிந்துவிடினும் நீ அழிந்துவிடாது நித்திய ஜீவனைப் பெறுவாய்! நபி மணி (ஸல்)

**அல்-ஹாஜ் மௌலானு மௌலவி. எம். ஜே. கலீலுர் ரஹ்மான் (பாகவி)**

யின் புதல்வியான பாத்திமா பத்தூலின் அடிச்சுவட்டைப் பின்பற்றி அன்னிய ஆடவர்களது கண்களைவிட்டு மறைந்து வாழ்வாயாக! அப்பொழுதுதான் ஷப்பீரான ஹீஸைனைப்போன்ற வீரமக்களை ஈன்றெடுக்கும் திறனை அடைவாய்!

முஸ்லிம் பெண்ணே! முஸ்லிம் சமுதாய இழி நிலைக்கு முற்றுப்புள்ளி வைத்திடுவது உன்னுல் முற்றும் சாத்தியமானதேயாகும்; குர் ஆனின் பக்கம் ஆடவர்களில் அறிவாளிகளாயுள்ளோருக்கு அழைப்புக்கொடு! ஹஸ்ரத் உமருடைய சகோதரியானவர் குர் ஆனை ஓதிக்காட்டுவதன் வாயிலாக தனது சகோதரரது, ஆத்மீக அதிர்ஷ்டத்தைத் திருத்திஅமைத்துவிட்டார்.

### "இக்பால் உரைக்கோவை"

இக்பால் நினைவு தினத்தை வானெலி நேயர்களோடும் பகிர்ந்து கொள்ளுமுகமாக, "இக்பால் உரைக்கோவை" ஒன்றினை இலங்கை முஸ்லிம் எழுத்தாளர் சங்கத்தினர் ஒழுங்கு செய்துள்ளனர்.

இந் நிகழ்ச்சி 21ந் திகதி செவ்வாய்க்கிழமை இரவு 8 மணி முதல் 8-30 மணி வரை ஒலிபரப்டாகும்.

ஜனுப் ஏ.எம்.ஏ. அஸீஸ் அவர்கள் இந் நிகழ்ச்சியை நடத்துவார்கள். முன்னணி எழுத்தாளர்களான, 'அண்ணல்', எம். ஏ. ரஹ்மான், எம்.ஏ. எம். சுக்ரீ, மௌலவி யூ. எம். தாஸின் ஆகியோர் பங்குபற்றி, தங்களுக்கேயுரிய தனிவழியில் இக்பாலைக் கண்ணேட்டமிடுவர்.

## மணிக்கவி தந்த இக்பால்

"கனியினும் நனியினிய
கவி புனைந்தோன்
இனிமைக்கு உயிரூட்டி
உணர்வூட்டினேன்
பனி மலரையும்
கற்கண்டுப் பாகையும் நிகர்
மணிக் கவி தந்த இக்பா
லெனும் பெயரோன்"

என்று புலவர் பெருமக்களால் புகழ்ந்துரைக்கப்பட்டவர் கவிஞர் அல்லாமா இக்பால். அமிழ்து விளையும் தனது தீங்கவிகள் மூலம் 'தீன்' முழக்கம் புரிந்தார் இக்பால். அரபி இலக்கியத்திற்கு இமாம் பூஸரி (ரஹ்)வைப் போன்று, பாரசீக இலக்கியத்திற்கு ரூமியைப் போன்று, ஆங்கில இலக்கியத்திற்கு மில்டனைப் போன்று, தமிழ் இலக்கியத்திற்குப் பாரதியைப் போன்று வங்காள இலக்கியத்திற்குத், தாகூரைப் போன்று உர்தூ இலக்கியத்திற்கு இக்பால் உயிரூட்டினர். உறங்கிக் கிடந்த உர்தூ பேசும் மக்களை விழிப்பூட்டியதோடு, தாழ்ந்து கிடந்த முஸ்லிம் சமுதாயத்தை உயர்த்தினர். அறம் கூறும் அரசியல் வாதியாகவும், சட்டம் பேசும் வழக்கறிஞராகவும் கல்விபோதிக்கும் பேராசிரியராகவும், மொழி வளர்க்கும் பன்மொழிப் புலவராகவும் இக்பால் சிறந்து விளங்கினர். எனினும் கவிஞர் என்ற முறையில் அவர் சிறந்து விளங்குவதால், அவரின் கவிதைகளிலே கமழும் நயங்களைக் காண்போம்.



"இளம் பிறை தாங்கி வரும்
நாம்
இரு மருங்கினும்
நுண்ணியதாய்
வாளாயுதங்களின்
சாயலிலே
வளர்ந்து வாலிப
முற்ருேம்"

**எம். எஸ். எம். நாஸிர்**

என்று நம் பெற்றியினை விளக்குகிருர். முஸ்லிம்களாகிய நாம் வீரத்திலே மற்ருேர்க்குச் சளைத்தவர்கள் அல்ல என்ற பேருண்மையை இக் கவி தன்னுடைய உரிப் பொருளாகக் கொண்டுள்ளது. முஸ்லிம்களுக்கு அடையாளமாகப் பிறை சூட்டப்படுவது வழக்கம். இதையும் கவிஞர் மறவாமல் உணர்த்துகிருர். இஸ்லாமிய வீரர்களான இஸ்லாத்தின் இரண்டாவது கலீபா ஹஸ்ரத் உமர் (ரலி)

(9-ம் பக்கம் பார்க்க)



## அறிஞர் இக்பால்

**—"அண்ணல்"—**

பஞ்சாப்பின் உறுப்பான சியால்கோ டென்னும்
பண்போங்கு நந்நாட்டில் பிறந்து வையம்
எஞ்ஞான்றும் புகழ்க்கொடி வீசுகின்ற
இயறகவிஞன் புலமைக்குள் இலட்சியத்தை
அஞ்சாது எடுத்துரைத்த அறிஞன் இக்பால்
அகத்தினிலே உயர்பண்பால் தனித்துவத்தை
நெஞ்செல்லாம் நிறைத்தன்பால் இகந்தன்னை
நேர்வழிக்கு திருப்புதலை நெறியாய்க் கொண்டார்.

தத்துவத்தில் ரூமியைப்போல் கவிதை தந்து
தரமான காவியத்தால் மில்டன் கம்பன்
ஒத்தவராய் உணர்ச்சி வெறிப் பாடல்செய்து
ஒப்பானர் ஷெல்லி, ஹாபிஸ், பாரதிக்கு
சித்தத்தில் செயலறியா நிலையைப் பாடிச்
சேர்ந்தா(ர்) எம்முதந்நபியை டெர்ன்னிசினைப்
புத்துணர்வைத் தருமியற்கை வர்ண னைக்குப்
புகழ் காளிதாசனைத் தனியாய்க் கொண்டார்.

பன்னுகளும் ரூபியாத்தும் பகிடிப் பாட்டும்
பயனுள்ள இரங்கற்பா வகையும் மற்றும்
உள்ளத்தை அள்ளுமுயர் கவிதை தந்து
உலகோரின் பெருமதிப்பைப் பெற்ற வள்ளல்
விள்ளு பெருங்க ருத்தெல்லாம் மாகவிக்கு
வாய்த்ததுவே வாழ்க்கை பெறும் வையத்தில்
நல்லதுவே சொன்னதனுல் அவரின் நாமம்
நம்நிலைக்குள் கூடியதாய் நாளும் கண்டோம்.

இதயத்தை ஈர்ப்பதற்கு எழிலைச் சேர்த்துவைத்து
இன்பத்தை இயற்கை யெலாம் இறைவன்
உதயத்து மலர்களிடை மலக்கும் சக்தி
ஒருபகலும் நிலைப்பதிலை மாலைக் காட்சி
நதியெல்லாம் அழகேற்றும் ஒரு கணத்துள்
நமைமாற்றி அவையெல்லாம் எங்கே ஏகும்
இதயத்தான் எழிலுண்டோ? கலைஞர் செய்யும்
சிருஷ்டியாலே நிலைக்குமெனில் கலையாய் மாறும்.

## பண்ணரசர் அல்லாமா

**—இப்னு உமர்—**

பண்பார்ந்த குணக்குன்று பணிவார்ந்த இனத்தொண்டர்
இன்பார்ந்த புலமை ஏறு—நன்ருேதும்
பொருளார்ந்த கவிஞன்பிரான் புகழார்ந்த மொழிவலவர்
அருளார்ந்த பேரறிஞர் அல்லாமா!

மானுடர்தம் புவிவாழ்வு வழமையுறு வகைபலவும்
தானுணர்ந்து கவிதந்த தகையாளர்—'தீன்'நெறியை
நீள்நிலத்து மனிதர்குலம் நெஞ்சினி லிருத்தி;யதில்
வாழ்வுபெறச் சொன்னர் வழு.

பேச்செல்லாம் இறைமார்க்கம் பேசினர்; தான்விட்ட
மூச்செல்லால் நபிவிதி மூழ்கினர்—வாய்ச்சொல்லில்
பண்டையப் பழமையினைப் பாரறிய மாரடித்துக்
கொண்டாரைச் சாடியகவிக் கோ.

வல்லானின் மறையினையும் வள்ளல்நபி வாழ்வினையும்
சொல்லாலுஞ் செயலாலுஞ் சூழ்ந்து—எல்லோரும்
ஏங்கிடவே வையத்தில் ஓயாதுழைத் துழைத்து
ஏங்கினர் கண்டின விழிவை.

திறம்மிகுந்த சமுதாயச் சிற்பிஅறி வுரைத்தலிலே
வரமிகுந்த அறி ஞண்ணல்—மறம்மிகுந்த
அன்னியருங் கிலிபிடிக்க ஆழ்ந்தவுயர் தத்துவத்தைப்
பண்ணினிலே பகர்ந்த பா.

மண்மூடிப் போகின்ற வழிகொண்டு; வாழ்க்கையிலே
கண்மூடிப் பழக்கமே கைக்கொண்டு—மண்வாழ்வில்
உளங்குன்றி வலியின்றி உணர்வற்ற இனத்தோர்கள்
வளங்காணப் பகர்ந்தார் வழி.

பேரறிவிற் சூரியனும் பெருமைமிகு தாவலவர்
சீர்மைமிகு மானிடத்தைச் சித்திரித்து—பாரறியா
உண்மையினை எடுத்துரைத்த உயர்கவிஞர் இக்பாலின்
பண்ணுக் கிடெது பகர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 3-ஆண்டுத் திட்டம்: 8-ம் படிவம் வரை படிக்க வசதி

## தோட்டப் பாடசாலை தரம் உயர்த்த முயற்சி

### தோட்டத் துரைமார் சங்கத்துக்கு இ. தொ. கழகத் தலைவரின் கடிதம்

தோட்டப் பிள்ளைகளின் கல்வி அறிவை வளர்ப்பதற்காக இலங்கைத் தொழிலாளர் கழகம் தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது. தோட்டப் பாடசாலைகளின் தரத்தை உயர்த்தித் தோட்டச் சிறுர்களுக்கு 8ம் படிவம் வரை தோட்டப் பாடசாலைகளிலேயே வசதி செய்து கொடுக்க வேண்டுமென இ. தொ. கழகம் தோட்டத் துரைமார் சங்கத்தை வற்புறுத்தி வருகிறது. இது பற்றி இ. தொ. கழகத் தலைவர் டாக்டர் நாகநாதன் தோட்டத் துரைமார் சங்கத்துக்கு எழுதியுள்ள ஒரு கடிதத்தில் தோட்டப் பாடசாலைகளில் அடுத்த ஆண்டில் 6ம் படிவம், அதற்கு அடுத்த ஆண்டில் 7ம் படிவம், மூன்றுவது ஆண்டில் 8ம் படிவம் என உயர் வகுப்புகளை ஆரம்பித்து நடத்த வேண்டுமெனக் கோரியுள்ளார். இது சம்பந்தமாக இ. தொ. கழகத் தூதுக் குழுவொன்று தோட்டத் துரைமார் சங்கப் பிரதிநிதிகளுடன் பேச்சு வார்த்தை நடத்துவது சாத்தியமே என்று இ. தொ. கழக வட்டாரங்கள் கூறின.

டாக்டர் நாகநாதன் தோட்டத் துரைமார் சங்கத்துக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருப்பதாவது:—

"தோட்டத் தொழிலாள மக்கள் முன்னுள்ள சகல பிரச்சினைகளையும் மனதிற் கொண்டு, அவற்றை எந்த வகையில் சிறப்பாகத் தீர்க்கலாம் என்று இலங்கைத் தொழிலாளர் கழகம் அதன் ஆரம்பத்திலிருந்தே ஆலோசித்து வருகின்றது.

இத் தொழிலாள மக்களின் முன்னேற்றத்துக்கும், அவர்களது பல்வேறு பிரச்சினைகளின் தீர்வுக்கும் கல்வி நிலை உயர்த்தப்படுதலே அவசியமாகிறது என்றே எங்களுக்குப்படுகிறது. ஆகவே, அது உங்களதும், அரசாங்கத்தினதும் உடனடிக் கவனத்துக்குரியதொன்ருகும்.

#### தாமதம் வேண்டாம்

இந்த மறுமலர்ச்சி யுகத்திலே, ஒரு முழுச் சமூகத்தின் கல்விப்போதனைத் தேவைகளையிட்டு மாற்ருந்தாயின் அக்கறைகூடக் காட்டப்படாது, ஒதுக்கப்பட்டு, அதன் விளைவாக அச் சமூகம் நாட்டின் கலாச்சாரத்துக்கும், நாட்டு அரசியலுக்கும் தனது பங்கைச் செய்யமுடியாத நிலையில் தள்ளப்பட்டிருப்பது உண்மையிலேயே மனவேதனையளிப்பதாகும்.

ஒரு நாட்டுமக்களின்கல்வி முன்னேற்றத்துக்காக வேண்டிச் செலவழிக்கப்படும் பணம், நாட்டின் சிறந்த பொருளாதார மூலதன முடக்கல்களிலொன்றென கருதப்பட்டபோதும், ஒரு முழுச் சமூகம், தக்க கல்வி வசதிகள் கிடைக்காததன் பயனுக, அநாகரிகமான சூழ்நிலையில் தமது வாழ்க்கையைக் கழிக்க விடப்பட்டுள்ளனர். இந்த முக்கியமான பிரச்சினையைத் தீர்ப்பதில் மேலும் தாமதம் காட்டினுல் அது இந்த நாட்டின் நலனுக்கும், தோட்டத் தொழிற்றுறையின் நலனுக்கும் கேடு விளைவிக்கக்கூடும் என இலங்கைத் தொழிலாளர் கழகம் கருதுகிறது.

#### திருத்தங்கள் வேண்டும்

தோட்டப் பிள்ளைகளின் கல்விப்பொறுப்பு முழுவதும் தோட்டமுதலாளிகளுடையதல்ல என்பதை நாம் உணர்வோம். தற்போதிருந்து வரும் சட்ட அமைப்புக்குட்பட்டதே எமது கோரிக்கையாகும்.

ஐந்துக்கும் பதினுன்கு வயதுக்கு முட்பட்ட குழந்தைகளின் பெற்றோர், அவர்களைத் தோட்டப் பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்க வேண்டுமென்று சட்டம் கோருகின்றது. ஆனுல், உண்மை நிலை என்னவென்ருல் 5-ம்வகுப்புவரைக்குமே அதுவும் எழுத்து, வாசிப்பு, கணிதம் ஆகிய பாடங்களில் மட்டுமே கல்வி அளிக்கப்படுகின்றது. சாதாரணமாக ஒரு மாணவன் தனது பத்து வயதிலே 5-ம் வகுப்புத் தேறியிருப்பான். ஆனுல் தற்போதைய சட்டத்தின் படி, பத்திலிருந்து பதினுலு வயதுவரை உள்ள மாணவர்கள் எவ்வித கல்வியும் பெறுகிறுரில்லை. இந்த இடத்தில் தான், நாம் சில திருத்தங்களைக் கோருகிறேம்.

எங்களுடைய கோரிக்கை என்னவெனில், உங்கள் சம்மேளனத்தில் அங்கத்துவம் வகிக்கும் எல்லாத் தோட்டங்களும், அடுத்த வருடம் தொடக்கம் மேல் வகுப்பொன்றை ஆரம்பித்து, இப்படியே அடுத்த மூன்று வருடங்களுள், எல்லாத் தோட்டப் பாடசாலைகளிலும் எட்டாம் வகுப்புவரை கல்வி போதிக்கப்பட வசதிசெய்ய வேண்டுமென்பதே.

அத்துடன், இப்பாடசாலைகளில் பயிற்றுவிக்கும் பாட அட்டவணையை விஸ்தரித்து கல்விநிலையில் முன்னேற்றம் காண நடவடிக்கை எடுப்பதன்மூலம், அவற்றை அரசாங்க பாடசாலைகளின் தரத்துக்குக் கொண்டுவர முயல வேண்டுமெனவும் உங்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேம்.

உங்கள் வசதியின்படி, உங்களுடன் இவ்விஷயத்தையிட்டுக் கலந்துபேசும் சந்தர்ப்பத்தை எமது கழகத்தின் தூதுக்குழு மகிழ்ச்சியுடன் வரவேற்கிறது."



பாட்டாளி முதல்



பணக்காரன் வரை

எல்லோரும் புகைப்பது

கமலா பீடி

ஒரு முறை வாங்கி உபயோகித்தால் அதன் உண்மை விளங்கும்

கமலா ஸ்டோர்ஸ்

தந்தி தாமரை

நிர். 15, செட்டியார் தெரு, கொழும்பு-11

3597—6522

# காங்கிரஸ் உறுப்பினர் கழகத்தில் சேர்ந்தனர்

## அப்புத்தளை வட்டத்தில் புதிய கிளை

அப்புத்தளை வட்டத்திலுள்ள இதல்கஸ்ஹின்ன தோட்டத்தைச் சேர்ந்த 240 தொழிலாளர்கள் தாங்கள் இதுவரை அங்கத்துவம் வகித்துவந்த ஜனநாயக காங்கிரஸை (அசிஸ் காங்கிரஸ்) விட்டுக் கூட்டாக விலகி இலங்கைத் தொழிலாளர் கழகத்தில் சேர்ந்துள்ளனர். இதை அவர்கள் தோட்ட சுப்பிரின்டென்டன்டுக்கும் அறிவித்து சென்ற ஞாயிறு (12-4-64) அவர் அனுமதியுடன் தோட்டத்தில் தேர்தல் கூட்டத்தையும் பகிரங்கமாக நடத்தினர்.

கூட்டம் அட்டன் மாவட்டப் பிரதிநிதி திரு. செ. கலியபெருமாள் தலைமையில் நடைபெற்றது. கூட்டம் ஆரம்பமாகுமுன் கழகத்தின் மூவர்ணக்கொடி ஏற்றிவைக்கப்பட்டது. திரு. கலியபெருமாள் தமது தலைமை உரையில் இலங்கைத் தொழிலாளர் கழகம் ஆரம்பித்த பொழுது கழகத்தின் மலைநாட்டு வருகையை விரும்பாதவர்கள் கழகத்தைப் பற்றி பல அவதூறுகளைக் கூறினுர்கள் என்றும், ஆயினும் கழகத்தின் விரோதிகளின் பொய்ப் பிரசாரங்களை தோட்டத்தொழிலாளர்கள் நம்ப மறுத்து பல ஆயிரக்கணக்கில் கழகத்தில் சேர்ந்து வருகிறுர்கள் என்றும் கூறினுர்.

மலை நாடு

#### நமது ஆதரவு உண்டு

அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தலைவர் திரு. செ. கோமேசுவரன் பேசுகையில், மலைநாட்டுத் தமிழ் தொழிலாளர்கள் குடி உரிமை, வாக்குரிமையை இழந்த போது தமிழ் பேசும் இனம் தனது சக்தியில் அரைப் பங்கை இழந்ததென்றும் அரசாங்கம் தோட்டப்பகுதிகளில் வாழும் தமிழ் தொழிலாளர்களை சிங்களவராக்க முனைகின்றதென்றும் அதன் காரணமாகவே தோட்டப் பாடசாலைகளில் சிங்கள மொழி மூலம் கல்வி புகட்ட வேண்டுமென கல்விவெள்ளை அறிக்கை கூறுவதாகவும் சொன்னுர். தாய் மொழிக் கல்வியே போதுமான அளவு இல்லாத தோட்டத் தொழிலாளர்களுக்குச் சிங்களம் தேவை இல்லையென்றும் தொழிலாளர் தங்கள் குழந்தைகளை எக்கஷ்டப்பட்டேனும் தாய்மொழிமூலம்கல்வி கற்க வைக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

திரு. கோமேசுவரன் மேலும் பேசுகையில், தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படை பிரச்சினைகள் அனைத்துக்கும் காரணம் அவர்கள் குடி உரிமை, வாக்குரிமை இன்றி இருப்பதே என்றும், இவ்விரண்டு உரிமைகளையும் தோட்ட மக்கள் பெற்ருலன்றி, அவர்கள் வாழ்வில் ஒரு பொழுதும் மறுமலர்ச்சி ஏற்படாது என்றும், தோட்டத் தொழிலாளர்களின் இந்த அடிப்படை உரிமைப் போராட்டத்திற்கு இதர தமிழ்பேசும் தொழிலாளவர்க்கத்தின் ஒன்று திரண்ட ஆதரவு உண்டென்றும் கூறினுர்.

> **வேண்டுகோள்**
>
> கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சையில் (எஸ். எஸ். ஸி.) சித்தியடைந்த இலங்கைப் பிரஜாவுரிமை உடைய மலைநாட்டைச் சேர்ந்த இரு பாலாரிடமிருந்தும் இலங்கைத் தமிழரசுக் கட்சி விபரம் கோரியுள்ளது. முழுப் பெயர், முகவரி மற்றும் விபரங்களைக் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.
>
> நிர்வாகச் செயலாளர்,
> இலங்கைத் தமிழரசுக் கட்சி,
> 16, அல்பிரட் ஹவுஸ் தோட்டம்,
> கொழும்பு-3.

#### ஆயிரம் ரூபாய்த் திட்டம்

திரு. வெ. கிருஷ்ணசாமி பேசுகையில், இலங்கை அரசாங்கம் இந்தியாவுக்குச் செல்ல விரும்புவோருக்கு ரூபாய் ஆயிரம் வழங்குவது என்ற திட்டம் உருவாக்கியது இந்நாட்டிலே பிறந்து வளர்ந்த மலைநாட்டுப் பாட்டாளிகளை இந்நாட்டிலிருந்து விரட்டுவதோடு நின்றுவிடாதென்றும் உண்மையில் அவர்கள் பாடுபட்டு சேத்து வைத்திருக்கக்கூடிய உடைமைகளையும் இந்த அரசாங்கத்துக்குக்கொள்ளை கொடுத்துவிட்டுச் செல்ல வேண்டிய பரிதாப நிலையை உருவாக்கும்என்றும் ஆகவே யாரும் இச்சூழ்ச்சிக்குப் பலியாகக் கூடாதென்றும் கூறினுர்.

மற்றும் திரு. எஸ். மணி, கே. பிச்சைமுத்து ஆகியோரும் பேசினர். கீழ்க்கண்ட தோட்டக்குழு தெரிவு செய்யப்பட்டது.

#### தோட்டக்குழு

தலைவர்: ஆர். பழனி, துணைத்தலைவர்: பி. சின்னையா, செயலாளர்: ஆர். சின்னையா, துணைச்செயலாளர்: எம். முருகையா, பொருளாளர்: வி. கே. கருப்பண்ணன், கலக்டர்: என். மூக்கையா.

ஆட்சிக்குழு உறுப்பினர்: திருவாளர்கள்:—எம். ஆர். வீரன், மலக்கொழுந்து, எம். இராசகோபால், பி. ஆறுமுகம், ஏ. முருகன், எஸ். மாயன், ஏ. முருகன் செட்டியார், ஏ. மாரியப்பன், பி. பழனிவேலு, ஏ. துரைசாமி, வி. கருப்பையா, ஆறுமுகம், கே. பிச்சைமுத்து, எம். முத்துசாமி, பி. மருதமுத்து.

### மனிதவேட்டைக்குத் தடை

இராசாத் தோட்டம் பணிய கணக்கு பாரதி மன்றம் 14—3—64ல் 'மனித வேட்டை' என்ற நாடகத்தை நடத்தவிருந்ததாகவும், இந்நாடகத்தை அரசாங்கம் தலையிட்டுத் தடை செய்துவிட்டதாகவும் தெரிகிறது. 13ம் திகதியன்றே தடை விதிக்கப்பட்டதால், நாடகம் ரத்தானது பற்றி விளம்பரம் செய்யமுடியாததால் பாரதி மன்றத்தார் உடனே 'கங்காணி மகள்' என்ற நாடகத்தை அரங்கேற்றிச் சபையோரை மகிழ்வூட்டினர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தனுஷ்கோடியில் கிடைத்த பிரபல சினிமா நடிகரின் வரவேற்பு

## கண்டங்கள் தாண்டி புண்ணிய கண்டம் நாம் அடைந்தோம்

**பல கண்டங்களைக்கடந்து புண்ணிய பூமியில் கால் வைக்கிறோம். புண்ணிய பூமி என்பதற்கு பொருத்தமான தன்மை இப்பூமிக்கு இருக்கிறது. தனுஷ்கோடியிலேயே பிரபல சினிமா நடிகர் ஒருவர் எம்மை எதிர்கொண்டு வரவேற்கிறார். 'எக்ஸ்பிரஸ்' திருச்சியை அடைந்ததும், பெரியார் ஈ. வே. ராவைக் காணப் போகிறோம். எவ்வளவு காலத்தைய ஆசை..................**

இலங்கையில் நாங்கள் அனுபவித்த சோக ரஸம் ததும்பும் "பாஸ் போர்ட்" படலத்தையும், "எக்ஸ்சேஞ்ச்" ஸ்டண்டையும், கப்பலில் பட்டினி கிடந்து பட்ட அவதியையும் அந்த மேல் நாட்டு மூதாட்டிக்கு ஒரே மூச்சில் கூறி முடித்தேன்.

'ம்...! அப்புறம்?' என்று உற்சாகமூட்டினார் பாட்டி.

அன்று காலை 10 மணிக்கு சேய் நாட்டின் கரையிலிருந்து புறப்பட்ட எங்கள் கப்பல் தாய் நாட்டின் கரையை அடையும்போது மத்தியானம் 12-30 ஆகிவிட்டது. ஆம், தனுஷ்கோடியை அடைந்து விட்டோம்.

### எமகண்டம்

பாரத புண்ணிய பூமியில் (இந்தியாவைப் 'புண்ணிய பூமி' என்பதன் உண்மை மையைத் தனுஷ்கோடியில் பிரத்தியட்சமாகக் காண 'எஸ் பாட்டி எஸ்! சினிமா நடிகரேதான்! அதிலும் சாதாரண நடிகரல்ல; பிரபல நடிகர். இதற்கிடையில் 100க்கு மேற்பட்ட படங்களில் நடித்திருக்கின்றார். அவர் நடிக்காத படங்களே ஒன்றிரண்டுதான்! தமிழ் நாட்டில் நல்ல வசூலைப் பெற்ற 'பராசக்தி', 'இருவர் உள்ளம்', எத்தனையோ வெற்றிப் படங்களில்

நவம்

நடித்துள்ள அந்த நடிகரைக் கண்ட மாத்திரத்தில் அது வரை நமக்கிருந்த சோர்வு —களைப்பு எல்லாம் எங்கோ மாயமாக மறைகின்றன. அந்த உற்சாகத்தில், 13 ரூபா 35 சதம் பெறுமான முள்ள பவுண் நோட்டுகளிற் சிலவற்றை 10 ரூபாவுக்கும், 11 ரூபாவுக்குமாக நஷ்டத்தில் இந்தியநோட்டுக்களாக அதன் 'ஸஸ்பென்ஸ்' எங்கே போவது?'

அதற்குமேல் அந்த மூதாட்டி என்னை வற்புறுத்தவில்லை. ஒரு வேளை இதை மலைக்கோட்டைப் பிள்ளையார் முகாம் போட்டிருக்கும் திருச்சி மாநகர் வந்திருக்காவிட்டால், என்னைத் தொந்தரவு பண்ணி உண்மையைக் 'கக்க' வைத்திருப்பாரோ என்னவோ!

கடிகாரத்தைப் பார்க்கின்றோம். 5 மணி காட்டுகிறது அது. வெளியே கழுத்தை நீட்டிப் பார்க்கின்றோம். 'என்ன ஸார் விழிக்கிறீங்க? நான்தான் திருச்சி. உங்கள் மலைக்கோட்டைப் பிள்ளையார் அதோ இருக்கின்றார். கீழே இறங்குங்கள்' என்கின்றது திருச்சி நகரம்.

### பாட்டி பிரிந்தார்

காலை 11-30க்குக் கோவையில் நம்மைஏற்றிக்கொண்டு மோடு பிரயாணம் செய்த- எம்மை இராமேஸ்வரத்துக்கு அழைத்துச் சென்ற— அந்த சினிமா 'ஸ்டார்' யாரென்பதையும் அப்போது கூறிவைக்கின்றேன். சென்று வாருங்கள் பாட்டீ!' என்று அதுவரை நம்மோடு பிரயாணம் செய்த அந்தப் பொல்லாத பாட்டிக்கு விடைகொடுத்து விட்டு, நேரே புகழ பெற்ற திருச்சி ரெயில்வே ஸ்டேஷனுக்கு நடையைக் கட்டுகின்றோம்.

நமது அதிர்ஷ்டமோ? அல்லது அந்த மூதாட்டியின் அதிர்ஷ்டமோ? அதற்கப்புறம், நமது தமிழ் நாட்டுப் பிரயாணம் முடியுமட்டாக அந்த மூதாட்டியை நாம் சந்திக்கவே இல்லை!

### எட்டுக்குத்தான் 'லோக்கல்'

திருச்சி ரெயில்வே ஷ்டேஷனை நாம் ஏன் 'புகழ்பெற்ற ஸ்டேஷன்' என்று குறிப்பிடுகின்றோம் என்றால், தமிழ் நாட்டிலேயே திருச்சி அமைப்பில் வேறு எந்த ஸ்டேஷனும் இல்லாதிருப்பதே! அப்படி அதில் என்ன விசேஷம் என்றால்,'அண்டர்கிரவுண்ட்' 'பிளாட்போம்' அங்குதான் உள்ளது. ரெயிலில் இருந்து இறங்கும் பிரயாணிகள் நிலத்துக் கூடாகப் புகுந்து தான் வெளியில் வர முடியும். அந்த 'நிலவறை' வழியை மிக அழகாகக்கட்டி இருக்கின்றார்கள்.

நாமும் இப்போ அதன் வழியாகப் புகுந்து உள்ளே செல்கின்றோம். நாம் இன்று காலை 10 மணி சுமாருக்குக் கோவையிலிருந்து புறப்பட்ட 'லோக்க'லில் அடைத்து அனுப்பிவைத்த, நமது சக பிரயாணிகளை 'மீட்' பண்ண வேண்டுமல்லவா?

'அந்த வண்டியா? அது இங்கு வருவதானால் இரவு 8 மணிக்கு வர வேண்டும். இன்று எத்தனைக்கு வந்து சேருகின்றதோ? எதற்கும் நீங்கள் எட்டிலிருந்து பாருங்கள்' என்று பதில் கிடைக்கின்றது. 'அட ஆண்டவா! பஸ்ஸுக்கும் ரெயிலுக்கும் இத்தனை வேறுபாடா?' என்று வியந்து கொண்டு, வெளியே வருகின்றோம். அப்படி வந்த நம்மை ஒரு சுவரொட்டி விளம்பரம் கவருகின்றது.

'தந்தை பெரியார் இன்று மாலை 6-30 க்கு திருச்சி டவுண்ஹால் மைதானத்தில் பேசுகின்றார்' என்று அதில் கண்டிருக்கின்றது. நேரத்தைப் பார்க்கின்றோம். சரியாக 6 மணி. வண்டி வருவதற்குத்தான் இன்னும் 2 மணித்தியாலமிருக்கின்றதே என்று 'டவுண் ஹால்'மைதானத்தை நோக்கி நடைபோடுகிறோம்.........

(வளரும்)


**சுதந்திரன் விற்பனையாளர்கள்**

யாழ்ப்பாணம்
த. தம்பிதுரை,
226, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

நல்லூர்
க. சண்முகநாதன்,
நல்லூர் சந்தை,
நல்லூர்.

சாவகச்சேரி
பெ. மகாலிங்கம்,
லிங்கம் ஸ்டோர்ஸ்,
சாவகச்சேரி.

எஸ். அய்யாதுரை,
ஆனந்தவாசம்,
சாவகச்சேரி.

கொடிகாமம்
அ. கணேசன்,
ஸ்ரீ கிருஷ்ண விலாசம்,
கொடிகாமம்.

கரவெட்டி
எஸ். முருகேசு,
நெல்லியடி,
கரவெட்டி.

பருத்தித்துறை
வட இலங்கை புத்தகசாலை,
பிரதான வீதி,
பருத்தித்துறை.


# குமரி முதல் சென்னை வரை-2

முடிகின்றது. இங்கே பூமிக்குப் பாரமாக எந்த வித மரஞ்செடியோ-அட் லீஸ்ட் புல் பூண்டுகளோ கிடையாது! நெடுந் தூரத்துக்கு நெடுந்தூரம் பூமித்தாய் 'ப்ரீ'யாக —நிம்மதியாக விரிந்து கிடக்கின்றாள்!) கால் வைத்த நாம் பிற்பகல் ஐந்து மணி மட்டில்தான், 'சுங்க பரிசோதனை' என்ற எமகண்டம் தாண்டி, விடுதலை பெற்று வெளியே வருகின்றோம்.

சுருக்கமாகச் சொல்லப் போனால், இலங்கையில் நாம் கப்பல் ஏறு முன்னம் நடந்த சுங்கப் பரிசோதனை-X 50=தனுஷ் கோடியில் நடந்த சுங்கப் பரிசோதனை!'

'இங்கு அத்தனை'ஸ்ட்ரிக்ட்டா?'

'ஸ்ட்ரிக்ட்டா?' குழந்தைக்குக் கொண்டுவந்த 'ஹார்லிக்'ஸைப் பற்றி அவர்கள் நடத்தும் குறுக்கு விசாரணை ஒன்றே போதும் ஏழேழு ஜென்மத்துக்கு!' (இதே 'ஸ்ட்ரிக்ட்' திரும்பவும் நாம் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வரும்போது இலங்கைக் கரையில் கைக் கொள்ளப்படுகின்றது)

'பேஷ்! பேஷ்! அப்புறம்?'

### பிரபல சினிமா நடிகர்

'ஒட்டிய வயிறோடு, வற்றிய நாவோடு, குழி விழுந்த கண்களோடு, சுங்கப் பகுதியிலிருந்து விடுதலை 'வீரர்'களாக வெளியேறிய நமக்கு ஓர் அதிசயம் வெளியில் காத்திருக்கின்றது. இலங்கை யாத்திரீகரான நம்மை இராமேஸ்வரத்துக்கு அழைத்துச் செல்வதற்காக ஒரு பிரபல சினிமா நடிகரே நேரில் வந்து காத்துக் கொண்டு நிற்கின்றார்!'

'வாட்? சினிமா ஸ்டார்?'

மாற்றிக் கொள்ளுகின்றோம் (இந்தப் பவுண் நோட்டுக்களைப் பண நோட்டுக்களாக மாற்றிப் பண வியாபாரம் செய்யும் கூட்டம் இங்கு நிறைய உண்டு!)

'மாற்றிய பணத்துக்கு 'ஆரஞ்சும்' 'களனித் தண்ணி' 'ஸ்வீட்' அடிக்கும் டீயுமாக வாங்கி வெளுத்துக் கட்டுகின்றோம். நம் கோஷ்டியில் இருந்த இன்னும் பலர். 'பழத்தாலும், டீயாலும் இந்தப் பயங்கரப் பசி அடங்கப்போவதில்லை' என்று கண்டு முழுசாக ஒரு ரூபா கொடுத்து 'சாப்பாடு' என்ற 'பொதி'யை வாங்கிச் சாப்பிடுகின்றார்கள். இத்தனை பரபரப்புக்குப் பின் சரியாக மாலை 6 மணிக்குப் புறப்பட்ட அந்த லோக்கல் வண்டியில் ராமேஸ்வரம் நோக்கிப் புறப்படுகின்றோம் நாம். சினிமா நடிகரும் கூடத்தான்!

### திருச்சி வரவேற்றது

பாட்டிக்குப் பொறுமை தாங்கவில்லை. 'யார் அந்த நடிகர்? எம். ஜியா? சிவாஜியா? ஜெமினியா? அல்லது சரோஜாதேவிதானா?' என்று தமிழ் நாட்டு நடிகர்களின் பெயர்களையெல்லாம் அடுக்கிக்கொண்டே போகத் தொடங்கி விட்டார்.

'பாட்டி தேவலையே! இந்தியாவுக்கு வந்த இந்தக் குறுகிய காலத்திற்குள், இந்திய சினிமா நட்சத்திரங்களின் பெயர்களையெல்லாம் அக்கு வேறு ஆணி வேறாகப் பிய்த்து எடுக்கின்றாரே! படுகிழவி தான்!' என்று நமக்குள்ளாகவே வியந்து கொண்டு மேலே பேசுகின்றோம் நாம். 'அதெல்லாம் யார் என்று இ[illegible] சொல்லமுடியாது பா[illegible] சொன்னால் கட்டுரையின் 'டெம்போ' குறைந்துவிடும்!

'டாண்' என்று ஐந்து அடிக்க 'கரெக்டாக'க் கொண்டு வந்து திருச்சியில் தள்ளி விட்ட, அந்த 'ஸ்டேட் எக்ஸ்பிரஸ்' பஸ்ஸின் முதுகில் தட்டிக் கொடுத்து விட்டுக் கீழே இறங்குகின்றோம்.

பஸ் நிலையத்திலேயே (ஸ்டேட் பஸ் பிரயாணிகளுக்கென்றே பிரத்தியேகமாகக் கட்டப்பட்டுள்ளது) அற்புதமான 'பாத் ரூம்', இளைப்பாறுமிடம் முதலிய சௌகரியங்கள் இருக்கின்றன. பஸ் புறப்படும் நேரம், போகும் இடங்கள், வேறு இடங்களிலிருந்து அங்கு வந்து சேரும் பஸ்களின் 'கால அட்டவணை' முதலிய எல்லா விபரங்களும் அழகாக அங்கு எழுதி வைக்கப் பட்டிருக்கின்றன ('ப்பூ! இது என்ன பிரமாதம்! நம் ஊர் பஸ் நிலையங்களிலும் அப்படி அட்டவணை போடப்பட்டுத் தானே இருக்கின்றது!'என்று கேட்பது காதுகளில் விழுகின்றது) உண்மைதான். ஆனால் அந்த அட்டவணைப் பிரகாரம் பஸ்கள் வந்து சேருகின்றனவா? என்றால் அதற்குக் கிடைக்கும் பதில் அவ்வளவு 'சுகமாக' இராது!

இதோ 'பாத் ரூமு'க்குள் நுழைந்து கால் முகம் கழுவிக்கொண்டு புதிய தெம்போடு வெளியே வருகின்றோம்.

'சுவையான உங்கள் பிரயாண வரலாறு முழுவதையும் கேட்க இயலாமற்போய் விட்டதே' என்று வருத்தப் படுகின்றார் பாட்டி.

'என்ன செய்வது? அந்த ரசனை இந்த அவசரக் குடுக்கை பஸ்ஸுக்கு இல்லாமற் போய்விட்டதே! சரி; [illegible] வரலாற்றையும் கூறுகின்றேன். கண்டிப்பாக எம்




**ரிஷி லேகியம்**

**ரிஷி கருணைக் கிழங்கு லேகியம்**

ரிஷி படம் உள்ளதாவெனப் பார்த்து வாங்கவும்

மலச்சிக்கலுக்கும், மூலவியாதிக்கும்
மூல முளைகள், இரத்த மூலம், சீழ் மூலம், வெளி மூலம், உள் மூலம், பௌந்திர கை கால் அசதி, சோம்பல், அஜீரணம், பசியின்மை, பத்தவாயு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், இடுப்பு வலி, நெஞ்சுவலி, புற்றுகள், கண் கை கால், திரேக எரிச்சல், தேக மெலிவு, மூலச் சூட்டினால் உண்டாகும் எல்லா வியாதிகளையும் உடனே கண்டிக்கும்.

விபரமடங்கிய கேட்லாக் இனாம்

**15 நாள் டின் ரூபா 3-00**
**30 நாள் டின் ரூபா 5-75**

தபால் செலவு /-95

**ஞானசுந்தர வைத்தியசாலை,**
187, செட்டியார் தெரு, கொழும்பு.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சுதந்திரன்

SUTANTIRAN

1964 ஏப்ரல் மாதம் 19-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.
தொலை பேசி எண் : 3411 த. பெ. 1183


## தொழிற்சங்க வரலாற்றிலே புதிய திருப்பம்

தமிழ்பேசும் தொழிற்சங்க இயக்கத்திலே ஒரு நீண்ட காலத் தேவை சென்ற வாரம் நிறைவேறியுள்ளது. அரசாங்கத் துறையிலுள்ள தமிழ் பேசும் தொழிற்சங்கங்கள் கூடி, அரசாங்கத் தொழிற்சங்கக் கூட்டணி என்ற பெயரில் ஒரு சம்மேளனத்தை நிறுவிக்கொண்டதே அந்தச் சாதனை. தனியார் துறையிலும் தொழிற்சங்க சம்மேளனமொன்று நிறுவப்படுமென்றுப் ஒரு செய்தி கூறுகிறது. இவ்விரு சம்மேளனங்களிடையே தொடர்பை ஏற்படுத்த ஓர் இணைப்புக் குழு ஏற்கனவே நிறுவப்பட்டுள்ளது.

இலங்கைத் தொழிற்சங்க வரலாற்றிலே இது ஒரு புதிய திருப்பம். மொழிவழித் தொழிற்சங்கங்களின் தேவை இன்று நேற்று ஏற்பட்டதன்று. இலங்கைத் தொழிற்சங்க வரலாற்றின் ஆரம்ப காலத்திலேயே இத்தகைய சங்கங்கள் தோன்றியிருப்பின், தமிழ் பேசும் மக்களின் பல்வேறு பிரச்சினைகளுக்கு முடிவுகாண உதவியாயிருந்திருக்கலாம்.

இன்று வாழைச்சேனை காகிதத் தொழிற்சாலைக் கூட்டரவில் சிங்கள அமுலை மொழிவழித் தொழிற் சங்கமே வெற்றிகரமாக தடுத்து நிறுத்தியது. இம்மாதிரி அன்று கொழும்புத் துறைமுகத்திலிருந்து 600 இந்தியத் தமிழ்த் தொழிலாளர்களை வெளியேற்றியபோது துறைமுகத்தில் மொழிவழித் தொழிற்சங்கமொன்று இருந்திருப்பின் அதனையும் தடுத்து நிறுத்தியிருக்க முடியுமல்லவா?

தொழிற்துறையிலே சிறுபான்மை மக்களுக்கு இழைக்கப்படும் இன்னல்களை எதிர்த்துப் போராட அவர்களுக்கெனத் தனித் தொழிற்சங்கங்களை அமைக்கவேண்டிய தேவை இன்று பன்மடங்கு அதிகரித்துள்ளது. இன்று மொழிப்பிரச்சினையின் மீது (சம்பளப் பிரச்சினையின் மீதல்ல) தமிழ்பேசும் ஊழியர்களைப் பலவந்தமாக வேலைநீக்கம் செய்கின்றனர். அரசாங்க சேவையில் ஆரம்பமான இந்த அநீதி கூட்டுத்தாபனங்களிலும் தனியார் துறையிலும் பரவி வருகிறது. இதனை எதிர்த்து தொழிற்சங்க ரீதியான போராட்டங்களை நடத்த மொழிவழித் தொழிற்சங்கங்களால் மட்டுமே முடியும். வர்க்கப் பிரிவின் அடிப்படையில் அமைந்த தொழிற்சங்கங்கள் இந்தப் பணியை நிறைவேற்ற முடியாது.

ஏனைய தொழிற்சங்கங்கள் பொருளாதார கோரிக்கைகளுக்காக மட்டுமே போராடுகின்றன. மொழிப்பிரச்சினையின்மீது தமிழ்பேசும் ஊழியர்கள் பழிவாங்கப்படும்போதெல்லாம் அவை மௌனம் சாதிக்கின்றன. ஆனால் மொழிவழி பிரிந்த தொழிற்சங்கங்களோ பொருளாதார கோரிக்கைகளுக்காக மட்டுமின்றி, உறுப்பினர்களின் அடிப்படை உரிமைகளுக்காகவும் போராடுகின்றன. இன, மொழி அடிப்படையில் அவர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை எதிர்க்கின்றன. இப்படிச்செய்வது வகுப்புவாதம் என்றும், அவை வகுப்புவாத தொழிற்சங்கங்கள் என்றும் கூறுகின்றனர் சில தொழிற்சங்கத் தலைவர்கள்.

உறுப்பினர்களின் ஜீவாதாரமான உரிமைகளுக்காகப் போராடுவது வகுப்புவாதமென்றால், மொழிப் பிரச்சினைமீது வேலைநீக்கம் செய்வதை எதிர்ப்பது வகுப்புவாதமென்றால், அந்த 'வகுப்புவாதம்' நீடூழி வாழட்டும்! என்று கூறுவதைத்தவிர வேறு வழி கிடையாது.

காலம் கடந்து தோன்றியதெனினும், இன்று தமிழ் பேசும் தொழிற்சங்கங்களின்றேல், சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த ஊழியர்களின் நிலை இன்னும் படுமோசமான கட்டத்தையே அடைந்திருக்கும். ஏனெனில், சில்லறை சலுகைகளைப் பெறுவதையே இலட்சியமாகக்கொண்ட தொழிற்சங்கங்கள் உறுப்பினர்கள் ஒருசாராரின் அடிப்படை உரிமைகள் அபகரிக்கப்பட்டபோது, அவர்களை நடுத்தெருவிலே கைவிட்டு ஓடிவிட்டன.

அச் சங்கங்களின் துரோகச் செயல்கள்தான் தமிழ் பேசும் தொழிற்சங்கங்களை இன்று வளர்த்து வருகின்றன. மலைநாட்டுத் தோட்டத் தமிழர்களையும் இதே பிரச்சினை இன்று எதிர்நோக்கியுள்ளது.

குடியுரிமையின்றேல் தோட்டத் தமிழர்களுக்கு இனி வாழ்வில்லை. விரைவில் அந்த உரிமையைப் பெற அவர்கள் தவறிவிடுவார்களாயின், வேலையிழந்து பசி பட்டினியாக தெருவில் நிற்கவேண்டிய நிலைதான் ஏற்படும். காங்கிரஸ்களும், இடதுசாரிச் சங்கங்களும் குடியுரிமைபெற்றுக் கொடுக்கத் தகுதியற்றவை. அதற்காகப் போராடும் எண்ணம் அவைகளுக்குக் கிடையாது. சில்லறைப் பொருளாதாரக் கொள்கைகளோடு அவைகளின் பணி முடிவடைந்துவிடுகிறது.

மொழிப்பிரச்சினை மீது ஊழியர்கள் வேலையிழக்கும்போது மௌனம் சாதிப்பதைப் போலவே, தோட்டத் தமிழர்கள் குடியுரிமைப் பிரச்சினையின்மீது வேலையிழக்கும்போதும் இச்சங்கங்கள் மௌனம் சாதிக்கும். இதில் ஐயம் வேண்டாம். குடியுரிமைப் பிரச்சினையில் அவை ஏற்கனவே தோட்டத் தமிழர்களைக் கைவிட்டு விட்டன.

எனவே ஒரு மொழிவழித் தொழிற்சங்கத்தால் மட்டுமே மலையகத் தமிழ்மக்களின் குடியுரிமைக்காகப் போராடமுடியும். தோட்டமக்களின் அதிர்ஷ்டம்-காலம் தாழ்த்தியேனும், அந்தச் சங்கமும் தோன்றிவிட்டது. அதுதான் இலங்கைத் தொழிலாளர் கழகம். அடிப்படைஉரிமைகளைப் பெறும் போராட்டத்தில் இ. தொ. கழகத்தை மட்டுமே (மொழிவழித் தொழிற்சங்கமாயிருப்பதால்) தோட்டத்தமிழர்கள் நம்பமுடியும்.

தொழிற்சங்கங்கள் அரசியற் பிரச்சினைகளிலே தலையிடக்கூடாதென சிலர் புத்திமதி கூறுகின்றனர். இன்று தொழிலாளியின் ஒவ்வொரு கோரிக்கையும்-சம்பள உயர்வு தொடக்கம் குடியுரிமை, மொழியுரிமைவரை-அரசியலுடன் தொடர்புகொண்டதே. தொழிலாளர்களை-குறிப்பாக நசுக்கப்படும் இனத்தைச் சேர்ந்த தொழிலாளர்களை அரசியலினின்று பிரித்தெடுப்பது எவ்வகையிலும் சாத்தியமன்று.

ஆதலின், அரசியற் கட்சிகளைப்போலவே தொழிற்சங்கங்களும் தொழிலாளரின் அரசியல் உரிமைகளுக்காகப் போராடவேண்டும். இன்றைய நிலையில் உறுப்பினர்களின் அரசியல் உரிமைகளுக்காகப் போராடும் வலிமையும், துணிவும் தியாகஉணர்ச்சியும் தமிழ்பேசும் தொழிற்சங்கங்களுக்கே உண்டு. ஏனைய தொழிற்சங்கங்கள் அரசியல் உரிமை என்றவுடன் ஒடிப்பதுங்குகின்றன.

மொழிவழித் தொழிற்சங்கங்கள் இன்று துரிதமாக வளர்ந்து வருகின்றன. காரணம், இன்று அவைகளின் தேவை அதிகரித்திருப்பதுதான். வளரும் தொழிற்சங்கங்களை இணைத்து ஒருமுகப்படுத்த மத்திய ஸ்தாபனம் ஒன்று அவசரத்தேவை. அதுவும் சென்ற வாரம் உருவாகிவிட்டது.

இத்தொழிற்சங்கக் கூட்டணியும், தனியார் துறையில் விரைவில் அமைக்கப்படவிருக்கும் தமிழ்பேசும் தொழிற்சங்க சம்மேளனமும் இலங்கைத் தொழிற்சங்க வரலாற்றிலே ஒரு புரட்சியைத் தோற்றுவிக்கும் என்பதில் ஐயமில்லை. சலுகைகளை மட்டுமின்றி உரிமைகளையும் பெறுவதற்காகத் தங்கள் கையிலிருக்கும் கருவிகளாக இக்கூட்டணியை வளர்க்கவேண்டியது தமிழ்பேசும் பாட்டாளிமக்களின் கடமையாகும்.

# ஆசிய-பசிபிக் அகிலம் அமைக்க முனைகிறது சீனு

# கொம்யூனிச மண்டலத்தில் பெருத்து வரும் கருத்துப்பிளவு

பலநாடுகளிலுமுள்ள கொம்யூனிஸ்டுகள் ருஷ்ய—சீன கருத்துப் பிளவை அடிப்படையாகக் கொண்டு கோஷ்டி சேருகின்றன. இந்தியக் கொம்யூனிஸ்ட் கட்சியும் பிளவு பட்டு விட்டது. ஆசிய—பசிபிக் நாடுகளில் தனது செல்வாக்கைப் பிரயோகித்து ஒரு ஆசிய—பசிபிக் கொம்யூனிச அகிலத்தை நிறுவ சீனு பெரு முயற்சி எடுத்து வருகிறது.

உலகத்தின் பல நாடுகளிலும் பரந்து கிடக்கும் கொம்யூனிஸ்டுகள் இப்பொழுது சுறுசுறுப்படைந்து வருகின்றனர். ஆங்காங்கே மாநாடுகள் கூட்டி தங்களின் நிலையினை தீர்மானிக்கின்றனர்.

மொஸ்கோ-பீக்கிங் கொம்யூனிச சித்தாந்தப் பிளவில், தாங்கள் எப்பக்கம் சார்ந்திருக்கின்றனர் என்பதை தீர்மானிக்கவே கொம்யூனிசக்கட்சிகள் இன்று புதுத் தெம்புடன் செயலாற்றுகின்றன.

இந்தியாவில்கடந்தவாரம் கொம்யூஸ்டு கட்சியின் தேசிய சபையின் கூட்டம் நடைபெற்றது. கொம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களுக்குள்ளேயே பெரியதொரு பிளவு ஏற்பட்டுவிட்டது.

### பெரும் புள்ளிகள்

இந்தியாவில் கொம்யூனிஸ்ட் கட்சியின் கேந்திரஸ்தானங்களாகத் திகழுபவை கேரளா, வங்காளம், ஆந்திரா, தமிழ்நாடு ஆகிய மாநிலங்களே. இம்மாநிலங்களில் செல்வாக்குப்பெற்ற 'பெரும் புள்ளிகள்' என்று கருதப்படும் கொம்யூனிஸ்ட் தலைவர்கள் சீனச் சார்புடையவர்கள் என்பது வெளிப்படையாகத் தெரிந்துவிட்டது.

தமிழ்நாட்டைச்சேர்ந்த திரு. பி. இராமமூர்த்தி, நெடுங்காலமாகத்தமிழ்நாடு கொம்யூனிஸ்ட்கட்சி பொதுக்காரியதரிசியாக விருந்த திரு ஆர். வெங்கட்ராமன், ஆந்திராவைச்சேர்ந்த திரு. சுந்தரையா, திரு. பசவபுன்னையா, கேரளாவைச் சேர்ந்த முன்னாள் முதன் மந்திரி திரு. நம்பூதிரி பாட், திரு. ஏ. கே. கோபாலன், வங்காளத்தைச்சேர்ந்த திரு. புபேஸ் குப்தா, திரு. ஜோதி பாசு ஆகிய கொம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் சீன முகாமுக்குள் சேர்ந்துவிட்டனர்.

பம்பாயிலும் கொம்யூனிஸ்டுகளுக்கு குறிப்பிடத்தக்க ஆதரவு தொழிலாளர் வர்க்கத்தாரிடம் மட்டுமே

சுதந்திரன்
அரசியல் நிருபர்

இருப்பதாகக் கூறப்படுகிறது. அவர்கள் திரு டாங்கேயின் செல்வாக்குக்குட்பட்டவர்கள்.

இந்தியக் கொம்யூனிஸ்ட் கட்சிக்குள் பிளவு ஏற்பட்டு, சீனமுகாம் தனியாகப் பிரிந்துகொண்டதற்காகக் காட்டப்படும் காரணம் இன்று அரசியல் வட்டாரங்களில் கேலிக்கிடமாக சித்தரிக்கப்படுகிறது.

### விசித்திரக் காரணம்

பம்பாய் தொழிற்சங்கவாதியும், கொம்யூனிஸ்ட் கட்சி தலைவரும், மொஸ்கோ சார்புடையவருமான திரு. எஸ். ஏ. டாங்கே 40 வருடங்களுக்கு முன்னர் பிரிட்டிஷ் ஆட்சியாளருக்கு எழுதியதாகக்கூறப்படும் ஒருகடிதத்தில் தன்னைச் சிறையிலிருந்து விடுதலை செய்தால், தான் பிரிட்டிஷாரை ஆதரிப்பதாககுறிப்பிட்டிருந்தாராம். இக்கடிதத்தைக் காரணமாகக்கொண்டே பீக்கிங் குழு பிரிந்துள்ளது. ஆனல் அவர்களெல்லோரும் (டாங்கே உட்பட) கடந்த யுத்தத்தை 'மக்கள் யுத்தம்' என்று கூறி பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துடன் பகிரங்கமாக ஒத்துழைத்தார்களே!

சுதந்திரப் போராட்டங்கள் நடைபெற்ற காலத்தில் இந்திய கொம்யூனிஸ்டுத் தலைவர்கள் சுதந்திரப் போராட்டங்களுக்கு எதிரான பிரச்சாரத்தில்இந்திய கொம்யூனிஸ்டுக்கட்சி தீவிரமாக ஈடுபட்டதோடல்லாமல், அறப்போர் வீரர்களையும் சுதந்திர இயக்கத்தையும் பிரிட்டிஷாருக்குக் காட்டிக்கொடுத்தது. திரு. டாங்கே மட்டுமல்லாமல், திரு. டாங்கேயை குற்றம்சாட்டி வெளியேறுகின்றமேற்குறிப்பிட்ட தலைவர்களும் மேற்படி காட்டிக்கொடுக்கும் பணியில் ஈடுபட்டிருந்தனர் என்பது வெள்ளிடைமலை. அத்தகைய நபர்கள் 40 வருடங்களுக்கு முன்னர் திரு. டாங்கே எழுதிய கடிதத்தைச் சாட்சிக்குக் கொண்டு வருவது அரசியல் அவதானிகளுக்கு பெரிய ஆச்சரியத்தை உண்டுபண்ணியுள்ளது.

இந்தியக் கொம்யூனிஸ்ட் கட்சிக்குள் இன்று ஏற்பட்டிருக்கும் வெடிப்பு காரணமாக கட்சியின் பலம் முற்றுக்குன்றிவிடும் என்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். இந்தியமாநில ஆட்சி சபைகளிலோ லோக சபையிலோ இனிமேல் கொம்யூனிஸ்டுகள் அங்கம்வகிப்பதே அரிதாகிவிடும்என்றும் கூறப்படுகிறது.

சுதந்திர இயக்கத்துக்கு எதிராக இருந்ததனாலும், யுத்தத்தின்போது மாறுபாடாகவிருந்தமையினாலும் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு வக்காலத்து வாங்கியமையினாலும், இறுதியாக இந்திய-சீன எல்லைச் சண்டையினாலும் கொம்யூனிஸ்ட்கட்சி இந்தியமக்களின்மனத்திரையிலிருந்து மங்கிவந்துள்ளது. அண்மையில் ஏற்பட்டகருத்துப் பிளவு மேலும் கட்சியில் பாரிய பலவீனத்தை ஏற்படுத்திவிட்டது.

### பசிபிக்-ஆசிய அகிலம்

சீனு தனக்குச் சாதகமான அணி ஒன்றினை நிறுவி கொம்யூனிச இயக்கத்தில் பெரும் 'புரட்சி'யை ஏற்படுத்த வேண்டியமட்டும் முயற்சித்து வருகிறது. ஆசியாவிலுள்ள பல தேசங்களைத்தன் வசப்படுத்துவதற்கு ஏராளமான பொருளை தண்ணீர் போல் இறைத்துவருகிறது.

உலகத்திலேயே, கொம்யூனிஸ்ட் நாடுகளுக்குவெளியேயுள்ள பலம் பொருந்திய கொம்யூனிச நிறுவனமாகக் கருதப்படுவது இந்தோனேஷியக் கொம்யூனிஸ்ட்கட்சி. இக் கட்சிக்குள்ளேயேபாரிய பிரிவினை ஏற்படுத்தி, தன்பக்கம் போதிய மேலதிகச்செல்வாக்கை ஈர்த்துக்கொள்வதில் வெற்றிகண்டது சீனு.

இலங்கையைப் பொறுத்தவரையில் சீனுவின் தூண்டிலில் அகப்பட்டவர்கள் அரசியல் தலைவர்கள் அல்லர்

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களம் படித்தால் தமிழ் பட்டதாரிகட்கு வேலை தரப்படுமாம்

## கல்வி அமைச்சு தீர்மானம்

**தமிழ் பேசும் விஞ்ஞான பட்டதாரிகளைச் சிங்களப் பாடசாலைகளுக்கு விஞ்ஞான ஆசிரியர்களாக நியமனம் செய்ய கல்வி அமைச்சு தீர்மானித்திருப்பதாகத் தெரிகிறது. அவர்கள் சிங்களத்தில் விஞ்ஞானத்தைப் போதிக்க முடியாது. எனவே நியமனத்துக்கு முன்பு அவர்களுக்குச் சிங்கள மொழியைக்கற்பிக்க கல்வி அமைச்சு உத்தேசித்துள்ளதாம்.**

சிங்கள விஞ்ஞானப் பட்டதாரிகளுக்குப் பஞ்சம் ஏற்பட்டிருப்பதே இதற்குக்காரணம் என்று கூறப்படுகிறது. சிங்களம் படிக்க முன்வரும் தமிழ்பேசும் பட்டதாரிகளுக்கு மட்டும் ஒரு குறிப்பிட்ட காலத்துள் சிங்களம் கற்பித்து சிங்கள பாடசாலைகளுக்கு நியமனம் செய்வது அரசாங்கத்தின் திட்டமாகும். சிங்களப் பாடசாலைகளில் படிப்பிக்கும்போதே அவர்கள் தங்களின் சிங்கள மொழி அறிவை வளர்த்துக் கொள்ள வாய்ப்பு கிடைக்கும்.

முன்பு ஒருமுறையும்தமிழ் பட்டதாரிகளுக்குச் சிங்களம் கற்பித்து சிங்களப்பாடசாலைகளுக்கு நியமிக்க அரசாங்கம் முயன்றதென்றும் பலத்த எதிர்ப்பின்மீது அந்த முயற்சி கைவிடப்பட்டதென்றும் தெரிகிறது.

## முஸ்லிம்களின்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

சிங்களவர் வேலையற்றிருக்கின்றனர். நாமும் சிங்களத்தில் சித்தியெய்தி அவர்களோடு போட்டியிடுவது 'இருந்தவன் எழும்ப முன் நின்றவன் நெடுந்தூரஞ் சென்ற' கதைதான். எதிர்காலத்தில் வேலையில்லாத் திண்டாட்டம் நம்மை ஆட்கொள்வதோடு தற்போது சிங்களத்தில் போதிக்க சிங்களம் சித்தியெய்திய முஸ்லிம்கள் போதியளவு இல்லாமையால் அந்த இடத்திற்கு அதாவது முஸ்லிம் ஆசிரியர்களுடைய இடத்திற்குச் சிங்களவரே நியமிக்கப்படுவர். எனவே அரசாங்கம் தனது கொள்கையை நிறைவேற்றிக்கொள்வதற்குச் சிறுபான்மையினராகிய நாங்கள் துணைபுரிந்து கடைசியில் கைசேதப்படப்போகிறோம் என்பதை அகில இலங்கை வை. எம். எம். ஏ. உணராமல் இவ்விதத் தீவிர முடிவுக்கு வந்தது வருந்தத்தக்கதாகும்.

இலங்கையிலே எந்தப்பகுதியில் வாழும் முஸ்லிமாக இருந்தாலும் அவன் வாயில் தவழ்வது வளமிகு தமிழ். அத்தகைய தமிழைத் தாய்மொழியாகக்கொண்ட இலங்கை முஸ்லிம்களுக்கு தமிழேபோதனுமொழியாக இருக்கவேண்டும். முஸ்லிம்களாகிய நாம் ஏகோபித்து எமது உரிமைக் குரலை எழுப்புவோமாக.

### ஜனுப் அப்துல்லா விடுதலைக்கு பாராட்டு

'கடந்த சுமார் 11 ஆண்டுகளாக காஷ்மீரின் சுயநிர்ணயத்துக்காகப் போராடி சிறைக்குள் அடைபட்டிருந்த காஷ்மீர் சிங்கம் மாஜிப் பிரதமர் ஜனுப் ஷேக் அப்துல்லாவின் விடுதலை சுதந்திரதாகமேலீட்டால் திளைத்திருந்த மக்களை பேரானந்தத்துக்குள்ளாழ்த்தியது.' இவ்வாறு இஸ்லாமிய முன்னேற்றக்கழகப் பொதுச்செயலாளர் ஆஸாத் தெரிவித்தார்.

மேலும் ஷேக் அப்துல்லா அவர்களுக்கு விடுதலை அளித்த காஷ்மீர் அரசாங்கத்தை பாராட்டுவதாக ஷேக் அப்துல்லா அவர்களுக்குத் தந்திச் செய்திமூலம் அறிவித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## குருஷ்சேவிற்கு எதிராக ருஷ்யாவில் புரட்சி?

### மேலைநாட்டுப் பத்திரிகையின் கூற்று

**'ருஷ்யப் பிரதமர் குருஷ்சேவிற்கு எதிராக கிரெம்லினில் சீன ஒரு திடீர் புரட்சியை நடத்த முயற்சித்துத் தோற்றிருக்கலாம்' என்றும், பீகிங் வசை புராணம் மாஸ்கோவில் தீவிரமானதற்கு இம் முயற்சி ஒருவேளை காரணமாக இருக்கக்கூடும்' என்றும் 'யார்க்சயர் போஸ்ட்' பத்திரிகையின் அரசியல் விமர்சகரான டிப்தின் ரகலண்டு கூறுகிறார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

குருஷ்சேவைத் தூக்கியெறியச்சொல்லி சோவியத் கொம்யூனிஸ்டுக் கட்சிக்கு சீனவிடும் அழைப்பு, 'நிச்சயமாக புரட்சி நோக்கத்தின் ஓர் அறிகுறியாகவே இருக்கிறது.

சோவியத்கோஷ்டிக்கொம்யூனிஸ்டுக் கட்சிகளில் குருசேவிற்கு எதிர்ப்பு ஓரளவுக்கு இருக்கத்தான் செய்கிறது. சோவியத் தலைமையமைச்சருக்கு கிரெம்ளினில் உருவாகக் கூடிய பலம் வாய்ந்த எதிரிகளில் ஒருவராக சுஸ்லோவ் இது வரை கருதப்பட்டுவந்தார்.

சீனவுக்கோ, அவமானப் படுத்தப்பட்ட மாலடோவ் கும்பலுக்கோ விரோதமான முறையில் நடந்துகொள்ளாமல், தந்திரமான முறையில் சுஸ்லோவ் நடந்து கொண்டார். ஒரு புரட்சி ஆரம்பமானல் அதை நடத்தித் தலைமை தாங்க எதிர்பார்த்திருப்பவரைப் போல் அவர் நடந்துகொண்டார். இருப்பினும்,கொமயூனிஸ்டுத்தலைமையில் தமக்கிருந்த எதிர்ப்பைக் குருசேவ் இப்போது உடைத்தெறிந்து விட்டார் போல் தோன்றுகிறதாம்.

மேற்கொண்டு ஏற்படக்கூடிய அரசியல் மாற்றங்களை அடுத்த சில மாதங்களில் சுஸ்லோவின் நிலைமையை கவனிப்பதன் மூலம் தெரிந்து கொள்ளலாம் என்று கூறப்படுகிறது.

'யார்க்சயர் போஸ்ட்' ஆசிரியத் தலையங்கம் ஒன்றில் 'சீன-ருஷ்யா இடையே உள்ள பிளவு வளர்ந்து வருவதானது கடைசியில் அமெரிக்காவுடன் ருஷ்யா அணிசேர முயற்சிக்கும் நிலையில் போய்த் முடியும்' என்று கருத்து தெரிவித்துள்ளது.

அப்பத்திரிகை மேலும் கூறியுள்ளதாவது:-

'சீன-ருஷ்யா தகராறனது கொம்யூனிசத்துக்கும், சுதந்திர உலகுக்கும் உள்ள மோதலை ஒரு மூலைக்குத் தள்ளுவதோடு அந்த மோதலை புதிதாக ஏற்படும் உறவுகள் பெரும் அளவில் இருந்த இடம் தெரியாதபடி மறைத்துவிடலாம் என்று பார்வையாளர்கள் கருதுகிறார்கள். சீனவுக்கு எதிராக அமெரிக்காவுடன் ருஷ்யா அணிசேரவும், கூட்டுச் சேரவும்கூட முயற்சித்து வருவதாகஅவர்கள் கருதுகிறார்கள்.

இவ்விதமான ஒரு கூட்டு நிச்சயம் ருஷ்யாவுக்குப் பெரும் ஆறுதல் அளிப்பதாகஇருக்கும். இவ்விதமாக அணிசேர என்ன விலை கொடுக்கவும் ருஷ்யா தயாராக இருக்கக்கூடும். ஆனல். தான் சமாதானத்தை விரும்புவதாகவும், சீன தான் போரை விரும்புவதாகவும் குருஷ்சேவ் கூறுவது, உள்ள நிலைமையை சரியாகப் படம் பிடித்துக்காட்டுவதல்ல.

"தனது கொல்லைப்புறத்தில் அணுகுண்டுடன் நின்று கொண்டிருக்கும் 'ருஷ்யக் கரடி'யிடம் சீன, தன்னிடம் சொந்தமாக அணுகுண்டு இருந்தாலும் கூட, வலிய போருக்குப் போகாது.

ருஷ்யாவும் கூட தனது தோள் புறத்தில் இருக்கும் சீன 'யாளி'யிடம் வலுவில் சண்டைக்குப் போகாது.

"சீனவும், ருஷ்யாவும் தங்களது மக்களுக்கு மேலும் பொருட்கள் கிடைக்கும் படிச் செய்து தங்களது 'பாணி'க் கொம்யூனிசம் தான் சிறந்தது என்று நிரூபித்துக் காட்ட சரியான போட்டியில் இறங்குவது என்றால், அதன் மூலம் வர்த்தக வாய்ப்புப் பெருக வழி ஏற்பட்டு, சுதந்திர உலகும் பயனடையும்.

'ஆனல், அவ்வித ஒரு ஆதாயம் சுதந்திர உலகுக்குக் கிடைக்கவேண்டுமானல், சுதந்திர உலகம், ருஷ்யா, சீன ஆகிய நாடுகளில் எத்தரப்புப் பக்கமும் நெருங்கி சேர்ந்துவிடக்கூடாது.'

### தமிழ்ச் சங்கம்

வெள்ளவத்தையிலுள்ள தமிழ்ச் சங்கக் கட்டிடத்தில் குடியிருந்தவர்களுக்கும், நிர்வாகத்தினருக்கும் இடையில் ஏற்பட்ட தகராறுபற்றி கடந்த வாரங்களில் செய்தி வெளியிட்டிருந்தோம். இதுபற்றிய சங்க ஆட்சிக்குழுவினரின் அதிகார பூர்வமான அறிக்கை அடுத்த இதழில் வெளியாகும்.

## ஆசிய-பசிபிக் அகிலம்....

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

என்பது கண்கூடு. தொழிற் சங்கவாதிகள் சிலரைமட்டுமே சீன தன் வயப்படுத்த முடிந்தது. ஆனல் இலங்கையிலுள்ள தனது கையாட்கள் மூலமே இந்தியாவின் கழுத்தை நெரிக்க சீன முயன்று வருகிறது. சீனச் சார்புடன் இந்தியாவின் பல மாகாணங்களிலும் பல பத்திரிகைகள் வெளியாவதற்கான வழிவகைகளை இலங்கையிலுள்ள தனது தோழர்கள் ஊடாகவே சீன செய்து கொடுத்துள்ளதாம். அதுமட்டுமல்லாமல் லட்சக்கணக்கான துண்டுப் பிரசுரங்களையும் இலங்கை வழியாக இந்தியாவுக்கு அனுப்பிவைக்கவும் சீன ஏற்பாடுகள் செய்திருக்கிறதாம்.

இந்தியாவில் விநியோகிப்பதற்காக ரூபாய் 60,000 செலவில் இலங்கையில் சீனச் சார்புத் துண்டுப் பிரசுரங்கள் அச்சிடப்பட்டதாக பிரபல இந்திய வாரப்பத்திரிகையொன்று சென்றவாரம் எழுதியது.

### அவுஸ்திரேலியாவில்...

அவுஸ்திரேலியாவிலுள்ள கொம்யூனிஸ்டுகள் தொகையில் வெகு குறைவானவர். இதுகாலவரைமக்கள் பிரதிநிதியாக ஒருவரேனும் சட்டசபைக்கோ உள்ளூராட்சி மன்றங்களுக்கோ தெரிவு செய்யப்படவில்லை. இருப்பினும் அங்கேயே தங்கள் குழுக்களை அமைத்துக்கொள்வதற்காக ரஷ்யா-சீன ஆகிய இரு நாடுகளும் பெருமுயற்சி செய்து வருகின்றன. ஏராளமான பணமும் இரு நாடுகளால் அங்கே இறைக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது.

அவுஸ்திரேலியக் கொம்யூனிஸ்ட்கட்சியையும் தன்பால்இழுத்துக்கொண்டதும் சீன ஒரு ஆசிய-பசிபிக் கொம்யூனிஸ்ட் அகிலத்தை நிறுவிவிடும். இந்த நோக்கத்தையே உள்ளந்தரங்கமாக வைத்துக்கொண்டு சீன ஆசிய நாடுகளையும், பசிபிக் பிராந்திய நாடுகளிலுள்ள கொம்யூனிஸ்ட்டு இயக்கங்களையும் கவர்ந்து வருகிறது. அத்தகைய 'அகிலம்' ஒன்று நிறுவப்பட்டால், கொம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு பீகிங் மூலஸ்தானமாகிவிடும்.

சீனவின் பேராசையை முறியடிக்க ரஷ்யாவும் தன்னலான மட்டும் தன் செல்வாக்கைப் பிரயோகித்துவருகிறது.

## இரு மந்திரிகள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வட்டாரங்களில் மற்றொரு வதந்தியும் அடிபடுகிறது.

மூன்று வாரங்களாக இடதுசாரித்தலைவர்களுடன் கட்சி அரசாங்க அமைப்புப் பற்றி நிதி அமைச்சர் திரு. இலங்கரத்ன நடத்திய பேச்சு வார்த்தைகள் முடிவடைந்து விட்டதென்றும், இவ்வாரக் கடைசியில்இடதுசாரி முன்னணியின் சார்பில் டாக்டர் என். எம். பெரேரா பிரதமருடன் இறுதிப் பேச்சு வார்த்தைகள் ஆரம்பிப்பாரென்றும் கூறப்படுகிறது.

### இடைக்கால, நீண்டகால, திட்டங்கள்

அவர்கள் அடுத்த பொதுத் தேர்தல் வரையுள்ள இடைக் காலத்தில் கூட்டு அரசாங்கத்தால் அமுல் நடத்தக் கூடிய குறைந்த பட்ச குறுகிய வேலைத் திட்டம் ஒன்று வகுத்துக் கொள்வார்களென்றும் அந்த வேலைத் திட்டத்தின் அடிப்படையில் கூட்டு அரசாங்கம் மே மாதம் 1-ம் திகதியில் பதவி ஏற்கலாமென்றும் அரசியல் வட்டாரங்கள் கூறின.

இந்தக் கூட்டு அத்துடன் நின்று விடாதாம். கூட்டு அரசாங்கம் ஒரு நீண்ட காலத் திட்டத்தையும் வகுத்து. அதனை அடுத்த தேர்தலில் தங்களின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் சேர்ப்பார்களாம்.

கூட்டு அரசாங்கம் ஏற்படுவதன் விளைவாக பொதுத் தேர்தலிலும் இரு கட்சிகளும் கூட்டாகவே போட்டியிடும் என்பது இதிலிருந்து தெளிவாகிறது.

இடதுசாரி ஐக்கிய முன்னணியிலுள்ள மூன்று கட்சிகளும் தனித்தனியாக அரசாங்கத்தில் சேரக் கூடாதென்றும், சேர்ந்தால் மூன்று கட்சிகளும் சேர்ந்து கொள்வது, இல்லையேல் மூன்றும் சேருவதில்லை என்றும் முன்னணி முடிவு செய்திருக்கிறதாம்.

கூட்டு அரசாங்கம் ஏற்பட்ட பின்னர் அதனை ஐக்கிய தேசியக் கட்சியும், சண்முகதாசனின் தொழிற் சங்கக் கோஷ்டியும், சமசமாஜக் கட்சியில் சமரக்கொடி—தம்பு கோஷ்டியும் [illegible]யாக எதிர்ப்பார்களென நம்பப்படுகிறது.

## மணிக்கவி தந்த...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ஹஸரத் காலித் பின் வலீத் (ரலி) சுல்தான் சலாஹுத்தீன் போன்ற கொற்றவர்களை மறவாமல் போற்றுகின்றார் கவிஞர்:

"சீனமும் அரேபியாவும்
எங்கள் நாடே
சீர் இந்தியாவும்
எங்களுடையதே
வையம் முழுதும்
எம்முடையதே
நாம் முஸ்லிம்
என்பதனல்"

என்று கவிஞர் இக்பால் பிறிதோர் இடத்தில் கூறுகிறார். இக் கவிதையில் காணப்படும் கருத்தாழத்தை ஆராய இக் கட்டுரை இடந் தராது. எனினும் சுருக்கிக் கூறுகிறோம். இஸ்லாம் வளர்த்த பண்பில் தலையாயது, 'யாதும் ஊரே யாவருங் கேளிர்' என்பதாகும், 'எல்லோரும் ஒரு குலம், எல்லோரும் ஓர் இனம்' என்ற பெரு நோக்கத்தை தன்னகத்தே இஸ்லாம் [illegible]. இதையே நபி மணி (ஸல்) அவர்கள் "முஸ்லிம்கள் எல்லோரும் ஒரு சகோதரத்துவ இயக்கத்தைச் சேர்ந்தவர்கள்" என்று கூறிப் போந்தார்கள். இக்கருத்தையெல்லாம் தன்னுள் அடக்கியுள்ளது மேற்கூறிய இக்பாலின் கவிதை. எல்லோருக்கும் இன்பம் வேண்டும்-இன்பம் கோரும் இஸ்லாம் ஓர் உலக சக்தியாக மிளிர்வதற்கு இப்பரந்த மனப்பான்மையே. எனவே தான் இக்பால் காரணமாகும் அவர்கள் "நாம் முஸ்லிம்கள் என்பதனல் நமக்கு வையம் முழுதும் உரித்தாகும்" என்று உரிமையோடு, உரிமையினல் ஏற்பட்ட பெருமையோடு கூறுகிறார். இளைஞர்களுக்கு அறிவுறுத்த வந்த இக்பால்,

"முன்னேற்றம்
செயலாற்றுவோரைச்
சேர்ந்ததாகும்
அதைவிட்டு ஓய்ந்து நிற்பவர்
எந்நாளும் சுற்றிச்
சுழல்கின்றதாய
காலச் சக்கரத்தில் சிக்கி
மாள்வர்"

என்று அறிவுறுத்துகின்றார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# எதுவேணும் மனமே சொல்

வல்வைச் சுந்தரியம்

உணவா-உரிமையா, சுயநலமா-பொதுநலமா, மானமா-சோரு?

—எதைத் தெரிவு செய்வதென்று முடிவு செய்து கொள்ள முடியாமல், சிந்தனைச் சக்கரம் சுழல கந்தசாமி வீடு சேர்ந்தான்.

'ஐயா அரிசி கிரிசி வாங்கி வரல்லையா மோனை'—பிள்ளையொன்றை விழித்துக் கேட்கும் தோரணையில் வள்ளி கேட்டாள்.

கந்தசாமி பதிலிறுக்கவில்லை. நிமிடங்கள் பல கரைந்தன.

'இராத்திரியும் புள்ளையளுக்கு ஆமான தீனில்லை. காலமையும் அப்பிடி...பானையிக்கை கிடந்த அஞ்சாறு சோத்துப்பருக்கைக்குள்ளே வெறும்பச்சைத்தண்ணியை விட்டுக் கரைச்சுக் குடுத்தது. மத்தியானமும் அப்படி...ஒரேயொரு ருத்தல் பாண் வாங்கி எல்லாத்துக்கும் புறிச்சுக் குடுத்தது. இனி இராவைக்காவது எதெண்டாலும் பாக்காட்டி இதுகளை என்னதான் செய்யிறது?'

—வள்ளியின் இந்தமுறைப்பாட்டுக்கும் கந்தசாமி மௌன விரதத்தை விடவில்லை.

'மதியத்தாலையும் திரும்புகுது. பேசாமை யோசிச்சுக் கொண்டு இருந்தால்...?'

—வள்ளி வார்த்தைகளை முடிக்கவில்லை. ஆற்ருமையின் எல்லையிலே நின்ற கந்தசாமி கொதித்தெழுந்தான்.

'என்னை என்னதான் செய்யச் சொல்லுறுய்? எங்கினையும் போய் விழுந்து சாகச் சொல்லுறியா?'

'ஏன் சாகிறது? எல்லாரும் நடக்குமாப்போலை நாங்களும் நடக்கிறதுதான், ஊர் முன்னேற்றம் ஊர் முன்னேற்றமெண்டால்எல்லாம் நிறைஞ்சிடும்...அவர் தம்பியையா எத்தினைமுறைஆள்ச் சொல்லிவரக்காட்டினவர்... ...தனக்குத் துண்டுபோடச் சொல்லி. போய் அவருக்கு ஓம்சொல்லிட் போட்டு என்னத்தையும் வாங்காமல்... ...என்னதான் செய்யப்போறியள்?'

வள்ளியின் இந்த வார்த்தைகள்காய்ச்சிய ஈயத்தைக் காதுகளில் வார்த்தாற்போன்றிருந்தது கந்தசாமிக்கு. வள்ளியும் அப்படிச் சொல்லக்கூடியவளில்லைத்தான். அவர்களைப்பீடித்திருந்த தாங்கவொண்ணு வறுமையின் தாக்குதல் அவளை அவ்வாறு சொல்ல வைத்தது. கந்தசாமி எதுவும் பேசாமல் எழுந்து எங்கேயோ சென்ருன்.

ஃ ஃ ஃ

வவுனியா மாவட்டத்திலுள்ள அவ்வைபுரத்தைத் தாயகமாகக் கொண்டவன்தான் கந்தசாமி.

கந்தசாமி ஒரு வாரக்காரனுகத்தான் வாழ்க்கையைத் தொடங்கினுன். அவனுக்குச் சொந்தக் காணிகளெதுவுங் கிடையாது.

சில வருடங்களாக வாரத்துக்கு வயல் செய்துபார்த்தவிடத்தில், அவனுடைய உடம்பு கெட்டதும் கடனாளியாகியதுந்தான் கண்ட பலன்.

எனவே, 'வாரக் காரன்' என்ற அந்தஸ்துக்கு நிரந்தரப் பிரியாவிடை கூறிவிட்டு கூலிக்காரனுக மாறினுன்.

அதிலும் எதிர்பாராதவொரு அதிர்ச்சியேற்பட்டது...

ஆமாம்! ஒருநாள் மரந்தறிக்கும் வேலைக்குச்சென்ற கந்தசாமிக்குக் காலில் கோடரி படுமோசமாக வெட்டிவிட்டது. அதனுல், பல மாதங்களை அவன் வைத்தியசாலையிலே கடத்த வேண்டியேற்பட்டுவிட்டது...கடத்தினுன்.

அவன் படுக்கையிலிருந்த காலத்திலே வள்ளி தன்னுலான கூலிவேலைகளைச் செய்து, கணவனையும் குழந்தைகளையும் பராமரித்து வரலானுள்...

அந்த நிலைக்கும் ஒரு தாக்குதல்.


ஆமாம்! வள்ளியும் நெருப்புக் காய்ச்சலாற் பீடிக்கப்பட்டு சில தினங்கள் பாயும் படுக்கையுமாகிவிட்டாள்.

அவர்களின் சொத்துக்களான கண்போல் வளர்த்தவொரு பசு, பத்துக்கோழிகள் யாவும் விற்றுச் செலவழிக்கப்பட்டு விட்டன.

இன்னுஞ் சுமார் ஒருமாசகாலம் வரையில் கந்தசாமியினுலோ வள்ளியினுலோ வேலைசெய்து சம்பாதிக்க முடியாது.

அந்த ஒரு மாசமும் மிக மிக ஒறுத்துச் செலவழிப்பதென்ருலும் உணவுச் செலவுக்கு மட்டும் நூறு ரூபாவுக்கு மேலே வேண்டும். நூறுசதம் வருவதற்கும்வழியில்லை. ஏனைய செலவுகள்?

அந்த நிலையிற்தான் அவ்வைபுரத்தை ஒரு வட்டாரமாகக்கொண்ட முதலைபிடித்தகுளம் கிராமசபைத் தேர்தல் ஆரம்பமாகியது.



அவ்வைபுரத்து வட்டாரத்திற்கு இருவர் அபேட்சகர்களாகப் போட்டியிட்டனர். அவர்களிலொருவரான தம்பியையா என்னும் அபேட்சகர், கந்தசாமி, வள்ளி இருவருடைய வாக்குகளைத் தனக்குத் தரும்படியும் இரண்டு வாக்குகளுக்கும் ஐந்நூறு ரூபா முற்பணமாகத் தருவதாகவும் பலதடவை கந்தசாமியிடம் ஆட் சொல்லியனுப்பினுர்... ...அதைத்தான் வள்ளி கணவனிடம் வற்புறுத்தினுள்.

ஃ ஃ ஃ

கந்தசாமி கால்போன திக்கில் போய்க் கொண்டிருந்தான்.

'உணவா—உரிமையா, சுயநலமா—பொதுநலமா, மானமா—சோரு?' எது வேண்டுமென்பதை நிர்ணயிப்பதற்கு அவனுல் முடியவேயில்லை.

கந்தசாமி அதிகம் படிக்காதவனுயிருந்தாலும், எந்தப் பிரச்சினையையும் ஆற அமர ஆலோசித்து நல்லமுடி [illegible] 'சாப்பிடுவதற்காக மட்டுந்தான் மனிதன் பிறந்தான். உணவுப் பிரச்சினையைத் தீர்ப்பதுமட்டுந் தான் வாழ்க்கையின் இலட்சியம். சோறுதான் சொர்க்கம். வயிறுதான் தெய்வம்' என்கிற முற்போக்குக்கொள்கையை எள்ளி நகையாடுபவன், கந்தசாமி.

அவனுடைய மனத்திரையிலே முதலை பிடித்தகுளம் கிராமசபையின் வரலாறு நிழற்படமாகஓடத்தொடங்கியது.

முதலைபிடித்தகுளம் கிராமச்சபை 11வட்டாரங்களைக் கொண்டது.

தற்பொழுது கி. ச. தலைவராயிருக்கும் பேரம்பலம் அவர்கள்இரண்டுமுறை தலைவராகக்கடமையாற்றியிருக்கிருர்.

வழமைப்படி மூன்ரும் முறையும் ஐந்து வட்டாரங்களுக்கு ஐநதுபேரைநிறுத்தியிருக்கிருர். பணத்தை தண்ணிராயிறைக்கிருர், தவருன வழியில் வாக்குரிமைகளைப பறிப்பதற்கு!

ஆனுல் பொதுமக்கள் விழித்துக்கொண்டார்கள், சரியான வழியில் வாக்குரிமைகளைக் காப்பாற்றுவதற்கு! அவ்வைபுரம் வட்டாரத்துக்கு பேரம்பலத்தால் நிறுத்தப்பட்ட அபேட்சகர் தான் தம்பியையா.

தம்பியையாவை எதிர்த்துப்போட்டியிடுபவர், துரைராசா.

அவ்வைபுரம் மிகச் சிறிய வட்டாரம். மொத்த வாக்காளர் தொகை எழுபத்தைந்துதான்.

அதிலே துரைராசாவின் சொந்தக்காரர் 37 வாக்காளர்கள். அவர்கள் எந்தக் காரணத்தைக் கொண்டும் தம்பியையாவுக்கு வாக்களிக்க மாட்டார்கள்.

தம்பியையாவின் சொந்தக்காரர் 36வாக்காளர்கள். அவர்களும் எந்தக் காரணத்தைக் கொண்டும் துரைராசாவுக்கு வாக்களிக்கமாட்டார்கள்.

தம்பியையாவுக்கோ துரைராசாவுக்கோ சொந்தமில்லாதவர்கள் இரண்டேயிரண்டு வாக்காளர்கள் தாம். அவர்களிருவருந்தான் கந்தசாமியும் வள்ளியும.

கந்தசாமியும் வள்ளியும் யாருக்கு வாக்களிக்கிருர்களோ அவர் வெற்றியடைவார்.

துரைராசா வெற்றியடைந்தால், தலைவர் தேர்தலில்பேரம்பலத்துக்கு வாக்களிக்கமாட்டார். தலைவர் தேர்தலில் போட்டியிடப் போகும் லோகேஸ்வரனுக்கே வாக்களிப்பார்.

லோகேஸ்வரன் கி. ச. தலைவராகினல் முதலைபிடித்தகுளம் கிராமசபையின் வரலாறே மாற்றியெழுதப் படும்.

லோகேஸ்வரனும், லோகேஸ்வரனைத் தலைவராக்க விரும்பும் மணிவாணன், இளஞ்செழியன்; மூர்த்தி, இரத்தினசிங்கம் ஆகிய ஐவரும் நியமனப்பத்திரங்கள் தாக்கல்செய்யப்பட்ட அன்றே போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டு விட்டார்கள். குறித்த ஐவரும் நாட்டு முன்னேற்றத்தில் அக்கறைகொண்ட பொதுநலத் தொண்டர்கள். 'கிராமசபை வியாபாரக் கம்பெனி'த் தலைவர் பேரம்பலமும் பேரம்பலத்தைத்தலைவராகத்தேர்ந்தெடுக்கஅபேட்சகர்களாகப் போட்டியிடும் கதிரேசு, சுந்தரம், வேலுப்பிள்ளை, பொன்னன் ஐவருக்கும் போட்டியிருந்த பொழுதிலும் குறித்த ஐவரும் வெற்றியடைந்து விடுவார்கள் போலுமிருந்தது.

ஆனுல், அவ்வைபுரத்திலிருந்துவெற்றிபெறும்அபேட்சகரில்தான் முதலைபிடித்தகுளம் கிராமசபையின் தலைவிதி தங்கியிருக்கிறது.

அந்த மாபெரும் பொறுப்பும் கடமையும் மிக மிகச் சுருங்கி கந்தசாமி, வள்ளி ஆகிய இருவர்மேலும் தங்கி நிற்கிறது...

ஆமாம்! பேரம்பலம் மூன்ரும் முறையுந் தலைவராகி 11 வட்டாரங்களடங்கிய 33 கிராமங்களை இழிநிலைக்குத் தாழ்த்துவதும்; லோகேஸ்வரன் தலைவராகி அதே கிராமங்களுக்குப் புதுவாழ்வளிப்பதும் கந்தசாமியிலும் வள்ளியிலுந் தங்கியிருக்கிறது...வாக்குரிமையின் மகத்துவம் விலைமதிப்பிடற்கரிய தொன்றுதான்.

பேரம்பலம் கூட்டத்தினர் பணபலமுடையவர்கள்; மக்களின் மதிப்பையிழந்தவர்கள்.

லோகேஸ்வரன் குழுவினர் பணபல மற்றவர்கள்...மக்களின் மதிப்புக்குரியவர்கள்.

கந்தசாமியும் வள்ளியும் துரைராசாவுக்கு வாக்களித்தால் பிரதிபலனுக ஒரு தேநீரைக்கூடப் பெறமுடியாது. துரைராசா கொடுக்கமாட்டார். தம்பியையாவுக்கு வாக்களித்தால் ஐந்நூறல்ல ஆயிரம் ரூபாவையே வாங்கலாம்...

'உணவா—உரிமையா, சுயநலமா—பொதுநலமா, மானமா—சோரு?' எதைத் தெரிவுசெய்ய வேண்டுமென்பதை கந்தசாமி இன்னும் முடிவெடுக்கவில்லை. மறுநாள் தேர்தல்...

ஃ ஃ ஃ

தேன்குளக் கடைவீதியில் போய்க் கொண்டிருந்தகந்தசாமியை அபேட்சகர் துரைராசாவும் லோகேஸ்வரன் குழுவினரும் முதலில் சந்தித்துப் பேசினுர்கள்...தங்களின் கொள்கையை விளக்கி, கிராமங்கள் தற்போதிருக்கும் இழிநிலையைப்பற்றி புள்ளிவிபரங்களுடன் எடுத்துக்காட்டினுர்கள். அது கந்தசாமியும் அறிந்த விஷயந்தான்.

துரைராசா குழுவினரிடம் விடை பெற்றுக் கொண்டு கந்தசாமி அப்பாற் சென்ருன். தனது கஷ்டநிலையை அவர்களுக்கெடுத்துக் கூறுவதற்குப் பலமுறை யோசித்தான். தன்மானம் தடைபோட்டு விட்டது.—தம்பியையா குழுவினர் சந்தித்து பாரதி உணவு விடுதிக்குள் கந்தசாமியை அழைத்துச் சென்றனர். சாராயப் போத்தலையும் கிளாசையும் முன்னுக்கு வைத்தார்கள்; சாப்பாடு தேத்தண்ணீருக்கு ஓடர் செய்தார்கள்......கந்தசாமி வயிற்றுக்குச் சரியில்லையென்று ஒரு 'பிளெயின்ரீ' தானும் குடிக்கவில்லை.

'கிராம வியாபார சபை அபேட்சகர்' தம்பியையா 20 ஐம்பது ரூபாய்த்தாள்கள் வைத்துக் கட்டப்பட்டவொரு கட்டை, 'ஷேர்ட்டுப்

(15-ம் பக்கம் பார்க்க)

ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகல வித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3-00.

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினுல் இனுமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-50. சிறியது ரூபா 3.00

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:

ஆனந்தா வைத்தியசாலை,

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு—11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்பத் தமிழுக்கு வந்துற்ற இடர் நீக்க இடதுசாரியினரிடம் திட்டம் உண்டா?

## ஏக சிங்கள இலங்கை காண்போர் செந்தமிழுக்கு வாழ்வளிப்பாரா?

**‘உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்’ என்ற மார்க்சிச சித்தாந்தத்தின் அடிப்படையில் இயங்குவதாகக் கூறிக் கொள்ளும் இடதுசாரிக்கட்சிகள், இன்று முழுப் பிற்போக்குவாத முதலாளித்துவ வகுப்புவாதிகளாக மாறிவிட்டார்கள். பௌத்த நாட்டில புரட்சிக்கு இடமில்லை யென்றும் கூறிவிட்டார்கள். ஆளும் கட்சியின் அரவணைப்பில் சுகம் காணத் துடிக்கிறார்கள். இவர்கள் தமிழர் பிரச்சினைக்கு வழி சமைப்பார்கள் என்பது ‘மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்கிய கதை’யாகவே முடியும். தமிழ் மக்களின் விரோதிகளாக மட்டுமல்ல நாட்டில் உள்ள சகல தொழிலாள வர்க்கத்தின் துரோகிகளாகவும் இடதுசாரிகள் மாறிவிட்டார்கள்.**

பூங்குன்றன்

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களை என்றுமில்லாத அளவிற்கு இன்று ஆபத்துச் சூழ்ந்துள்ளது. நாடு சுதந்திரம் பெற்றது முதல் நாட்டில் வாழும் சிறுபான்மை மக்களின் உரிமைகள் தினே தினே அபகரிக்கப்பட்டுவருகின்றன.

கொடிப்பிரச்சினை, குடிப்பிரச்சினை என்ற அளவில் ஆரம்பிக்கப்பட்டு - மொழிப் பிரச்சினையில் முழு உருப்பெற்ற இன வொழிப்பு நடவடிக்கை இன்று ஆபத்தான நிலையில் கோர ரூபம் எடுத்துள்ளது.

### கல்வி அறிக்கை

தமிழ் பேசும் மக்களில் சரி பாதியினரான மலை வாழ் மக்களை நாட்டை விட்டு ஓட்டப் புதிய திட்டங்களையும் அரசு உருவாக்கியுள்ளது. புதிய திட்டத்தின் மூலம் வெளியேற்ற முடியாதவர்களை அல்லது வெளியேற விரும்பாதவர்களை இன மாற்றம் செய்யவும் வெள்ளை அறிக்கை என்ற பெயரில் கல்வி அறிக்கை வெளிவந்திருக்கிறது.

இத்தனை சூழ்ச்சிகளுக்கும் வளைந்து கொடுக்க மறுக்கும் மலைவாழ் தமிழ் பேசும் மக்களை ‘இலங்கையர் மயம்’ என்ற ஏக சிங்கள மயக் கொள்கை மூலம் பட்டினி போட்டு சாகடிக்கவும் ஆள வந்தார் முடிவு செய்து விட்டார்கள்.

மறு புறத்தில் வட-கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் பேசும் மக்களையும் ஒதுக்கி வைத்து அழித்து ஒழிக்க அரசு பல புதிய திட்டங்களைத் தயார் செய்தும் அமுல் நடாத்தியும் வருகின்றது.

### சிதறடிக்கும் முயற்சி

குடியேற்றத் திட்டம் என்ற அநாகரிக ஆக்கிரமிப்புத் திட்டத்தை அன்று பதவியிலிருந்த ஐக்கிய தேசியக் கட்சி ஆரம்பித்து வைத்தது. அதைச் சீரிய முறையில் செவ்வனே நடாத்தி வருகிறது இன்றைய அரசு. இந்தத் திட்டத்தின்மூலம் நமது பொன்னான பூமிகள் இன்று சிங்களச் சீமைகளாக மாறி விட்டன, மாறி வருகின்றன.

வடக்கையும் கிழக்கையும் பிரித்து அதன் மூலம் தமிழ் பேசும் மக்களைத் தொடர்பற்ற முறையில் சிதறடிக்கவும்; திந்தமிழர் தலைநகர் என்று மார்தட்டிக் கூறும் திருமலையைச் சிங்களவரின் செங்கோட்டையாக்கவும், வேண்டிய ஏற்பாடுகள் கன வேகத்தில் நடைபெற்று வருகின்றன.

### சிங்களத்தின் அவசியம்

அரசாங்கத்திற்கு ஊழியம் செய்து அதன் மூலம் வாழ்க்கை நடாத்திவரும் பத்தாயிரக்கணக்கான தமிழ் பேசும் அரசாங்க ஊழியர்களை வெளியேற்றும் படலம் மறுபுறத்தில் வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகிறது.

அன்னிய ஆட்சிக் காலத்திலேயே தனித் தமிழ் கற்று எழுத்தறிவிக்கும் பணி செய்த ஆசிரியர்களை அன்னிய மொழி கற்கும் வண்ணம் அன்றைய சர்வாதிகார அரசுகள் பணிக்கவில்லை. கேவலம், இன்று ஜனநாயக ஆட்சி நடைபெறுவதாகத் தம்பட்டமடிக்கும் இலங்கை இன வொழிப்பு அரசு அவ்வாசிரியர்களையும் சிங்களம் படி என்று சிங்களத்தில் சுற்றறிக்கைகளை விட்டு வற்புறுத்துகிறது. சிங்களம் கற்கத் தவறினால் பதவி பறிபோகும் என்கிறது அரசு.

தமிழ் பேசும் மக்கள் வாழும் இடங்களில் செயல்படும் அரசாங்கத் திணைக்களங்களில் செயல் முறை சிங்களத்தில். அவற்றைச் செவ்வனே நடாத்த சிங்கள எழுதுவினைஞர்கள். பொது மக்கள் தங்கள் கருமங்களை ஆற்ற இவ்விடங்களுக்குச் சென்றால் சிங்களத்தில் கேள்வி. ஆற்ற வேண்டிய கருமங்கள் காலதாமதமாவதால்—செலுத்த வேண்டிய வரிகளை உரிய நேரத்தில் செலுத்தத் தவறினால்-சாதாரண தமிழ் பேசும் பொது மக்களும் தண்டனைக்குள்ளாகுகிறார்கள்.

அரச ஊழியர்கள் மட்டுமல்ல, சாதாரணத் தமிழ் பேசும் பொது மக்களும் சிங்களத்தைத் தெரிந்திருக்க வேண்டிய நிர்ப்பந்த நிலை உருவாகிவிட்டது.

### சிங்கள நாடாக்க முடிவு

நாட்டை நிர்வகிக்கும் பொறுப்பில் இருக்கும் அரசு நாட்டில் இருக்கக் கூடிய அதி முக்கியமான, சிறுபான்மையினர் பிரச்சினையைத் தீர்க்க இரு வழி முறைகளைக் கையாளுகிறது. ஒன்று சிறுபான்மையின மக்களைச் சிதறடித்து வலுக்கட்டாயமாகச் சிங்களத்தைப் புகுத்தி, அவர்களை எப்படியும் இன மாற்றம் செய்து இலங்கையை ஏக சிங்கள நாடாக்குவது. இரண்டாவது சிறுபான்மை மக்கள் வாழுவதற்கு, உரிய வழி முறைகளை, வசதிகளைத் துண்டித்து அவர்களைப் பட்டினி போட்டுச் சாகடிப்பது அல்லது நாட்டைவிட்டுத் துரத்திவிட்டு இலங்கையை ஏக சிங்கள நாடாக்குவது. பின்னைய திட்டத்தைச் செயல்படுத்துவதில் அரசு முனைகிறது. நாட்டை ஏக சிங்கள நாடாக்குவது என்றும் முடிவு செய்துவிட்டது.

ஆனால் சிறுபான்மை மக்களாகிய தமிழ் பேசும் மக்கள் ஆட்சியாளரின் இச் சதித் திட்டத்தை முறியடிப்பது என்று என்றோ முடிவு செய்துவிட்டார்கள். சதித்திட்டம் செயல் திட்டமாகும் பொழுது பல முறைத் தடுத்தும் நிறுத்தியுமுள்ளனர். இத் திட்டம் முழு உருப்பெறும் பொழுது அதை முறியடிப்பதற்கும் தமிழ் பேசும் இனம் தயாராக உள்ளது.

### இடதுசாரிகள்

இந்த நிலையில் தேசியம் பேசும் இடதுசாரிகள் என்ற பிற்போக்குவாதிகள் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் சென்று பிரசாரப் பீரங்கியை முடுக்கிவிடுகிறார்கள். தமிழ் பேசும் மக்களின் பிரச்சினையைத் தீர்க்கும் சகல வல்லமையும் தங்களிடம் உள்ளதாகக் கூறுகிறார்கள். இதில் உண்மை உண்டா? இடதுசாரிகளின் அரசியல் பூர்வீகம்தான் என்ன? ‘இடதுசாரிகள்’ என்ற பதத்தினுள் மறைந்திருப்பவர்கள் யார்?

இடதுசாரிகள் என்ற இந்தக் கூட்டு முன்னணியில் இன்று அங்கம் வகிப்பவர்கள் சமசமாஜக்கட்சியினர், கம்யூனிஸ்டுக் கட்சியினர், பிலிப் குணவர்த்தனவின் மக்கள் ஐக்கிய முன்னணியினர். அவர்கள் மொழியில் மேலும் கூறுவதாயின் ‘இதர முற்போக்குச் சக்திகளும்’ இம் முன்னணியினுள் அடங்கும்.

இந்த இடதுசாரி ஐக்கிய முன்னணியினரின் அரசியல் பூர்வீகம் பற்றி தமிழ் பேசும் மக்கள் தெரிந்திருந்த பொழுதிலும் திரைமறைவில் உள்ள சிலவற்றை வெளியுலகிற்குத் தெரிய வைக்க வேண்டும்.

### சிங்களம் மட்டும் சட்டத்தின் தந்தை

இ. ஐ. முன்னணியின் தலைவராக நாளை வரப் போகிறவர், திரு. பிலிப் குணவர்த்தன அவர்கள். இந்த நாட்டின் மார்க்சிச சித்தாந்தத்தின் ‘தந்தை’ என்று வர்ணிக்கப்படுபவர். நாட்டில் தொழிலாள வர்க்கத்தின் விமோசனத்திற்காக அல்லும் பகலும் அயராது உழைப்பவர் என்று எடுத்து இயம்பப்படுபவர். இவர் அங்கத்துவம் வகித்த அமைச்சரவையே சிங்களம் மட்டும் சட்டத்தைக் கொண்டு வந்தது. இது நாடும் ஏடும் அறிந்த உண்மை.

அறுபதாம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலின் போது, பௌத்த மதம் நாட்டின் அரசாங்க மதமாக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை முன் வைத்துப் போட்டியிட்டு வெற்றி பெற்றவர் திரு. பிலிப்குணவர்த்தன, மலைநாட்டுத் தமிழ் பேசும் மக்கள் பிரதிநிதித்துவம் வகிக்கும் ஐ. தோ. கா., இ. தொ. கா, கலந்துகொள்ளும் மேதின விழாவில் பங்கு கொள்ள முடியாது என்று கூறி பச்சை வகுப்புவாதத்தைக் கக்கிய — ‘உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்’ என்றுகூறும்மார்க்சிசத்தின் தந்தை என்ற பெருமைக்குரியவர்.

### கம்யூனிஸ்டுகள்

அடுத்து இலங்கைக் கம்யூனிஸ்டுக் கட்சி 56ம் ஆண்டு வரை மொழிச் சமத்துவம் என்று கூறியவர்கள், 56ம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தல் நேரத்திலேயே மொழிச் சமத்துவத்திற்கு முழுக்குப் போட்டு விட்டுச் சில காலம் இரட்டை வேடம் ஆடினர். 59ம் ஆண்டு முதல் சிங்களம் மட்டுமே இந்நாட்டின் அரச மொழி, வேண்டுமானால் தமிழுக்குப் பிரதேச அந்தஸ்துக் கொடுக்கலாம் என்று பகிரங்கமாகக்கூறினர். மேலும் சிறுபான்மையினரை இன்னலுக்கு உள்ளாக்கும் இதர பிரச்சினைகளைப் பொறுத்த வரையில் ஆளும் கட்சியினரின் பிரதிபிம்பமே இவர்கள்.

இ. ஐ. முன்னணியில் முக்கியத்துவம் பெற்று விளங்குவது லங்கா சமசமாஜக் கட்சியாகும். இக்கூட்டணியில் சிங்களம் மட்டும் சட்டத்தைக் கடைசியாக ஏற்றுக் கொண்டவர்கள் இவர்கள். 56ம் ஆண்டுத் தேர்தல் முடிவைத் தொடர்ந்து இவர்கள் தங்கள் மொழிக் கொள்கையில்‘பல்டி’அடிக்கத்தொடங்கினர். 58ம் ஆண்டு முடிவில் பகிரங்கமாகவே சிங்களம் மட்டும் சட்டத்தை ஆதரித்துப் பேசியதுடன் மட்டும் நிற்காது முழு வகுப்புவாத முறையிலும் சில பல காரியங்களில் ஈடுபட்டுள்ளார்கள் இக் கட்சித் தலைவர்கள். 58ம் ஆண்டு ‘இரட்கம்’ என்ற இடத்தில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் டாக்டர் என். எம். பெரேரா உரை நிகழ்த்துகையில் ‘பத்து வருடங்களுக்கு இடையில் சமசமாஜக்கட்சித் தனிச் சிங்கள இலங்கைக்கு வழி சமைக்கும், ஆட்சிப் பொறுப்புக் கிடைத்தால்’ என்று கூறியுள்ளார். இது போன்ற சம்பவங்கள் பல உள.

ஆனால் இச்சம்பவம் ஒன்றே சமசமாஜக் கட்சியினரின் நிலையைத் தெளிவு படுத்தப் போதுமானது. மேலும் 56ம் ஆண்டே மொழிக் கொள்கையில் ‘பல்டி’ அடிக்கத் தொடங்கியவர்கள், 60ம் ஆண்டு தேர்தல் பிரகடனத்தில் ‘சிங்களம் மட்டுமே’ இந்நாட்டின் ஆட்சி மொழி என்பதை விவாதத்திற்கு இடமின்றித் தெளிவுபடுத்தினர்.

எனவே இ. ஐ. முன்னணியில் முக்கியத்துவம் பெற்று விளங்கும் இம் மூன்று கட்சிகளும், அவைகள் ஒன்றுபட முன்னரே சிங்களம் மட்டும் சட்டத்தை ஏற்றுக்கொண்டனர் என்பதும் வகுப்புவாத ரீதியில் இயங்கத் தலைப்பட்டனர் என்பதும் மறுக்க முடியாத உண்மைகள்.

(13-ம் பக்கம் பார்க்க)

## பௌத்த நாட்டில் புரட்சிக்கு இடமில்லை

—டாக்டர் பெரேரா

## புதிய தமிழரசுக் கட்சிக் கிளைகள்

### தலவாக்கொல்லை

இலங்கைத் தொழிலாளர் கழக அட்டன் கிளைச் செயலாளர் திரு. இ. நாகேந்திரம் தலைமையில் 5-4-64ம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 11 மணியளவில் இலங்கைத் தமிழரசுக் கட்சி தலவாக்கொல்லைக் கிளை நிறுவப்பட்டது.

பின் வருவோர் கிளைப் பதவியாளர்களாகத் தெரிவு செய்யப்பட்டார்கள்: தலைவர்: திரு எஸ். தருமலிங்கம், வட்டக்கொடை, துணைத் தலைவர்: திரு. க. வேலு, பூண்டுலோயா, செயலாளர்: திரு. வி. அலெக்சாண்டர். வட்டக்கொடை, துணைச் செயலாளர்: திரு. எம். எஸ். செல்வராசா, நாகசேனை, பொருளாளர்: திரு. எம். பழனி, வட்டக்கொடை.

பின் வருவோர் ஆட்சிக் குழு உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்: திருவாளர்கள்: கோவிந்தசாமி, எம். கே. இராமசாமி, வி. சிவசாமி.

### நீர்வேலி

கடந்த 4-4-64ல் நீர்வேலி தமிழரசுக் கட்சிக்கிளை திரு. க. சின்னத்துரை முன்னிலையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. தலைவராகத் திரு. அ. பூதத்தம்பி தெரிவு செய்யப்பட்டார்.

செயலாளராகத் திரு. அ. தவராசாவும், உதவிச் செயலாளராகத் திரு. சி. அருந்தவநாதனும், பொருளாளராகத் திரு. செ. பாலசிங்கமும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். எட்டுப் பேர் கொண்ட நிர்வாக சபையும் ஏற்படுத்தப்பட்டது.

### அச்சுவேலி

அச்சுவேலி கிளைத் தலைவராக, அச்சுவேலி கிராமச் சபைத் தலைவரான பண்டிதர் சு. இராமசாமி தெரிவு செய்யப்பட்டார். உப தலைவர் திரு. க. செல்லத்துரை. திரு. கா. க சின்னத்தம்பி ஆகியோரும், செயலாளராகத் திரு. ச. பொ. நவரத்தினம், உதவிச் செயலாளராகத் திரு. சு. நாகலிங்கம் முதலியோரும் தெரிவு செய்யப்பட்டனர். பொருளாளர்; திரு. இ. வெ. இராமசாமி.

நிர்வாக சபை உறுப்பினர்களாக எட்டுப்பேர் கொண்ட ஒரு குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

### புத்தூர்

ஆவரங்கால் கிராம முன்னேற்றச் சங்கத்தில் நடைபெற்ற தமிழரசுக் கட்சிக் கிளை அங்குரார்ப்பணத்தின் போது, தலைவராகத் திரு. க. சின்னத்துறை தெரிவு செய்யப்பட்டார். உபதலைவராகத் திரு. கா. அரசரத்தினம் தெரிவு செய்யப்பட்டார்.

செயலாளராகத் திரு. வெ. கணபதிப்பிள்ளை, உதவிச் செயலாளராகத் திரு. சி. சிவசம்பு, பொருளாளராகத் திரு. இ. செல்லத்துரை ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

செயற்குழு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைநகரில்

# புத்தாண்டு கலை விழா

விவேகானந்த சபையாரின் புத்தாண்டுக் கலை விழா சென்ற ஞாயிற்றுக்கிழமை கொழும்பு விவேகானந்தவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது. திரு. ஆழ்வாப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் செல்விசற்சொரூபவதி நாதன் 'மங்கை நல்லாள் மாதவி' என்ற தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்தினார். அன்னார் தமது உரையில் 'கண்ணகியின் கற்பு வீரம் நிறைந்ததாகவும் மாதவியின் கற்பு ஈரம் நிறைந்ததாகவும் உள்ளது' என்ற புதுமையான கருத்தை, சிலம்பின் சிறப்பை, மாதவியின் மாண்பை எடுத்துக் கூறினார்.

கொட்டாஞ்சேனை கலையரங்க மாணவிகளின் பல்வேறு நடனங்களுடன் 'யாழ்ப்பாணன்' என்னும் வரலாற்று நாடகமும் விழாவில் இடம்பெற்றன.

நாடகத்தின் கதை நாடறிந்தது. அம்பலவாணன் என்ற யாழ்ப்பாடி ஏழை. அத்துடன் அந்தகனுமாவன். அவனின் மனைவி அங்கயற்கண்ணியோ ஆடம்பரமாக வாழவேண்டுமென்ற அடங்காத ஆவல் கொண்டவள். மனைவியின் நச்சரிப்பைத் தீர்க்க திரைகடலோடியாவது திரவியம் தேடுவது என்று முடிவு செய்கிறான் அந்தகனான யாழ்பாடி. காவிரிப்பூம் பட்டினத்திலிருந்து கப்பல் மார்க்கமாக ஈழத்தை வந்தடைகிறான் அவன். ஈழ மன்னன் முன்னிலையில் கவிபாடி அவன் அன்புக்கு ஆளாகிறான். புலவர்களுக்கு இல்லையெனாது வாரி வழங்கும் மன்னன் வட பகுதியில் உள்ள குடா நாட்டை யாழ்பாடிக்குப் பரிசாக வழங்குகிறான். கதை முடிகிறது.

யாழ்பாடியாக வந்த எம். ஆலால சுந்தரம் தனக்கென தனியானதொரு இடத்தை நிலை நிறுத்தி விட்டார். கண் மறைந்த நேரத்தில் அவரின் நடிப்பு உண்மையிலேயே உயர்ந்து விளங்கியது. ஈழத்து அரசனாக வந்த வி. எஸ். இரத்தினம் நன்றாக நடித்திருந்த போதிலும் சில இடங்களில் 'கோட்டை' விட்டு விட்டார். அங்கயற்கண்ணியாக வந்த செல்வி நிர்மலா பாத்திரத்தை உணர்ந்து நடித்தார். மந்திரியாக நடித்த ஞானமணியத்திடம் குறிப்பிட்டுச் சொல்வதற்கு எதுவுமில்லை.

ஜதீஸ்வரம், தில்லானா, வள்ளி திருமணம் ஆகிய நடனங்கள் இடம்பெற்றன. வழுவூர் இராமையாபிள்ளையின் மாணவியான குமாரி லலிதாவும் ஆடினார். நடனமாடியவர்களில் குமாரி சந்திராவிற்கு நல்லஎதிர்காலம் உண்டு என்பது குறிப்பிடத்தக்கதாகும். செல்விகள் விக்னேஸ்வரி, கலைவாணி, மாலினி ஆகியோரின் நடனங்கள் இரசிகர்களின் உள்ளத்தைப் பெருமளவில் கவர்ந்துள்ளன.

நடன நிகழ்ச்சிகளுக்குப் பின்னணி பாடிய செல்வி கௌரீஸ்வரி கனகரத்தினம் இடை நேரங்களில் பெரும் பாடகர்களின் புகழ்பெற்ற பாடல்களில் காலூன்றிய பொழுது ஒவ்வொரு தடவையும் வழுக்கி விழுந்துள்ளார். நடனங்கள் நடைபெறும் பொழுது அவர் கொடுத்த பின்னணி பாராட்டுதற்குரியதாக இருந்தது.

கலை நிகழ்ச்சிகளின் ஆரம்பத்தில் சிறிது நேரம் இன்னிசை வழங்கிய இரு செல்விகளின் நிகழ்ச்சிகளைத் தவிர்த்திருந்தால் கலை விழா முழு வெற்றி.

அண்மைக் காலத்தில் விவேகானந்தசபைநடாத்தி வரும் கலை நிகழ்ச்சிகள் தலைநகரில் வாழும் தமிழ் பேசும் மக்களுக்கு எழுச்சி தருவனவாக உள்ளன. இது போன்ற நிகழ்ச்சிகளைக் காலத்துக்குக் காலம் வழங்க சபைக் கலைப் பகுதியினர் தவறமாட்டார்கள் என்று நம்புகிறோம்.

—பூங்கோதை




## அக்வைனஸ்

நம்மிடையே கலைஞர்கள் பலர் இருக்கக்கூடும். ஆனால் சந்தர்ப்பமின்மையால் பலர் முன்னணிக்கு வர முடியாதிருக்கின்றது. இது போன்றோருக்குச் சந்தர்ப்பமளிப்பதே கலை நிகழ்ச்சிகளின் முக்கிய நோக்கம். சென்ற சனிக்கிழமை மாலை அக்வைனஸ் பல்கலைக் கழகத்தினர் நடாத்திய கலை நிகழ்ச்சி இதனை வலியுறுத்தியது.

முக்கியமாக கழகமாணவி செல்வி. வசந்திநகுலேசுவின் இன்னிசை விருந்து அவருடைய இனிய குரலையும் சங்கீத ஞானத்தையும் காட்டியதுடன் மேலும் பயிற்சியும் தருணமும் கிடைக்குமானால் இவர் ஒரு சிறந்த பாடகியாகத் திகழ்வார் என்பதையும் காட்டியது.

இரு குரலிசையளித்த கழக மாணவர்கள் சிறீரங்கநாதனும் சகாதேவனும், தனிக்குரலிசைத்த சக்ரவர்த்தியும் தங்களிடம் கலைத்திறன் உண்டென்பதைக் காட்டினர்.

இரண்டு நாட்டிய நிகழ்ச்சிகளை அளித்து சபையோரிடம் 'சபாஷ்' வாங்கிய செல்வி. யோகாம்பிகை மெய்யப்பன் சிறிது முயற்சியுடன் முன்னணிக்கு வரக் கூடியவர் என்பதை நிரூபித்தார்.

பொன்னம்பலம் சகோதரிகளின் வயலின், வீணை சேர்ந்த வாத்திய இசை குறிப்பிடத்தக்கது. செல்வன். நேசதுரை தியாகராஜனைப் பொறுத்தமட்டில் அவர் எல்லா நிகழ்ச்சிகளிலும் தன் முத்திரையைப் பொறித்து சபையோரின் பாராட்டுதலைப் பெற்றுவிட்டார்.

விழா ஆரம்பத்தில் செல்விகள்: வாசுகி நகுலேசு, சரோஜினி மெய்யப்பன் மற்றும் சிறீரங்கநாதன், சகாதேவன் ஆகியோர்ஒருமித்து இசைத்த தமிழ் வணக்கம் விழாவிற்கே ஒரு சிறப்பைக் கொடுத்தது. அவ்வாறே ராஜ் நகைச்சுவையினரின் நாடகமும் விழாவைச் சிறப்புடன் முடித்தது.

சங்கத் தலைவர் நா.பொன்னம்பலம், தனது உரையில் தமிழை வளர்க்கத் தமிழர்கள் தமிழ் மொழியையே உபயோகித்தல் அவசியம் என்று வலியுறுத்தினார். இறுதியில் சங்கச் செயலாளர்: செல்வி தேவிகா சந்திரசேகரா எல்லோருக்கும் நன்றி கூறினார்.

நல்ல முயற்சி என்றே கூற வேண்டும்.

—மதி—

## சரோஜாதேவிக்கு பதில் தேவிகா

ஜெமினி ஸ்டுடியோஸ் ஹிந்தியில் தயாரித்து அண்மையில்வெளிவந்த 'ஜிந்தகி' கதையை சில மாறுதல்களுடன் தமிழில் தயாரிக்கின்றனர். இப் படத்தில் முக்கிய பாத்திரம்ஏற்றுநடிப்பதற்கு சரோஜாதேவி ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தார். இப்பொழுது அவரது ஒப்பந்தத்தை ரத்து செய்துவிட்டு அவரிடத்தில் தேவிகாவை ஒப்பந்தம் செய்திருக்கிறார்கள்.

சென்ற வாரம் தேவிகா சம்பந்தப்பட்ட மூன்று காட்சிகள் படமாக்கப்பட்டதாம்.



எழில் முகத்தைக் காட்டும் ஏந்திழை விஜயகுமாரி, எதையோ எதிர் பார்க்கிறார். அவர் தேடுவது பணத்தையா? அல்லது குணத்தையா என்பதை அறிய வேண்டுமானால் சினிமாத் திரைகளில் பவனி வரும் எம். ஏ. வி. பிக்சர்சாரின் 'பணம் பந்தியிலே' படத்தைத்தான் பார்க்க வேண்டும்.



சபரிமலை என்ற காடடர்ந்த மலைப் பிரதேசத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ஐயப்ப மூர்த்தியின் அவதாரத்தைச் சித்திரிக்கும் 'சபரிமலை ஸ்ரீ ஐயப்பன்' என்ற வர்ணப்படம் என்டர் டெயின்மெண்ட் திரைகளில் விருந்தளிக்கிறது சபரிமலையில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள ஐயப்ப மூர்த்தியின் சிலை இது.

# நாடகப் போட்டி

கடந்த 9-4-64 வரைஎமக்குக் கிடைத்த விடைகளைக் கணக்கிட்டு கொழும்பில் நடைபெற்ற நாடகங்களின் பட்டியலையும், சிறந்த நடிகர், நடிகை விபரத்தையும் இவ்வாரம் தருகிறோம். ஏனைய விபரங்கள் தொடரும்.

உங்கள் விடைகளை அனுப்பி வைப்பதற்கு மேலும் சில வாரங்களே உள்ளன.

சிறந்த நாடகம்:-

| | |
|---|---|
| விந்தியத்தின் விளிம்பிலே | —386 |
| சிங்க முழக்கம் | —362 |
| மண்ணும் மங்கையும் | —298 |
| ஸ்புட்னிக் சுருட்டு | —184 |
| வாடகை வீடு | —173 |
| அது அப்ப இது இப்ப | —169 |
| எரிமலை | —135 |
| ஒன்றே குலம் | —132 |
| யாருக்காக அழுதான் | —128 |
| மஞ்சள் குங்குமம் | —88 |
| மண்ணுக்கு உயிர் | —87 |

சிறந்த நடிகர்

| | |
|---|---|
| லடீஸ் வீரமணி | —278 |
| கலையழகன் | —269 |
| இராஜேஸ்வரன் | —262 |
| வரணியூரான் | —251 |
| ஏ. கிதார் | —212 |
| தேவன் அழகக்கோன் | —197 |
| கே. எம். வாசகர் | —193 |
| வெற்றிவேந்தன் | —186 |
| உதயகுமார் | —153 |
| எஸ். விமலநாதன் | —78 |

சிறந்த நடிகை

| | |
|---|---|
| சந்திரகலா | —638 |
| கிருஷ்ணகுமாரி | —517 |
| இராஜேஸ்வரி சண்முகம் | —372 |
| நிர்மலா ஜோர்ஜ் | —328 |
| ராஜாமணி | —139 |
| யோகா சொக்கநாதன் | —81 |

(தொடரும்)

## முடிவுத் திகதி 11-5-64

குறிப்பு: ஒரு உறைக்குள் ஒருவர் எத்தனை விடைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம். ஆனால் போதிய முத்திரைகள் ஒட்ட வேண்டும்.

## நாடகப் போட்டி

1963-ம் ஆண்டில்.............................................
(ஊரின் பெயர்)

நடைபெற்ற தமிழ் நாடகங்களில்

சிறந்த நாடகம்.............................................

சிறந்த நடிகர் .............................................

சிறந்த நடிகை.............................................

சிறந்த நகைச்சுவையாளர்.............................................

சிறந்த கதாசிரியர்.............................................

சிறந்த இயக்குநர் (டைரக்டர்).............................................

சிறந்த தயாரிப்பாளர்.............................................

சிறந்த வெளியீட்டாளர்.............................................

ஒப்பம்:.............................

முகவரி.............................

.............................

.............................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் மாவட்டத்தில் காணி விநியோகம்

## நிரந்தர பயிர்ச் செய்கைக்கு பத்து ஏக்கர் வழங்கப்படும்

—————0—————

### மத்திய வகுப்பினர் விண்ணப்பிக்கலாம்

மன்னார் மாவட்டத்திலுள்ள வெள்ளாங்குளம் பகுதியில் நிரந்தரப் பயிர் செய்வதற்கு ஐந்து ஏக்கர் வீதமும் மாற்றுப் பயிர் செய்வதற்கு ஐந்து ஏக்கர் வீதமும் தலாபத்து ஏக்கர் காணி மத்திய வகுப்பினருக்கு விநியோகம் செய்யப்படவுள்ளது. காணி பெற விரும்புவோர் இம்மாதம் 30ம் திகதிக்கு முன்னர் மன்னார் அரசாங்க அதிபருக்கு விண்ணப்பம்செய்ய வேண்டும்.

மன்னார் மாவட்டத்திலுள்ள வெள்ளாங்குளம் பகுதியில் பத்தாயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட காணி மத்தியதர வகுப்பினருக்கு விநியோகம் செய்யப்படவுள்ளது. கீழ்க்காணும் தகமையுடையவர்களது விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

விவாகமாகாத நடுத்தர வகுப்பினர், ஒரு வருடத்திற்கு 12,000 ரூபாவிற்கு குறையாத வருமானம் உடையவராய் இருத்தல் வேண்டும்;

விவாகமானவர்—ஒரு வருடத்திற்கு 24,000 ரூபாவிற்கு குறையாத வருமானம் உடையவராய் இருத்தல் வேண்டும்.

இதை உறுதிப்படுத்த உள்நாட்டு இறை வரித்திணைக்களத்தினால் வழங்கப்பட்ட 1962-63ம் வருட இல்லையேல் அதற்கு முந்திய வருட வருமான வரிச் சான்றுகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு விண்ணப்பக்காரருக்கும் தலா பத்து ஏக்கர் காணி கொடுக்கப்படும். ஐந்து ஏக்கர் நிலத்தில் நிரந்தரமான பயிர்களை செய்தல் வேண்டும். மிகுதி ஐந்து ஏக்கரில் வெங்காயம், கடலை, வாழை, புகையிலை, காய் கறி போன்ற மாற்றத்திற்குரிய பயிர்களைச் செய்யலாம். இது பற்றிய விபரம் அண்மையில் வெளியாகிய வர்த்தமானியில் உள்ளது.

#### மாதிரி விண்ணப்பப் படிவம்

விண்ணப்பப்பத்திரம்—
வெள்ளாங்குளம்

1. பெயரும் விலாசமும்.—

2. வயது.—

3. விவாகமானவரா.—

4. விவாகமானவரானால் பிள்ளைகள் எத்தனை.—

வயது என்ன.—

5. மனைவி/கணவன் இருக்கிறாரா.—

6. (அ) 1962/63-ல் மதிக்கப்பட்ட சொந்த வருமானம் அல்லது முந்தின வருட வருமானம்.—

(ஆ) கணவன் மனைவி என்போருக்கு வருமானம் இருந்தால் 1962/63 வருமானம்.—

7. சொந்தக் காணியின் விஸ்திரணம், அது எங்கு உள்ள தென்பதையும் அதில் விளையும் வியாபாரப் பயிர்களையும் தெரிவிக்க.—

(அ) விண்ணப்பக்காரருக்கு.—

(ஆ) மனைவிக்கு/கணவனுக்கு.—

8. விண்ணப்பக்காரருக்கு பெற்றோருக்கு உரிய காணியின் விஸ்திரணம், பயிர்கள் ஏதாவது இருந்தால் அதன் விபரம்.—

9. மனைவி/கணவன் பெற்றோரின் காணியின் விஸ்திரணம்.—

10. திருத்துவதற்குள்ள முதலின் தொகை.—

11. திருத்துவதற்கு விண்ணப்பக்காரரால் வருடா வருடம் செலவிடக்கூடிய தொகை.—

1.2. குறிப்பு.—

விண்ணப்பக்காரரின் கையொப்பம்.

திகதி.—

## இன்பத் தமிழுக்கு..

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

மலை வாழ் தமிழர் பிரச்சினையில் இவர்கள் நிலை ஏனைய சிங்களக் கட்சிகளினது நிலையிலிருந்து மாறுபடவோ அல்லது வேறுபடவோ இல்லை. பிலிப் குணவர்த்தனவின் நிலையைப் பற்றி ஆரம்பத்திலேயே குறிப்பிடப்பட்டுள்ளது.

சமசமாஜக்கட்சியைப் பொறுத்தவரையில் ஒரு சம்பவத்தை எடுத்துக் கூறினால் நிலைமையைத் தெளிவுபடுத்தப் போதுமானதாகும்.

59ம் ஆண்டு, அகலவத்தைப் பிரதிநிதியும் சமசமாஜக்கட்சி முக்கிய பிரமுகருமான திரு. அனில் முனசிங்கா அன்றைய தொழில் மந்திரி திரு. டி. பி. இலங்கரத்தினவுக்கு எழுதிய கடிதமொன்றில் 'இந்தியருக்கு முக்கியத்துவம் கொடுக்கும் முதலாளிகள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கவும்' என்று வேண்டியுள்ளார்.

'நாடற்றவர் பிரச்சினையில் இந்தியா அமுல் நடாத்தும் கட்டுப்பாட்டைத் தளர்த்தும் வண்ணம் இந்திய அரசாங்கத்தை வற்புறுத்துவோம்' என்கின்றனர் சிறுவுக்குச் சிந்து பாடிய கம்யூனிஸ்டுகள்.

இத்தகையவர்கள் மலைவாழ் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினையைத் தீர்க்க முயல்வார்கள் என்று எதிர்பார்ப்பது 'மண் குதிரை'யை நம்பி அறு கடக்க முற்பட்ட கதையாகவே முடியும்.

### இவர்களால் முடியுமா?

கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சமசமாஜக் கட்சி வாலிபர் மாநாட்டிலும் இவ்வாரம் நடைபெற்ற கம்யூனிஸ்டுக் கட்சி வாலிபர் மாநாட்டிலும் உரை நிகழ்த்திய இக்கட்சிகளின் தலைவர்கள் தமிழர்களின் பிரச்சினைகள் தீர்வதற்கு உள்ள ஒரே வழி இடதுசாரிகள் பதவிக்கு வருவதேயாகும் என்று கூறியுள்ளார்கள்.

தமிழினத்தை ஒழித்துக் கட்டுவதில் ஏனைய சிங்களக் கட்சிகளுடன் போட்டி போட்டுக் கொண்டு இனவொழிப்புச் சாசனம் அமைத்திருக்கும் இவர்களா நமது பிரச்சினையைத் தீர்க்கப் போகிறார்கள்? இல்லை, கடந்த 30 வருடங்களாக ஆட்சியைக் கைப்பற்றுவோம் என்ற பகற்கனவிலிருந்துவிடுபட்டு, இன்று கிடைத்தது இலாபம் என்ற முறையில் முதலாளித்துவ வாதிகளான சுதந்திரக் கட்சியினரின் ஆட்சியில் மந்திரிப் பதவிக்காக ஏங்கித் தவிக்கும் இவர்களா சிறுபான்மை மக்களின் பிரச்சினைக்குப் பரிகாரம் காணப் போகிறார்கள்? சுண்டியெடுத்த சுயநலவாதிகளாக பதவியை தேடி ஓடும் இவர்களிடம் தமிழினத்தின் தலைவிதியை நிர்ணயிக்கும் பொறுப்பை ஒப்படைப்போம் என்று, சிந்திக்கும் திறன்படைத்த யார்தான் கூறுவர்?

'தமிழ்பேசும் அரசாங்க ஊழியர்கள் சிங்களம் படிக்கத் தவறினால் பொதுமக்களில் மிகச் சிறு பகுதியினரின் அனுதாபமே கிட்டும்' என்று கம்யூனிஸ்டுக்கட்சித் தலைவர் ஒரு இடத்தில் கூறியுள்ளார். இவர்களா தமிழர் பிரச்சினையைத் தீர்க்கப் போராடப் போகிறார்கள்?

### தொழிலாளர் மத்தியில் பிளவு

தொழிலாளர்களை இன ரீதியாகப் பிரிப்பது தவறு என்றும், இதை இலங்கைத் தமிழரசுக் கட்சி செய்து வருவதாகவும் யாழ்ப்பாணத்தில் ஒரு சமசமாஜக் கட்சித் தலைவர் கூறியுள்ளார். முதலில் தொழிலாளர்களை இன ரீதியாகப் பிரிப்பது யார்? இடதுசாரியினரின் ஆதரவில் இயங்கும் தொழிற் சங்கங்களில் வகுப்புவாதவெறி தலைவிரித்தாடுகிறது. ஏன்? 'அரசாங்க லிகிதர் சங்கம்' என்று கூறப்படும் எழுதுவினைஞர்களின் சங்கம் சிங்களம் மட்டும் சட்டத்தை அமுல் நடத்துவதில் தீவிரம் காட்டும்படி அரசாங்கத்தை வேண்டுவதுடன் சங்கத்தின் கருமங்களையும் தனிச் சிங்களத்தில் நடாத்துகிறது. இந்த நிலையில் தமிழ் பேசும் எழுதுவினைஞர் எங்ஙனம் அதில் அங்கம் வகிப்பது? இதை முன்னரே உணர்ந்தவர்கள் சிலர் ஒன்று சேர்ந்து 'அரசாங்க எழுதுவினைஞர் சங்கம்' என்ற பெயரில் மொழிவழித் தொழிற் சங்கத்தை உருவாக்கினர். ஆட்சியாளரின் சில நடவடிக்கைகளை எதிர்த்து சங்க மூலம் சட்ட நடவடிக்கையிலும் இறங்கினர்.

அரசாங்க லிகிதர் சங்கத்தில் ஒட்டியிருந்த ஒரு சில தமிழ் பேசும் ஊழியரும் இந்தஆண்டுஆரம்பத்துடன் அ. எ. வி. ச. த்துடன் சேர்ந்துள்ளனர் நாட்டில் உள்ள ஒவ்வொருதேசியத்தொழிற் சங்கத்திலும் இதே முறை கையாளப்படுகிறது. எனவே தான் இன்று மொழிவழித் தொழிற் சங்கங்கள் இருபதிற்கு மேல் தோன்றியுள்ளன.

### தமிழரசார் கூற்று! பிழையானதா?

மறுபுறத்தில் இ. ஐ. முன்னணியின் நாளைய தலைவர் திரு. பிலிப் குணவர்த்தனவுக்கு தமிழ்த் தொழிலாளர்கள் தீண்டப்படாதவர்கள். இந்த நிலையில் தமிழரசுக் கட்சி மொழி வழி பிரியும்படி தமிழ்த் தொழிலாளர்களுக்கு அறை கூவல் விடுத்திருந்தால் அது பிழையாகுமா?

சமசமாஜக் கட்சி மாநாட்டில் உரை நிகழ்த்திய திரு. காராளசிங்கம் என்பவர் 'தமிழ் பகுதிகளிலுள்ள பொலிசார் அநீதியான முறையில் நடப்பதாகவும், இப்படித் தென்னிலங்கையில் ஈடுபட இவர்களுக்குத் துணிவு வராது' என்றும் கூறினாராம். எத்தனை தூரம் தேசியம் பேசிய பொழுதிலும் அவரின் உள்ளுணர்வு, அவரை விட்டு வைக்கவில்லை. இப்படிப் பேசிய அவர், 'இலங்கையில் 20 லட்சம் பேர் எல்லா உரிமையும் இழந்து தவிக்கிறார்கள்' என்றும் கூறினாராம்.

இந்த உரிமை இழந்தவர்களுக்கு உரிமை பெற்றுக் கொடுக்க இடதுசாரி இயக்கங்கள் வைத்திருக்கும் திட்டம் என்ன என்பதை அவர் எடுத்துக் கூறவில்லை. அதே நேரத்தில் இந்த இடதுசாரி இயக்கங்களும் இவர்களை மேலும் அநாதைகளாக்க முயலுகிறது என்பதை அந்தத் தமிழ் அன்பர் அறியும் நாள் வெகு தூரத்தில் இல்லை.

### செய்தது என்ன?

இடதுசாரி ஐக்கிய முன்னணியினர் தமிழ் பேசும் மக்கள் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு திரிகரண சுத்தியுடன் செயல்படுவார்கள் என்றால், தமிழினத்தைப் பாதிக்கும் பிரச்சினைகளையிட்டு ஏன் இன்றுவரை குரல் எழுப்பவில்லை?

கல்விப் பிரச்சினை பற்றிய வெள்ளை அறிக்கையை எதிர்த்துக் குரல் எழுப்பினார்களா?

நாட்டில் தமிழ் பேசும் மக்களை கள்ளத்தோணிகள் என்று கூறி கைது செய்த நேரத்தில்அந்த அநீதியை— அநாகரிகமான செயலை எதிர்த்துக் குரல் எழுப்பினார்களா?

தமிழ் பேசும் அரச ஊழியர்களை இன்று அரசாங்கம் கட்டாய ஓய்வில் அனுப்புவதை எதிர்த்து சுண்டு விரலைத்தானும் அசைத்தார்களா? குடியேற்றத் திட்டம் என்ற பெயரில் தமிழர் பூமிகள் ஆக்கிரமிப்புச் செய்யப்படுவதைப் பற்றிச் சிறிதாவது எண்ணிப் பார்த்தார்களா?

கிடையாது.

மாறாக இவற்றை அமுல் நடாத்தும் ஆட்சியாளருடன் கொஞ்சிக் குலாவுகிறார்கள். அவர்களுடன் கூட்டுச் சேருவது பற்றி தினமும் மந்திர ஆலோசனை நடாத்துகிறார்கள். கூட்டுச் சேருவதினால்தாங்கள் அடையும் லாப நட்டம் பற்றித் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் நின்று ஆராய்கிறார்கள்.

### பௌத்த நாடு

இலங்கை ஒரு பௌத்த நாடு. இது எல்லோராலும் ஒத்துக் கொள்ளப்பட்ட விஷயம். ஆகவே பௌத்த நாட்டில் புரட்சி செய்வது என்பது இயலாத காரியம்! இவ்வாறு டாக்டர் என். எம். பெரேரா அண்மையில் கூறியுள்ளார்.

நாட்டில் இருக்கக் கூடிய அரசியல் கட்சிகள் எதுவும் இவ்வளவு துணிவாகவும் முடிந்த கருத்தாகவும் இலங்கை பௌத்த நாடு என்று கூறியது கிடையாது. 'தேசியம்' பேசியவர்கள் சிங்களத்துடன் மட்டும் நிற்கவில்லை; பௌத்த நாடு என்ற நிலைக்கும் வந்து விட்டார்கள். மேலும் மார்க்கீச சித்தாந்தத்தையும் முழு உருவில் ஒதுக்கி விட்டார்கள்.

தமிழ் பேசும் மக்களுக்கு மட்டுமல்ல இந்நாட்டில் இருக்கக் கூடிய தொழிலாள வர்க்கத்திற்கும் இடதுசாரிகள் துரோகம் செய்து விட்டார்கள். இது விவாதத்திற்கு இடமற்ற மறுக்க முடியாத உண்மை

### முதலாளித்துவ பிற்போக்குவாதிகள்

நாட்டில் இருக்கக் கூடிய கண்டியெடுத்த பிற்போக்குவாத முதலாளித்துவ வகுப்பு வாதக் கட்சியாக இன்று இடதுசாரி ஐக்கிய முன்னணி விளங்குகிறது. இது மறுக்கவோ மறைக்கவோ முடியாத உண்மை.

இவர்களா நமது உரிமைகளைப் பெற்றுத் தரப்போகிறார்கள்?

'நமது கட்சி ஆட்சிக்கு வந்ததும் உங்கள் பிரச்சினை தீரும்' என்ற ஒரே பல்லவியைத் திருப்பித் திருப்பிப் பாடுகிறார்கள். இவர்கள் ஆட்சியில் தமிழ் பேசும் மக்கள் அழித்து ஒழிக்கப்படுவார்கள் என்பதற்கு மேலே சான்று காட்டப்பட்டுள்ளது. இதை உணராது சிலர் அவர்கள் அணியில் நியாயம் இருக்கிறதா என்று ஆராய்ச்சி நடாத்த முற்படுகிறார்கள்.

இடதுசாரிகள் எத்தனை தூரம் தேசியம் பேசிய போதும், ஏக சிங்கள பௌத்த ஏகாதிபத்தியத்தை இந்நாட்டில் நிலை நிறுத்த வேண்டுமென்றஇன்பக் குழு குழுப்பின் ஏனைய சிங்களக் கட்சிகளுக்குச் சளைத்தவர்கள் அல்லர்.

### நமது நிலை

தமிழ் பேசும் மக்களை ஆபத்து என்ற இருள் மேகம் சூழ்ந்துள்ளது. எந்த நேரம் அடக்குமுறை என்ற மழையினைப் பொழிந்து பெரு வெள்ளம் என்ற அடிமை நிலைக்குள் அமிழ்த்தும் என்று கூற முடியாது. எனவே தமிழ் பேசும் மக்கள் அவ்வெள்ளத்தினை தேங்காது வெளியேற்ற வடிகால் என்ற அகிம்சை ஆயுதத்தைத் தயார் படுத்தி வைத்துக்கொள்ள வேண்டும்.

இந்த நேரத்தில் நம்மை ஒழித்துக்கட்ட முயலும் வெளியிலுள்ள சக்திகள் ஆசை வார்த்தை காட்டி மோசம் செய்ய முயலலாம். ஆசை வார்த்தையில் மயங்கிப் போலிகள் வழியில் செல்லாதிருப்பதுடன் அவர்களுக்கு நல்ல பாடம் கற்பிக்க வேண்டியதும் தமிழ் பேசுமினத்தின் தலையாய கடமையாகும்.

## திறப்பு விழாவில் மூதூர் முதல்வர்

தம்பலகமம் சித்திவிநாயகர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க புதிய கட்டிடத் திறப்பு விழா, திரு. செ. நடராசா தலைமையில் நடைபெற்றது. திருமலை மாவட்ட கூட்டுறவு உப ஆணையாளர் திரு. ஏ. ஆசீர்வாதம் கட்டிடத்தைத் திறந்து வைத்தார்.

அவ் விழாவின் பங்கு பற்றிய மூதூர் முதல்வர் ஜனாப் எம். ஈ. எச். முஹம்மதலி பேசுகையில், பல நோக்கக் கூட்டுறவு இயக்கம் நல் நோக்குடன் ஸ்தாபிக்கப்பட்ட போதிலும், ஊழல்கள் அதிகம் தாண்டவமாடுவதாகவும், இவைகளைத் தவிர்க்க நேர்மை அவசியமெனவும் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளர்மதி
## சுதந்திரன் மாணவர் மன்றம்

சிறுகதை

## கொல்ல நினைத்தவன்!

—ஆனந்தன்—

“என்ரை சொந்த விஷயங்களிலை தலையிட நான் ஆரையும் விடன். இது அந்தக் கண்ணப்பனுக்கும் நல்லாய்த் தெரியும். தெரிஞ்சும் தெரியாமல் என்னுடைய பகையை விலைக்கு வாங்கிறான். இவனை விடப்படாது”. வேலுவின் மனதிலே இந்தக் குமுறல் ஏற்படுவதற்குக் காரணமாயிருந்தது ஒரெயொரு நிகழ்ச்சிதான்.

வேலுவும் கண்ணப்பனும் பள்ளிப் பருவத்திலிருந்தே நண்பர்களாக இருந்தார்கள். ஆனால் இருவருக்குமிடையே குணத்தில் மலைக்கும் மடுவுக்குமுள்ள வித்தியாசம் இருந்தது. வேலு தீய வழிகளிற் செல்லும்போதெல்லாம் அவனது போக்கை மாற்ற முயல்வது கண்ணப்பனுக்கு வழக்கமாகப் போய்விட்டது. அதற்காக முன்னெப்போதும் வேலு இவ்வளவாகக் கோபித்தது கிடையாது. கண்ணப்பனின் புத்திமதிகளைக் கேட்டு நடந்ததும் கிடையாது.

ஒரு நாள்......கண்ணப்பன் ஒரு செய்தியைக் கேள்விப்பட்டதும் திடுக்கிட்டுப் போனான். அவனது ஊரில் விசுவநாதனைத் தான் மிகவும் நல்லவர் என்று யாவரும் பேசிக்கொள்வார்கள். அவர் அமைதியும் பொறுமையும் கொண்ட குணக்குன்று. ‘நல்லபிள்ளை’ என்று அனைவரும் கூறிக்கொள்வார்கள். யாரோடும் சண்டைக்குப் போகமாட்டார். அவருடைய வீட்டை அன்றிரவு கொள்ளையடிப்பதாக வேலுவும் அவனது நண்பர்களும் திட்டமிட்டிருந்தார்கள். இந்த ரகசியம் எப்படியோ தற்செயலாகக் கண்ணப்பனுக்குத் தெரியவந்தது. அவனாற் சகிக்க முடியவில்லை; பரிதாபப்பட்டான். விசுவநாதனின் மேல் நிறைந்த பற்றும் மதிப்பும் அவனுக்கிருந்தன. அவரை எப்படியும் காப்பாற்றிவிட வேண்டுமென்று நினைத்தான்.

வேலுவைக் கண்டு புத்திமதிகள் சொன்னான். செவிடன் காதிலே சங்கை ஊதினால் எப்படியிருக்கும்?

“விசுவநாதன் நல்லவனோ கெட்டவனோ நமக்கென்ன? அவன் கிடந்தான்......எனக்குத் தேவை பணம்...... வேறொன்றுமில்லை”.

“இந்தா, வேலு. அந்த விசுவநாதன் மிக மிக நல்லவர். சிறு வயதிலேயே நண்பனாகிவிட்டவன் என்பதாற் சொல்கிறேன்-உன் முடிவை மாற்றிக்கொள். இல்லாவிட்டால் நண்பனென்றும் பாரேன். பொலிஸிலே பிடித்துக் கொடுப்பேன். ஜாக்கிரதை! நான் வருகிறேன்.”

கண்ணப்பன் போய்விட்டான். இந்த நிகழ்ச்சிதான் வேலுவின் மனக் குமுறலுக்குக் காரணமாயிருந்தது. இப்பொழுது வேலுவின் கவனமெல்லாம் கண்ணப்பனின் உயிரைக் குடிப்பதிலேயே இருந்தது. தீய செயல்களிற் தனக்கு உறுதுணையாயிருந்து வந்த இருவரை அழைத்து நடந்ததை விளக்கினான்.

“இண்டைக்கு இரவுக்குள்ளை கண்ணப்பனை ஒரு கை பாத்து விட வேணும். பின்னேரம் ஆறரை மணி போலை தான் தோட்டத்தாலை வாறவன். வழியிலை வைத்துச் சரிக்கட்டிப்போட வேணும்; விளங்குதே—?’ தனது கைத்துப்பாக்கியையும் அவர்களிடம் கொடுத்தனுப்பினான் வேலு.

கதிரவன் இருளுக்கு அழைப்பு விடுத்து மேற்றிசையிற் சாய்ந்தான். பரந்து கிடந்த வயல்வெளியின் ஓர் எல்லையில் வளர்ந்திருந்த புதரின் பின்னால் துப்பாக்கியுடன் நின்றனர் இருவரும். வயற்பரப்பை ஊடறுத்துச் சென்ற பாதையானது தனிமையை அனுபவித்து நின்றது. அந்தத் தனிமையைக் கலைத்துக் கொண்டு...அதோ—ஒரு உருவம் பாதையில் வருவது மங்கிய ஒளியிலே தெரிந்தது.

“அதோ, வருவது கண்ணப்பனைத் தானே இருக்கும்—?”

“இந்த வேளையில் இங்கு வேறு யார் வருவர்? நிச்சயம் அவனே தான்! சுடப்போகிறேன்......”

“நன்கு தெரியாமல்...சுடலாமா?”

“சீ— ஏன் இந்த ஐயம்? பயப்படாதே.”

மறுகணம்....படார்....உருவம் சாய்ந்து விழ்கிறது.

“அண்ணை, உருவம் கண்ணப்பன் தானோ எண்டு ஒருக்கா பாத்திட்டுப் போவம். எனக்கு என்னவோ......”

“சரி வா.” இருவரும் சுடப்பட்ட மனிதரின் அருகிற் போகிறார்கள். ஆ......அவர்களாற் தம் கண்களையே நம்பமுடியவில்லை!

யார் அந்த உருவம்? அது தான்......வேலு!

எனது கிராமம்

## கல்முனை

—த. யோகராசா, கல்முனை-3—

எனது கிராமத்தின் பெயர் ‘கல்முனை’ என்பதாகும். கடலிலே ஒருமுனை போல் இக் கிராமம் அமைந்திருப்பதினால் இப்பெயர் இதற்கு அமைந்தது போலும். இக்கிராமம் மட்டக்களப்புக்குத் தெற்கே இருபத்திநான்கு மைல்கள் தொலைவில் உள்ளது.

இங்குள்ளவர்களில் பெரும்பான்மையினர் முஸ்லிம்களே. எனினும் தமிழரும், முஸ்லிம்களும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் போல் ஒற்றுமையாக வாழுகின்றனர். இங்கேயுள்ள கடலில் அதிகமான மீன்கள் பிடிபடுகின்றன. இம் மீன்களில் அதிகமானவற்றை மோட்டார் வண்டிகள் மூலம் மலைப் பிரதேசங்களுக்கு ஏற்றுமதி செய்கின்றனர். இங்கு தினமும் சந்தை கூடுகிறது. இங்குள்ள மக்களுக்குத் தேவையான பொருட்களை இச் சந்தை மூலமே பெற்றுக் கொள்கின்றனர்.

இக் கிராமத்தின் மேற்குப் பக்கம் வயல் நிலங்கள் கண்கொள்ளாக் காட்சியாகப் பரந்து கிடக்கின்றன. இவ் வயல்கள் அதிகமான ஊதியத்தைக் கொடுக்கின்றன. மற்றும் பஸ் நிலையம், பட்டின சபை, பொலீஸ் நிலையம் போன்ற அலுவலகங்களும உள்ளன. நாளுக்கு நாள் முன்னேறி வரும் இக் கிராமம் வருங்காலத்தில் ஒரு தலைசிறந்த நகரமாகும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

## சிறை கொண்டு விட்டாயே!

—“மதியமுதன்”—

பதவி நீடிக்க வேண்டில்—நான்
படிக்க வேண்டுஞ் சிங்களத்தை!
உதவி தருவாரென்று—நான்
உறுதியுடன் இருக்க முடியாது
படிகள் இல்லை என்றால்—பதவி
பலதடவை நீடிப்பதில்லை
ஓடி விடட்டாம் தமிழர்க்கு—இங்கு
ஒரு பதவியும் இல்லையாம்
துடிப்பாள் என் மனைவி என்று
துடித்துக்கடிதம் எழுதினேன்
வெடிப்பான உன் பதில்—கண்டு
வெறுத்து விட்டேன் பதவியை!
பதவி துறநது வந்தால்—நீ
பார்க்காய் என்று நினைத்தேன்
உதவிடத்தான் இங்கு நமக்கு—பல
உள களனிகள் என்றாய்!
உத்தியோகம் பார்த்த எனக்கு...உடல்
உறுதியில்லையென நினைப்பாய்,
நித்தம் பயிற்சி செய்தேன்—இன்றும்
நிறுத்தி விடவில்லை அவற்றை!
புத்தம் புதிய தொழில்கள்—பல
புதுமையாய் இனிச் செய்திடுவேன்
சித்தங் கொண்ட என்னையே நீ
சிறை கொண்டு விட்டாயே!

## அடிமை வாழ்வகற்றிய அண்ணல் லிங்கன்

—‘மாவிட்டபுரத்தோன்’—

அமெரிக்க தேசத்திலே அடிமைக் கொடுமையை அறுத்தெறிய அரும்பாடுபட்டவர்களுட் பெருஞ் சிறப்பு வாய்ந்தவர் இருவர். ஆபிரகாம் லிங்கன் ஒருவர்; அண்மையில் உலக வாழ்வை நீத்த ஜோன் கென்னடி மற்றவர். அடிமை விலங்கை அறுத்துத் தள்ளியவர் ஆபிரகாம் லிங்கன்; நிறபேதத்தை நீக்கிவிட ஊக்கம் கொண்டுழைத்தவர் கென்னடி.

### ஏழை

1809ம் ஆண்டு பெப்ரவரி மாதம் பன்னிரண்டாவது நாளிலே ‘கெண்டுகி’ என்னும் இடத்தில் ஒரு சிறு குடிசையிலே பிறந்தார் லிங்கன். தினசரி உணவுக்கே போதிய வருவாயின்றித் தவித்த ஒரு ஏழைக் குடும்பத்திற் பிறந்த குழந்தை, அமெரிக்கக் கண்டத்தையே ஆட்சி செய்யும் நிலைக்கு உயர்வானென்று யாரும் கனவிலேகூட எண்ணியிருப்பார்களா? கொழுந்து விட்டெரியும் பெரிய தீப்பிழம்பானது ஆரம்பத்தில் சிறிய தீச்சுடராகத்தானே உருவெடுக்கிறது?

### முயற்சி

லிங்கன் தமது சிறு வயதிலேயே விறகுவெட்டியாக மாறிவிட்டார். பெற்றோர்க்குப் பேருதவி செய்துமகிழ்ந்தார். கல்வி கற்பதற்குப் போதிய நேரமோ, வசதிகளோ கிடைக்கவில்லை. கிடைத்த வசதிகளை நன்கு பயன்படுத்தினார். தெரு விளக்கிலே படித்தார்; நூல்களை இரவல் வாங்கிப் படித்தார்; முயற்சி திருவினையாக்கிற்று.

### இலட்சியம்

லிங்கன் தமது ஒன்பதாவது பராயத்தில் தாயை இழந்தார். பதினாறாவது வயதிற் படகோட்டியாக மாறினார். இந்தக் காலங்களிலேதான் அவரது நாவன்மை சுடர்விட ஆரம்பித்தது. கவர்ச்சியான பேச்சுக்களால், இவர்மீது பொது மக்களின் கவனம் திரும்பத் தொடங்கியது. தமது இருபத்து மூன்றாவது வயதில் அரசியற் கதவைத் திறந்து கொண்டு, அடிமைகளுக்காகப் போராடத் தொடங்கினார். ‘அடிமைகளுக்கு வாழ்வளிப்பதே எனது ஒரே இலட்சியம்’ என்று கூறித் தனது இலட்சியப் பாதையிலே ஏறுநடைபோட்டுச் சென்றார். ஆட்சிமன்றத்தில் அங்கத்துவம் பெற்றபோது இவருக்கு வயது இருபத்து மூன்று மட்டுமே!

### ஜனாதிபதி

‘மேரி டொட்’ என்பவரை வாழ்க்கைத் துணையாகக் கொண்டு, இல்லறமாகிய நல்லறத்தை இனிது நடத்தினார். அமெரிக்காவின் பதினாறாவது ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்ற பின்னர் அவரது இலட்சிய வாழ்க்கை கொழுந்து விட்டெரியத் தொடங்கியது. ‘அடிமைவிடுதலை’யைத் தவிர எண்ணுவதற்கு வேறெதுவும் அவருக்கு இருக்கவில்லை. அதைப் பற்றியே எண்ணினார், எழுதினார், பேசினார். மாபெரும் இலட்சியக்கோட்டை முற்றுப்பெறும் நாள் வந்தது. 1-1-1863ல் அடிமைகளுக்கு விடுதலை கிடைத்தது.

### மரணம்

இரு ஆண்டுகளில், அந்த உத்தமருக்கே இவ்வுலகிலிருந்து விடுதலை கிடைத்தது. 14-4-1865ல் நாடக மண்டபத்தில் துப்பாக்கிக்குண்டு அவர்மீது பாய்ந்துவந்தது. ஆபிரகாம் லிங்கன் ஏற்றி வைத்த விடுதலைச் சுடரை அழிக்கும் சக்தி அந்தக் குண்டுக்கு ஏது?

## வண்ணானா? வண்ணனா?

—கல்முனை—செல்வராசா—

வண்ணான் என்று கூறும்போது கல்லினிலே நார் உரிக்கும் ஓர் ஆண்மை மிகுந்த தொழிலாளர் சமுதாயத்தையே குறிக்கின்றது. ஆடைக்கு அழகு செய்யும் இந்த ஓவியச் சமுதாயம், இன்று தமிழ் இனத்தில் பொலிவு இழந்து, வலிவு இழந்து கிடக்கின்றது என நினைக்கும் போது, இதயம் இரத்தக் கண்ணீர் வடிக்கின்றது. வண்ணான் என்றால் அவன் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவன்; அவனுக்கு உரிமையில்லை; என்ற கருத்துத்தான் தமிழ் மக்களிடையே தலைமுறை தலைமுறையாக இருந்து வருகின்றது. ஆனால் இந்த இழிவான கருத்து தவறானதாகும். சித்திரம் தீட்டி அதைச் சிறப்பிப்பவனை ஓவியன் என அழைக்கின்றோம். ஆனால் ஆடைக்குஆவியிட்டு, அழகு செய்து அலங்காரம் செய்யும் ஒப்பற்ற ஓவியனை வண்ணான் என இழிவாகக் கூவி அழைக்கின்றோம். வண்ணான் என்பது தவறான சொல்லாகும். பண்டைக் காலத்தமிழர்கள் இந்த ஓவியனை வண்ணன் என அழைத்தார்கள். ஆனால், காலப் போக்கில் கருத்து மாறி, ஓசை நயத்திற்காகவே வண்ணனை வண்ணான் என அழைக்கின்றனர். இந்த ஓசை நயத்திற்காகவே எழுந்த சொல், பொருள் அற்றதாகும். அதுவுமன்றி வன்மையுள்ள வண்ணார் சமுதாயத்திற்கு அது இழுக்கையும் தேடித்தந்துள்ளது.

### முற்றிலும் தவறு

வண்ணான் என்று ஆணையும், வண்ணாத்தி என்று பெண்ணையும் அழைக்கின்றனர். கணவன் ஆடைக்கு அழகு செய்து வண்ணமிட்டு உழைத்தால், அவன் மனைவியையும் வண்ணாத்தி என்று பெண்பாலாக்கி அழைக்கின்றனர். இப்படிக் கூறுவது முற்றிலும் தவறாகும். ஏனெனில், அப்பெண் அத் தொழிலில் எவ்விதமான ஈடுபாடும் இல்லாதவள். அப்படியிருக்கும் நிலையில் ஆணோடு பெண்ணையும் ஒப்பிடுவது தவறாகும். அப்படிப் பெண்கள் அத் தொழிலில் ஈடுபட்டிருந்தால் அவளை வண்ணத்தி என அழைப்பதே சிறந்ததாகும்.

### கனியிருக்க காயேன்?

“இனிய உளவாக இன்னாது கூறல்
கனியிருப்ப காய் கவர்ந்தற்று”.

என்ற பொய்யா மொழிக் கொப்ப; ஆழ்ந்த கருத்துக்களைக் கொண்ட வண்ணன், வண்ணத்தி என்ற சொல்லிருக்க; வண்ணான் வண்ணாத்தி என்ற பொருளற்ற சொல்லைப் பாவிப்பது, கனியிருக்கக் காயை உண்பது போலாகும். எனவே, இக் கட்டுரையைப் படிக்கும் ஒவ்வொருவரும் இவ்வுண்மையைத் தெளிவுறச் சிந்திக்க வேண்டும். சிந்தித்தால் இதன் உண்மை நன்கு விளங்கும். இப்படி நாம் இந்த இனிமையான சொற்களைப் பாவிப்போமாயின், நம்மில் தாழ்வு நீங்கி உயர்வெய்துவோம். அதுவுமன்றி நாம் ஒரே இனம்; நாம் செய்யும் தொழில் இவ்வுலகில் ஒப்பற்ற ஓவியத் தொழில் என வண்ணார்கள் உணர்வார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழகச் செய்திகள்

## முஸ்லிம்களின் போதனு மொழி தமிழாகவே இருக்க வேண்டும்

### சாஹிராக் கல்லூரித் தமிழ் மன்றத் தலைவர் அறிக்கை

'ஈழத்து முஸ்லிம்களின் போதனு மொழி பற்றி பல கருத்துகள் கொண்ட அறிக்கைகளையும் தனியார்களின் கருத்துக்களையும் பல தமிழ் பத்திரிகைகள் வாயிலாகவும் ஆங்கிலப் பத்திரிகைகளின் மூலமும் கவனித்து வருகின்ரும். பெரும்பான்மையோர் தமிழே போதனு மொழியாக இருக்க வேண்டும் என்பதை ஆதரித்துள்ளனர். வெகு சிலரே முஸ்லிம்களின் போதனு மொழி சிங்களமாக இருக்க வேண்டும் எனக் கூறுகின்றனர். அவ்வாறு கூறுவோரின் காரணங்கள் பொருத்தமானதாகவோ அனைவராலும் ஏற்றுக்கொள்ளக் கூடியதாகவோ அமையவில்லை.

முஸ்லிம்களைப் பொறுத்தவரை இப்பிரச்சினைக்கு தீர்க்கமான ஒரு முடிவு காணுத பட்சத்தில் முஸ்லிம்களின் எதிர் காலம் பலதுறைகளில் பாதிக்கப்படும் என்பது தற்போதைய நிலையைக் கவனிக்கும் பொழுது பூரணமாக விளங்கிவிட்டது.

முஸ்லிம்களைப் பாதிக்கக் கூடிய சில நடவடிக்கைகளில் அரசாங்கம் நடந்துள்ளது. சட்டத்துறையைப் பொறுத்தவரை காதிக் கோடுகள் நிறுத்தப்பட்டமை சிறந்த ஓர் எடுத்துக் காட்டாகவுள்ளது. வெகு விரைவில் முஸ்லிம் லீக்கின் சார்பில் கல்வி மாநாடொன்று நடைபெற இருப்பதாகவும், அதில் இப்பிரச்சினை ஆராயப்படும் என்றும் அறிகின்ரும். முஸ்லிம்களின் போதனுமொழி தமிழாகவே இருக்க வேண்டும். என்பதை இங்கு குறிப்பிட விரும்புகின்றேன.

சிங்களமே போதனு மொழியாக இருக்க வேண்டும் என்று கூறுபவர்கள் அவ்வாறு ஏற்படும் பட்சத்தில் முஸ்லிம்களை எவ்வெவ் வகைகளில் பாதிக்க விருக்கிறது என்பதை உணர வேண்டும். தக்க காரணமின்றி விதண்டாவாதம் செய்பவர்கள் முஸ்லிம்களை இரு கோஷ்டியினராகப் பிரிக்க முனைகின்றனர். அவ்வாருன நிலை ஏற்படக் கூடாது என்பதை அவர்களுக்கு ஆணித்தரமாக எடுத்துக் காட்ட விரும்புகிறேன். முஸ்லிம் லீக் கூட்டும் கல்வி மகாநாட்டில் இப்பிரச்சினைக்கு இடம் வைக்கக் கூடாது என்று அவர்களை வேண்டிக்கொள்கிறேன்.'

இவ்வாறு கொழும்பு சாஹிராக் கல்லூரித் தமிழ் மன்றத் தலைவர், திரு. கே. எம். எச். காலிதீன் பத்திரிகைக்கு விடுத்துள்ள அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

### எங்கள் போதனுமொழி இனிய தமிழே

'இன்று உலகாண்ட தமிழ் ஒதுக்கப்படுகின்றது. வீறு பெற்று வாழ்ந்த தமிழ் வேற்று மொழிக் கடிமையாகின்றது. பத்துத் திங்கள் சுமந்து பெற்றெடுத்து பெரியாளுக்கி உயர்ந்தவனுக்குகிருள் தாய். அதனுலன்ரே, தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லையென்று ஆன்ரேர் கூறியுள்ளனர். அவ்வாறே முஸ்லிம்களைச் சுமந்து பெற்றெடுத்துப் பெரியாளுக்கியது இனிய தமிழ்த் தாய். அதற்குச் சான்றுதான், சீரு, காசிம் படைப்போர் ராஜநாயகம் மஸ்தான் சாகிபு பாடல் போன்ற இஸ்லாமிய இலக்கியங்களும், பல் விழுந்த பாட்டிகூடப் "புள்ளலெக்கா புள்ளலெக்கா ஒண்ட புருஷனங்க போனதுகா. கல்லூட்டுந்தின்னையிலேகத பழகப்போனதாகா" என்று இன்று கூடப் பாடும் கிராமியப்பாடல்களுமாகும்.

எங்களின் முஸ்லிம் சமூகத்தை உயர்ந்த நிலையில் ஆக்கிய தமிழை மறக்க முடியுமா? முடியவே முடியாது. தாயை மறந்தால் தான் தமிழை மறக்க முடியும். எனவே எங்கள் போதனு மொழி இனிய தமிழே' என்று கல்முனை இஸ்லாமிய முன்னேற்றச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்துக்குத் தலைமை தாங்கிய அதன் தலைவர் ஜனுப் ஏ. எம். காசிம் பேசுகையில் கூறினுர்.

முஸ்லிம் லீக்கின் கல்வி மகாநாட்டுக்கு முஸ்லிம்களின் போதனு மொழி தமிழ் என்று அறிக்கை அனுப்பப்படல் வேண்டுமென்று ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. நடப்பு வருடத் தலைவராக ஜனுப் ஏ. எம். காசிமும் [illegible]ளராக ஜனுப் எ[illegible] பாவாவும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

### மயிலங்கூடல் சைவ மகாசபை ஆண்டு விழா

மயிலங்கூடல் ஞானவயிரவர் கோயில் மண்டபத்தில் 27-3-54-ல் நடைபெற்ற மயிலங்கூடற் சைவ மகாசபையின் ஆண்டு விழாவின் போது, தேவார திருவாசக மனனப் போட்டியில் பங்கு பற்றி வெற்றியீட்டியவர்களுக்குப்பரிசில்கள் வழங்கப்பட்ட பின், நடப்பு வருட உத்தியோகத்தர் தேர்வு இடம்பெற்றது. காப்பாளராக திரு. ம. தியாகராசா, தலைவராகத் திரு. சி. அப்புத்துரை, செயலாளராகத் திரு. அ. சச்சிதானந்த மூர்த்தி, பொருளாளராகத் திரு. கா. தங்கராசா ஆகியோரும், ஆட்சிக் குழு உறுப்பினர்களாகத் திருவாளர்கள் க. சுப்பிரமணியம், க. சின்னப்பு, சி. சண்முகசுந்தரம், வ. சிவசுப்பிரமணியம் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

—

### வள்ளுவர் கல்விக் கழகம்

ஞாயிற்றுக்கிழமை 21-3-64 பி. ப. 2 மணிக்கு வள்ளுவர் மன்றத்தினரால் நடத்தப்பட்ட பொதுக் கூட்டத்தில் திரு. இரா. தங்கவேல் அவர்கள் தலைமை வகித்தார்.

அவருடைய தலைமையுரைக்குப் பின், திரு. பீ. கே. வேலுச்சாமி, திரு. போல் அந்தோனி, ஆசிரியர் திரு. மூ. மாரியப்பா, திரு. கே. என். வேலு ஆகியோர் பேசினர்.

### முஸ்லிம் எழுத்தாளர் சங்கம் கருத்து

'முஸ்லிம் சிறுர்களின் போதனு மொழி பற்றிய தீர்க்கமான முடிவுக்கு வர வேண்டிய சாலகட்டம் நம்மை அண்மிவிட்ட இவ் வேளையில் முஸ்லிம் இயக்கங்கள் பல இவ் விஷயத்தில் முழுக் கவனமும் மேற்கொண்டிருப்பது மிக அவசியமானதே.

இந்த வகையில் இலங்கை முழுவதிலும் பரவலாக அடிப்படையில் மாநாடுகள் கூட்டி நன்மை தீமைகளை அலசி ஆராய்ந்து கருத்துக்கள் சேகரிக்கும் முயற்சியில் இயக்கங்கள் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் இச்சமயத்தில் தனிப்பட்ட நபர்களை பத்திரிகை வாயிலாகவும், துண்டுப் பிரசுரங்கள் மூலமாகவும் தங்களுக்குள்ள ஆர்வத்தைத் தெரிவிப்பது மகிழ்ச்சிக்குரியதுதான். எனினும் அவர்கள் ஆழ்ந்த முடிவுக்குப் பின்தான் இது பற்றிய தனிப்பட்ட கருத்துக்களை வெளியிடுதல்சாலச் சிறந்தது. எப்படியும் எல்லா வகையிலும், இயக்கங்களும் ஸ்தாபனங்களும், கருத்தரங்கங்களும், மாநாடுகளுமே இப்பிரச்சினையைத் தீர்க்கும் வழிமுறையாகும். ஆகவே தனிப்பட்ட நபர்கள் எல்லா இயக்கங்களோடும் ஒத்துழைத்து வேண்டுவன செய்வதே விரும்பத்தக்கது'.

இவ்வாறு முஸ்லிம் எழுத்தாளர் சங்க இணைச் செயலாளர் ஜனுப் எம். எம். மக்கீன் பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கையொன்றில் சுட்டிக் காட்டுகிருர்.

—

### இலங்கையில் அமெரிக்க விஞ்ஞான அரங்கம்

அமெரிக்க விஞ்ஞான திரைப்பட கழகத்தினரும், அமெரிக்க தகவல் இலாகாவும் இலங்கையில் விஞ்ஞான அரங்கமொன்றை நடாத்த பூர்வாங்க ஏற்பாடுகள் செய்துள்ளனர். இவ்வரங்கம்இம் மாதம் 27-ம் திகதி முதல் மே மாதம் 8-ம் திகதிவரை நடைபெறும்.

இலங்கையில் விஞ்ஞானக் கல்வியைவளர்ச்சியுறச்செய்வதற்காக அமெரிக்க தகவல் இலாகா மேற்கொண்டுள்ள இப் பணியில் கல்வி இலாகாவும், இலங்கை விஞ்ஞான முன்னேற்றக் கழகமும் ஒத்துழைக்கின்றன.

கொழும்பு, யாழ்ப்பாணம், கண்டி ஆகிய இடங்களில் நடைபெறும் இவ்விஞ்ஞான அரங்கில் ஆராய்ச்சியாளர், ஆசிரியர், மாணவர், பாமர மக்களுக்கு அறிவூட்டும் பல திரைப்படக் காட்சிகளும் இடம்பெறும்.

கொழும்பு ருேயல்கல்லூரியில் இம்மாதம் 27-ம் திகதி ஆரம்பிக்கும் இவ்வரங்கம் தொடர்ந்து மூன்று நாட்களுக்கு நடபெறும்.

நாள்தோறும் இவ்வரங்கில் பாடசாலை மாணவர்களுக்கென பொது விஞ்ஞானக் காட்சியும், ஆசிரியர்கள், பயிற்சி பெறும் ஆசிரியர்களுக்கென விஞ்ஞான கல்விப் பிரிவும், பல்கலைக் கழக மாணவர்கள் உட்பட பல்வேறு விஞ்ஞான பீடங்களுக் [illegible] பிரிவும் [illegible]ளர், விஞ்ஞானி[illegible]க்கென மற்ளுரு பிரி[illegible] இடம்பெறும்.

பிரஸ்தாபஅரங்கம்யாழ்ப்பாணத்தில் மே மாதம் 4-ம், 5-ம் திகதிகளிலும், கண்டியில் 7-ம், 8-ம் திகதிகளிலும் நடைபெறும்.

இவ் விஞ்ஞான அரங்கம் கடந்த வருடத்தில் இந்தியாவில் புதுடில்லி, மதராஸ், மதுரை, கல்கத்தா ஆகிய இடங்களில் நடைபெற்றது.

—

### புனிதவளன் விளையாட்டுக் கழக ஆண்டு விழா

யாழ்ப்பாணம் புனிதவளன் விளையாட்டுக் கழகத்தின் 16-வது ஆண்டு விழாவும் அதன் கழக தினமும் 29-3-64 மாலை 5-30 மணியளவில் குருநகர் சென். ஜேம்ஸ் பெண் பாடசாலை மண்டபத்தில் மிகக் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. பிரதம விருந்தினராக அழைக்கப்பட்டிருந்த யாழ். உதவி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி திரு. கே. சிவப்பிரகாசம் அவர்கள் கழகக் கொடியை ஏற்றி வைத்து விழாவை ஆரம்பித்து வைத்தார்.

### எட்டியாந்தோட்டையில் வீரமாமுனிவர் விழா

புனித கபிரியேல் கல்லூரி, எட்டியாந்தோட்டையில் செவ்வாய்க்கிழமை2-4-64ல் மாணவ முத்தமிழ் மன்றத்தினரால் வீரமாமுனிவர் விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. செல்வன் கே. ஜி. சிவகுருநாதன் தமிழ்வாழ்த்துப் பாட, கல்லூரியின் அதிபர் திரு. பிரிம. ரொட்ரிகோ, குத்துவிளக் கேற்றிவைத்து, விழாவைத் தொடக்கிவைத்தார். திரு. கந்தசாமி அவர்கள் தலைமை தாங்கினுர்.

இதைத் தொடர்ந்து தமிழ்ப்பகுதிப் பொறுப்பாசிரியர் திரு. ஏ. பி. வி. கோமஸ் அவர்கள மன்றத்தின் ஆண்டு வெளியீடான 'இலக்கியச்சோலை' வெளியீட்டு விழாவை நடத்தி வைத்தார். அதிபர் முதற் பிரதியை வாங்கினுர். பின், மன்றத்தின் அங்கத்தவர்களில்பரிசுபெற்றவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

மன்ற அங்கத்தவர்கள் செல்வன் சீ. கே. முருகேசு, செல்வி. சந்திரா சாவித்திரி நாயர், செல்வன். சுகானந்த ராஜா, செல்வி. கா. புவனேஸ்வரி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

தொடர்ந்து மன்ற இயக்குநர் திரு. ஏ. பி. வி கோமஸ் அவர்கள்கம்பனுக்கும் விழா நாயகருக்கும் இடையில் கதை, நோக்கம், வைப்பு முறை, பாடல்கள், யாப்பு போன்றவற்றில் காணப்பட்ட ஒற்றுமைகளை விளக்கி 'இத்தாலியிலும் ஒரு கம்பன் பிறந்தான்' என்று கூறினுர்.

அடுத்து சிறப்புச்சொற்பொழிவாளராகக் கலந்து கொண்ட மலையக எழுத்தாளர் பூசி. முருகையா அவர்கள் தேம்பாவணி பாடல்களுக்கும் ஏனைய தமிழ்இலக்கியங்களில் காணப்படும் பாடல்களுக்குமிடையில் காணப்பட்ட ஒற்றுமைகளை நன்முறையில் விளக்கினுர்.

தலைவரின் முடிவுரையுடனும், மன்றச் செயலாளர் செல்வன். எஸ். திருமேனியின் நன்றி நவிலலுடனும் விழா சிறப்புடன் முடிவுற்றது.

## எது வேண்டும் சொல்....

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

பாக்கட்டி'லிருந்து வெளியே எடுத்தார்.

பணத்தையும் பார்த்தான்.....

தனது நிலைமையையும் சிந்தித்தான்...

"உணவா-உரிமையா, சுயநலமா-பொதுநலமா,- மானமா-சோரு? எது வேண்டும்?"

அவன் மனதில் போராட்டம் தொடங்கியது......

தம்பியையா பேச்சை ஆரம்பித்தார்......

"..................."

"தயவுசெய்து என்னை மன்னித்துக் கொள்ளுங்களையா. எனது வாக்குரிமையை நான் விற்க மாட்டேன். அது விலை மதிக்க வொண்ணுதது..."

—தம்பியையாவிடம் சடாரெனச் சொல்லிவிட்டு விர்ரென்று எழுந்து வீடுநோக்கிச் சென்ருன் கந்தசாமி.

போகும் வழியிலே தெருவில் பத்து ரூபா நோட்டொன்று நானகாக மடிக்கப்பட்ட நிலையில் கிடந்தது.

அது யாருக்குஞ் சொந்தமானதாவென்று கந்தசாமி முறைப்படி ஆராய்ந்து பார்த்தான். யாரும் அந்தக் காசுக்குச் சொந்தம் கொண்டாடவில்லையாதலால், அதையெடுத்து தேவைக்குரிய உணவுப் பொருட்களை வாங்கிக் கொண்டு போனுன் கந்தசாமி.

வள்ளி நொடிப்பொழுதில் சமைத்து கணவனுக்கும் குழந்தைகளுக்கும் பரிமாறினுள்.

மறுநாள்—

கந்தசாமி வள்ளி இருவரின் வாக்குகளால் தம்பியையா தோல்வியுற்ருர்.

அரசியலில் மந்திக்கட்சிக் கொள்கையும் விலாங்குப் போக்கும் பச்சோந்தி உறுதியும் உள்ளவரான பேரம்பலம் வெற்றியடைந்த பொழுதிலும் அங்கத்தவர் பதவியை இராஜிநாமாச் செய்து விட்டார்.

முதலைபிடித்தகுளம் கிராம சபையின் வரலாற்றிலே பொற்காலம் ஆரம்பமாகியது.

லோகேஸ்வரன் குழுவினர் கந்தசாமியின் கஷ்ட நிலையையுணர்ந்து அவனும் வள்ளியும் உழைத்து உண்ணக் கூடிய நிலையடையும் வரையுமுள்ள செலவுக்கு ஒரு சிறிய நிதி திரட்டிக் கொடுத்து உதவினுர்கள். முதனுள் தெருவிற் கிடந்த பத்து ரூபாவையும் தாங்கள் தான் போட்டதென்று, நேர்முகமாகக் கொடுத்தால் அது இலஞ்சம் ஆகக்கூடுமென்றுதான் அந்த முறையைக் கையாண்டதாகவும் உண்மையைக் கூறினுர்கள்.

(யாவும் கற்பனை)

## எண்ணத்தில்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

அச்சிந்தனைகளின் கர்த்தாவுக்குச் சிலையமைத்து அவன் பெருமையைப் பறைசாற்றுகின்றனர்.

### எண்ணங்களை எழுதுகிறேன்

உதாரணமாகக் கலிலியோவைச் சொல்லலாம். சிந்திக்கத் தெரிந்த காரணத்தால் உயிர் வாழ்ந்த காலத்தில் மததூஷகர் என்றழைக்கப்பட்ட கலிலியோ இன்று மேதையெனப் போற்றப் படுகிருர். இவரைப்போல எத்தனையோ சிந்தனையாளரும் சிருஷ்டி எழுத்தாளரும், கலைஞர்களும் மறைந்த பின்னர்தான் போற்றிப் புகழப்பட்டு அங்கிகரிக்கப்பட்டுள்ளனர்.

அழுத்தந்திருத்தமாக, திட்டவட்டமான எல்லைகளுள், முடிவான வெளிநோக்கோடு இத்தகைய கேள்விக்குப் பதில் கூற முடியாது. கேள்வியைப் பொறுத்தவரை மனதிலெழும் எண்ணங்களைத்தான் எடுத்துக் கூற முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குதூகலமான 2வது வாரம்!

செல்லமஹால் (கொட்டாஞ்சேனை) வின்சர் (யாழ்ப்பாணம்) இம்பீரியல் (மட்டக்களப்பு)

நெல்சன் (திருகோணமலை) அசோகா (புத்தளம்) ரீகல் (கண்டி) தாஜ்மஹால் (மாத்தளை)





எம். ஜி. ராமச்சந்திரன்—பி. சரோஜாதேவி
எம். ஆர். ராதா—வி. கே. ராமசாமி
எம். வி. ராஜம்மா—அசோகன்
ஜெமினி சந்திரா—சின்னப்பாதேவர்

மற்றும் பலர் நடித்த

தேவர் பிலிம்ஸ்

## தர்மம் தலைகாக்கும்



முகமூடி அணிந்த கொலைகாரப் பாதகனைத் தொடர்ந்து துப்பறியும் டாக்டர் செல்கிறார்.
புரட்சி நடிகரின் வீர தீர பராக்கிரமச் செயல்கள் நிறைந்த மயிர்க்கூச்செறியும் அற்புத ஓவியம்!

## 6வது வாரம்!

கெயிட்டி (கொட்டாஞ்சேனை)

எஸ். எஸ். ராஜேந்திரன், தேவிகா, முத்துராமன், புஷ்பலதா, ராமச்சந்திரன், தோன்றும்

## வானம்பாடி

## எதிர்பாருங்கள்

சிவாஜி கணேசன், எஸ். எஸ். ஆர். விஜயகுமாரி ஆகியோர் நடித்த

## குங்குமம்

## பக்திப் பரவசமூட்டும் 2வது வாரம்!

சென்ட்ரல் [மருதானை] ராஜேஸ்வரா [மட்டக்களப்பு]

ராணி [யாழ்ப்பாணம்] ஜோதி [திருகோணமலை]

பத்மினி—ராகினி—அம்பிகா—திக்குறிசி சுகுமாரன் நாயர்
மற்றும் பலர் நடித்த

பக்ஷிராஜாவின்

## சபரிமலை ஸ்ரீ ஐயப்பன்

(முழு நீள வர்ணப் படம்)

டைரக்ஷன்:
எஸ். எம். ஸ்ரீராமுலு நாயுடு



வேண்டுவோர்க்கு வேண்டும் வரம் அருளும் மெஞ்ஞான தெய்வமான ஸ்ரீ ஐயப்பனின் புராண வரலாறு.
பயங்கரக் காட்சிகளும், வீரதீரச் செயல்களும் அற்புதமாகச் சித்தரிக்கப்பட்டுள்ள உயர்ந்த படம்!

## ஜனத் திரள் மிகுந்த 4வது வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீ கிருஷ்ணு (திருகோணமலை)

மொடர்ன் (பண்டாரவளை) விஜிதா (ஹட்டன்) விஜேந்திரா (அநுராதபுரம்)



எம். ஜி. ஆர். சரோஜா தேவி எம்.ஆர்.ராதா நடித்த

## பெரிய இடத்துப் பெண்



## மகத்தான 2வது வாரம்!

மைலன் (கொழும்பு) நவா (கொம்பனித் தெரு)

சென்ட்ரல் (மாத்தளை) சரசாவி (அக்கரப்பத்தன) ஜோதி (கலஹா)

சந்தியா (கம்பளை) விஜிதா (மஸ்கெலியா)



எஸ்.எஸ்.ஆர். விஜய குமாரி ராதா புஷ்பலதா நடித்த

## பணம் பந்தியிலே




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஆதினத்தாரால் கொழும்பு, பண்டாரநாயக்க வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1964-ம் வருடம் ஏப்ரல் மாதம் 19ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.